விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 319 புரட்டாதி 25ஆம் நாள் வியாழக்கிழமை 11 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

### நள்ளிரவில் மீண்டும் ஏறியது எரிபொருள் விலை

யாழ்ப்பாணம், ஓக் 11
எரிபொருள்களின் விலைகள் நள்ளிரவு முதல் மீண்டும் அதிகரிக்கப்பட்டன. புதிய விலைச் சூத்திரத்திரத்துக்கு அமைய >> 25

## வடக்கு பாடசாலைகளுக்குரிய ரூ. 87.5 மில். கைநழுவிப் போனது

### மாகாண சபையின் பிடிவாதமே காரணம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 11
வடக்கு மாகாணத்திலுள்ள 7 பாடசாலைகளுக்கு தேசிய நல்லிணக்க அரச கருமமொழிகள் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி கைநழுவியுள்ளது. கொழும்பு அரசின் அபி விருத்தித் திட்டங்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபை கடைப்பிடித்த அணுகு முறையே இந்த அவலத்துக்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. >> 25




### வடக்கு மாகாண விவசாய கண்காட்சி வவுனியாவில் நேற்று ஆரம்பமாகியது

வவுனியா, ஒக். 11
'காலத்தின் சவாலுடன் உணவுஉற்பத்தியை நோக்கியதாக' எனும் தொனிப் பொருளில்வடமாகாணவிவசாயக் கண்காட்சி வவுனியா முருகனூரில் அமைந்துள்ள மாவட்ட >> 25

## காணி விடுவிப்பு தொடர்பில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 11
யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் எதிர்வரும் 16ஆம் திகதி முக்கிய கூட்டம் இடம்பெறவுள்ளது. >> 25

## கிழக்கிலும் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமிப்பு

திருகோணமலை, ஒக். 11
திருகோணமலை மாவட்டம் குச்சவெளிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சித்தி விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமான காணியை தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமிக்க >> 22

### இழப்பீடுகளுக்கான பணியகச் சட்டம் நாடாளுமன்றில் நேற்று நிறைவேறியது

கொழும்பு, ஒக். 11
இழப்பீடுகளுக்கான பணியகத்தை நிறுவும் சட்டம் நாடாளுமன்றத்தில் 16 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள் >> 25



### முதல் பெண் மாவீரர் மாலதியின் நினைவுநாள் நேற்றுக் கடைப்பிடிப்பு

அம்பாறை, ஒக். 11
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதற் பெண் மாவீரர் மாலதியின் 31ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. தாயகத்தின் பல்வேறு பிரதேசங்களிலும், தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களிலும் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. >> 21

## தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்

### சம்பந்தன் இடித்துரைப்பு

கொழும்பு, ஒக். 11
குற்றம் புரிந்தவராக இருக்கலாம் அல்லது சந்தேகத்தில் சிறையில் இருபவர்களாக இருக்கலாம். ஆனால் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார். இழப்பீடுகளுக் >> 23

## அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்ந்தும் பேச்சு நடத்துவோம்

### கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஒக். 11
தற்போது சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளில் பலர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த அரசியல் கைதிகள் விடயத்தில் நீதி அமைச்சரே கவனம் செலுத்தவேண்டும். தமிழ் கைதிகளின் விடுதலை தொடர்பாக >> 25

## ஐ.நா. தீர்மானத்தில் பலதை அரசுநிறைவேற்றியுள்ளதாம்

### பன்னாட்டுச் சமூகம் தம் பக்கம் என்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர்

கொழும்பு, ஒக். 11
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பெரும்பாலானவற்றை அரசு நிறைவேற்றியுள்ளது. பன்னாட்டுச் சமூகத்திடமிருந்து எந்த அழுத்தமும் எமக்கில்லை. அடுத்த ஆண்டு >> 23

### மின்சாரம் தாக்கி பொலிஸ் மோப்பநாய் வவுனியாவில் சாவு

வவுனியா, ஒக். 11
வவுனியாப் பொலிஸ் நிலைய மோப்ப நாயான கூப்பர் நேற்றுக் காலை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது. நாயை அழைத்துச் சென்ற பொலிஸ் >> 21

3ஆவது நாளாக யாழ். பல்கலை மாணவர்கள்

### அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தி இன்றும் நடைபவனி



>> 24

## அரசைக் கவிழ்ப்போம்! எப்போது, எப்படி என்று இப்போது சொல்ல முடியாது

### கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

>> 25

## அரசியல் கைதிகளின் விடுவிப்புக்கு நிதி அறிக்கையை ஆயுதமாக்குங்கள்

### சிறைக்கைதிகளிடம் பேசியபின் ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11
வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னதாக எங்களை விடுதலை செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நாங்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் கூட்டமைப்பு >> 22




Member of David Peiris
0114 700 100
எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
இல. 120-120A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்: info@assetline.lk
எசட்லைன்

# ஆண்டுதோறும் 2, 500 பெண்கள் மார்பகப் புற்று நோயால் பாதிப்பு

## சுகாதாரப் பிரதி அமைச்சர் பைசல் காசீம் தகவல்

கொழும்பு, ஒக். 11

ஒவ்வொரு ஆண்டும் 2 ஆயிரத்து பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். ஆரம்பக்கட்டத்திலேயே பரிசோதித்துப்பார்த்தால் இந்த நோயை முற்றாகக் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசீம் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் மாதத்தை மார்பகப் புற்று நோய் விழிப்புணர்வு மாதமாக அறிவித்து உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். கொழும்பில் உள்ள அரசதகவல் திணைக்களத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக நாம் ஒக்டோபர் மாதத்தை அறிவித்திருக்கின்றோம். இது தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்தாததால் இந்த நோய் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆண்டுதோறும் சுமார் 2 ஆயிரத்து 500 பெண்கள் மார்பகப்புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இதைக் கட்டுப்படுத்துவதற்காக நாம் எமது வைத்தியசாலைகளில் வேலைகளை முன்னெடுத்துச் செல்கின்றோம். ஆனால், அந்த நோய் மூன்றாம் கட்டத்தை அடைகின்றபோதுதான் நோயாளர்கள் மருத்துவமனையை நாடுகின்றனர்.

ஆரம்பத்திலேயே விரைந்தால் இந்த நோயைக் குணப்படுத்த முடியும். கடந்த அரசில் ஒரு புற்று நோயாளிக்கு 15 லட்சம் ரூபாவுக்கு மேல் மருந்துகள் வழங்கப்பட்டதில்லை. ஆனால், எமது அரசு அந்தத் தொகையை அதிகரித்துள்ளது. உண்மையில் ஆரம்பக்கட்டத்தில் மருத்துவமனையை அணுகினால் நோயையும் கட்டுப்படுத்த முடியும். அரசால் பெரும் தொகையான பணத்தையும் மிச்சப்படுத்த முடியும். இந்த நோயை ஒவ்வொரு மாவட்டத்திலும் கண்டறிவதற்காக இன்ட்ரா பவுண்டேசன் என்ற நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்காக இந்தியா 80 கோடி ரூபாவை வழங்கவுள்ளது. இந்த நிறுவனம் கிராமங்கள் தோறும் சென்று பெண்களை பரிசோதிக்கும். மூன்று ஆண்டுகளுக்கு மாத்திரம் இந்த நிதி வழங்கப்படும்.

அதன் பின்னர் இலங்கை அரசே நிதியைச் செலவிடும். இந்த நோய் தொடர்பில் நாம் அனைவரும் விழிப்புடன் இருந்தால் ஆரம்பத்தில் இதைக் கட்டுப்படுத்துவதோடு பணத்தையும் மீதப்படுத்த முடியும் என்றார். (5)

# லலித்துக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் முதன்மைச் சூத்திரதாரியான சுவிஸ்குமார் தப்பித்துச் செல்ல உதவிய குற்றச்சாட்டுத் தொடர்பில், வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதிக்கு ஊர்காவற்துறை நீதிமன்றம் ஒத்திவைத்தது.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் முதன்மைச் சூத்திரதாரியான சுவிஸ்குமார் தப்பித்துச்சென்றமை தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது. இந்த வழக்கின் சந்தேகநபர்களாக, மாணவி படுகொலை நடைபெற்றபோது வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் எஸ். சிறிகஜன் ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது லலித் ஜயசிங்க மன்றில் முன்னிலையாகினார். சட்டமா அதிபரது ஆலோசனையை விரைவாகப் பெற்றுக்கொள்ளுமாறும், இரண்டாவது சந்தேகநபர் இன்றி வழக்கை நடாத்துவது தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு நீதிவான் கட்டளையிட்டார். (5,26)

# நடுக்கடலில் தத்தளித்த இலங்கை மீனவர்களை காப்பாற்றிய அமெரிக்க நாசகாரி

கொழும்பு, ஒக் 11

நடுக்கடலில் தத்தளித்த இலங்கை மீனவர்கள் 7 பேரை அமெரிக்க போர்க்கப்பல் ஒன்று மீட்டு இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைத்துள்ளது.

அமெரிக்க கடற்படையின், 7 ஆவது கப்பற்படைப் பிரிவின் என்ற நாசகாரி கப்பல், கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு தெற்கே, இந்தியப் பெருங்கடலில் வழக்கமான ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தது. இதன்போது, மீன்பிடிப் படகு ஒன்றில் இருந்த சிறிலங்கா மீனவர்கள் உதவி கோரினர். இதையடுத்து, அமெரிக்க நாசகாரி கப்பலில் இருந்து சிறிய படகு ஒன்று, அந்த மீன்பிடிப்படகை நெருங்கிச்சென்று அவர்களிடம் விசாரித்த போது, தமது படகு செயலிழந்திருப்பதால், கரை திரும்ப முடியாதிருப்பதாகத் தெரிவித்தனர்.

இதையடுத்து, ஏழு மீனவர்களுக்கும், உணவு மற்றும் மருத்துவ உதவிகளை அளித்த அமெரிக்க கடற்படையினர், இலங்கை கடற்படையினருக்கும் தகவல் அனுப்பினர்.

இலங்கை கடற்படையின் 'ஜயசாகர' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல், இலங்கை மீனவர்கள் ஏழு பேரையும், அவர்களின் படகுகளையும் அமெரிக்க கடற்படையினரிடம் இருந்து பொறுப்பேற்று., கரைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை மீனவர்களை காப்பாற்றிய அமெரிக்கக் கடற்படையின் நாசகாரியக் கப்பல் கடந்த சில நாள்களுக்கு முன்னதாக, தென் சீனக் கடலில் சீனக் கடற்படைக் கப்பல் ஒன்றினால் மோதுவது போல நெருங்கி வந்து விரட்டப்பட்டது. இந்தச்சம்பவத்தினால் அமெரிக்கா சீனா இடையில் முறுகல் ஏற்பட்டது.

# திட்ட மிட்ட சிங்கள குடியேற்றங்களைத் தடுக்க தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைய வேண்டும்

## அரச சார்பு அமைச்சர் மனோ அழைப்பு

மகாவலி எல் வலயம் என்ற போர்வையில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை தடுக்க நாட்டில் உள்ள அனைத்து தமிழ்ப் பிரதிநிதிகளும் ஒன்றுபடவேண்டும். என அரச கரும மொழி அமைச்சர் மனோகணேசன் அழைப்புவிடுத்துள்ளார்.

சுண்ணாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் முன்னாள் அதிபர் வி. சிவசுப்பிரமணியம் அவரக்ளின் நினைவு பேருரை நிகழ்வு அதிபர் மு. செல்வஸ்தான் தலைமயில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது,

மகாவலி எல் வலயம் என்ற போர்வையில் அடாத்தாக சிங்களக் குடியேற்றம் இடம்பெறுகிறது. வன இலாகாவினருடன் தொல்லியல்த் திணைக்களத்தினரும் மிக வேகமாகப் பெரும்பான்மையினரின் குடிப்பரம்பலைத் திணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். வடக்கு ஆளுநர் தலைமையிலும் கிழக்கு ஆளுநர் தலைமையிலும் வடக்குகிழக்கு நாடாளுமனற உறுப்பினர்களையும் துறைக்குப் பொருத்தமான அமைச்சர்களையும் இணைத்துக் கலந்துரையாடித் தீர்வு காணுமாறு அரசதலைவர் பணித்துள்ளார். இந்தப் பட்டியலில் தொல்லியல்த் திணைக்களத்தினரையும் இணைத்துக்கொள்ளுமாறு நான் அரச தலைவரிடம் வலியுறுத்தினேன். அதனை அவர் ஏற்றுக்கொண்டு அதற்கு உடன்பட்டார்.

அடாத்தாக குடியேற்றும் இந்தத் திட்டமிட்ட காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டிய கட்டாயம் வடக்கிழக்குத் தலைமைகளுக்கு உண்டு. அவர்களுடன் இணைந்து அரசகரும மொழிகள் மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சராகிய நானும் சேர்ந்து போராடத் தயாராக இருக்கிறேன். இந்த பேரினவாதச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த நாம் ஒற்றுமைப்படவேண்டும் வடக்குகிழக்கு மட்டுமன்றி கொழும்புமலையகம் என அன்னைத்துத் தமிழ்ப்பிரதிநிதிகளும் ஒன்றுபடவேண்டும்.

கடந்த காலங்களில் நான் இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேரினவாதக் கட்சிகளில் உள்ள தமிழ் நாடாளுமனற உறுப்பினர்களுடனும் பேசி



# மைத்திரியுடன் இணைந்தால் வெளியேறுவேன்

## குமாரவெல்கம எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

இடைக்கால அரசை நீங்கள் மைத்திரியுடன் இணைந்து இப்போது உருவாக்கினால் நான் எதிர்க்கட்சியில் சென்று அமர்வேன். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம, மகிந்த ராஜபக்சவிடம் தெரிவித்துள்ளார்.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம், ஜி.எல். பீரிஸின் தலைமையில் அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனவுடன் இணைந்து இடைக்கால அரசை நிறுவுவது பொருத்தமான செயற்பாடில்லை என்று, இந்தக் கூட்டத்தில் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை மகிந்த ராஜபக்சவிடம் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'எங்களுக்கு இரண்டு தலைவர் கிடையாது. ஒருவர்தான். ஒரு உறையில் ஒரு வாள் தான் இருக்கலாம். அந்தத் தலைவர் நீங்கள்தான்' என்று ஜனக்கபண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (5)



# நாடாளுமன்ற அமர்வுக்கு தலைக்கவசம் இன்றி பயணித்த அமைச்சர்!

கொழும்பு, ஒக் 11

வீதியில் ஏற்பட்ட கடும் வாகன நெரிசல் காரணமாக கல்வி அமைச்சர் அகிலாவிராஜ் காரியவசம் நாடாளுமன்றுக்கு வீதியால் சென்ற உந்துருளியை மறித்து தலைகவசம் இன்றி ஏறிச்சென்றுள்ளார். அரச ஓய்வவூதியம் பெறும் நபர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பத்தரமுல்ல பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இந்தப் போராட்டம் காரணமாக நாடாளுமன்றுக்குச் செல்லும் முதன்மை வீதி தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்நிலையில் நாடாளுமன்ற அமர்வுக்கு செல்ல அமைச்சர் அகிலாவிராஜ் காரியவசம் வீதியில் நீண்ட நேரம் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இருப்பினும் வீதியால் சென்ற உந்துருளியில் ஏறி அவர் நாடாளுமன்றுக்குச் சென்றிருந்தார்.

அமைச்சராக இருந்தும் அவர் உந்துருளியில் தலைக்கவசம் இன்றி பயணம் செய்தமையானது சமூக ஊடகங்களில் விமர்சனம் எழக் கா்ரணமாக அமைந்துள்ளது.

# மூதாட் டியின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் ஓக் 11

வீட்டில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கைதடி பொது நூலகத்திற்கு அண்மையிலுள்ள வீடொன்றில் நேற்று காலை பத்து மணியளவில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த மணியம் இலட்சுமி (வயது 80) என்பவரே மீட்கப்பட்டுள்ளார். கடந்த மூன்று நாட்களாக மூதாட்டி வீட்டிற்கு வெளியே வரவில்லை னவும் நேற்று வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக வீட்டிற்கு அருகே வசிப்பவர்கள் தெரிவித்த நிலையில் உள்ளே சென்று பார்த்த போது மூதாட்டி இறந்து கிடப்பதனை அவதானித்தனர்.

உடனடியாக சாவகச்சேரி பொலிசாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து அங்கு வந்த பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தையும் மரண பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (8288)

## சுதந்திரக் கட்சியில் உள்ளவர்கள்

# மகிந்த அணியுடன் இணைவதைவிட ஐ.தே.க.வுடன் இணையவே விருப்பம்

### அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு ,ஒக் .11

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைவதை விடவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கே சுதந்திரக் கட்சியில் உள்ள அதிகளவான உறுப்பினர்கள் விரும்புகின்றனர்.

ஆகவே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்திப்புக்குச் சென்றிருப்பாரா என்று சிந்திக்கத்தோன்றுகின்றது என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துவெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

மக்கள் ஆணைவழங்கிய அரசு ஒன்று ஆட்சியில் உள்ளது. அவர்களுக்கான பணிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே இதனை விட மக்களின் ஆணையைக் கொண்டுசெல்வதற்கு புதிதாக ஒரு அணியினர் அவசியமில்லை.

சுதந்திரக்கட்சியில் உள்ள உறுப்பினர்களில் அதிகளவானவர்கள் மொட்டுத் தரப்பினருடன் இணைவதை விடவும் ,ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயாராகவே உள்ளனர். ஆகவே அந்த நிலைப்பாட்டினை நன்கறிந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன , முன்னாள் அரச தலைவர் தரப்பினருடன் கலந்துரையாடலுக்கு சென்றிருப்பார் என்று கூறுவது சந்தேகத்துடன் சிந்திக்க வேண்டியதாகவே இருக்கின்றது.

எது எவ்வாறாயினும் சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகினாலும், அடுத்த இரண்டு வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை கொண்டு செல்வதற்கு தயாராகவே உள்ளது. அதன் பின்னர் தேர்தலுக்கு முகங்கொடுக்கவும் தயாராகிவருகின்றது என்றார். (61)

## முகவரி கேட்ட இருவர் சங்கிலியை அறுத்தனர்

தென்மராட்சி ஒக். 11

கிராம அலுவலரை சந்திக்க நடந்து சென்ற பெண்ணிடம் உந்துருளியில் வந்து முகவரி கேட்ட இருவர் பெண் அணிந்திருந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்ததுடன், அவர் அணிந்திருந்த தோட்டினை இழுத்து அறுத்து கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். காயமடைந்த பெண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் கடந்த எட்டாம் திகதி வரணி குடமியனில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த பெண் நடந்து வந்த போது, அங்குள்ள ஊரிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உந்துருளியில் வந்த இருவர் முகவரி ஒன்றை கூறி விசாரித்தனர் எனவும், அவர்கள் கொடுத்த துண்டில் குறிப்பிட்டிருந்த முகவரியில் உள்ளவரைத் தெரியாது என்ற போது, கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை ஒருவர் அறுக்க மற்றவர் காதுத் தோட்டினை இழுத்துள்ளார். காது அறுந்து தோடு கீழே வீழ்ந்ததால் அதனைக் கைவிட்டுச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் டுறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (9-159)

## வேலையற்ற பட்டதாரிகளை இன்று ஒன்றுகூட அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் இன்று கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர். அடுத்தகட்ட நடவடிக்கைக்காக அவர்களது பதிவுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தனர்.


தமக்கான அரச நியமனங்களை விரைந்து பெற வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பதிவு செய்தலானது இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை வரை முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 2 மணி வரை இடம்பெறும்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் முன்பாக பதிவு செய்தல் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட செயலகத்தின் முன்பாக யாழ்ப்பாண மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு மட்டும் பதிவு நடைபெறவுள்ளது. பிற வடக்கின் ஏனைய மாவட்டங்களின் வேலையற்ற பட்டதாரிகளின் பதிவுகள் அந்தந்த மாவட்ட பிரதிநிதிகளூடாக நடைபெறும்.

பதிவுக்கு வரும்போது ஒவ்வொருவரும் தத்தமது பட்டச் சான்றிதழ் பிரதியைக் கொண்டுவாருங்கள் என்று வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினர் கேட்டுள்ளனர். (4)

## இனம் தெரியாதவர்களால் சிற்றூர்திகள் மீது தாக்குதல்



கிளிநொச்சி.ஒக் .11

கிளிநொச்சியில் நேற்றும், நேற்று முன்தினமும் , பரந்தன் முறிகண்டி சிற்றூர்திகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுள்ளன.

குறித்த தாக்குதல்கள் ஏ9 பிரதான வீதியில் பகல் வேளைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உந்துருளிகளில் முகத்தை மறைத்தவாறு தலைக்கவசம் அணிந்து கொண்டு வரும் தரப்பினர்கள் தாக்குதல்களை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுவிடுகின்றனர். என சிற்றூர்தி உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வாறான தாக்குதல்களில் சிற்றூர்திகளின் கண்ணாடிகளே உடைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட பேருந்து உரிமையாளர் சங்கத்தின் கூட்டத்தில் பேருந்து உரிமையாளர்களுக்கும், சிற்றூர்தி உரிமையாளர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது என்றும் அதன் விளைவாகவே இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனவும் சிற்றூர்தி உரிமையாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாரிடம் விளக்கமறிய தொடர்புகொண்டபோது ,இதற்குப் பதிலளிக்க உரியவர்கள் இல்லை என தெரிவிக்கப்பட்டது. (214)

## காஞ்சிரங்குடா படுகொலையின்

### 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு




திருக்கோவில்.ஒக் .11


திருக்கோவில் காஞ்சிரங்குடா மாணவர்கள் படுகொலையின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் 13 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் நேற்று முன்தினம் திருக்கோவில் 2 சுப்பர் ஸ்டார் மைதானத்துக்கு முன்பாக அமைந்துள்ள நினைவுத்தூபியில் நடைபெற்றது .

இந்த நிகழ்வு அம்பாறை மாவட்டத்தின் மக்கள் நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

2005 ஆம் ஆண்டு கௌசல்யன் உட்படவர்களுடன் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அரியநாயகம் சந்திரநேருவின் கல்லறைக்கு அவரது மனைவி திருமதி சந்திரநேருவால் விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் 2002 ஆம் ஆண்டு காஞ்சிரங்குடா பகுதியில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் படுகொலை செய்யப்பட்ட 7 பாடசாலை மாணவர்களது நினைவுத் தூபிக்கு அவர்களது பெற்றோர்களால் விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த படுகொலை தொடர்பான நினைவு நிகழ்வில் கருத்துக்கூறிய பொதுமகன் ஒருவர் 2002 ஆம். ஆண்டு திருக்கோவில் பகுதி மக்களினால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்கள் காஞ்சிரங்குடா சிறப்பு அதிரடிப்படையினரின் காவல் நிலையம் வரை சென்றிருந்தனர். அந்த சந்தர்ப்பத்தில் எதிர்ப்பு நடவடிக்கையினை கட்டுப்படுத்துவதற்காக படையினர் சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் நடத்தினர் அதில் கலந்து கொண்டிருந்த மாணவர்கள் 7 பேர் கொல்லப்பட்டனர். இன்றுவரை அதற்கான நீதி கிடைக்கவில்லை என இரங்கல் உரையின் போது சம்பவத்தை நேரில் கண்ட பொதுமகன் ஒருவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

## பனை அபிவிருத்திச் சபையின் பனம்பொருள் உற்பத்தி உணவுகள் பழுதடைந்த நிலையில் மீட்டு அழிப்பு



காரைநகர்.ஒக் .11

பனை அபிவிருத்திச் சபையின் காரைநகர் கிளை அலுவலகத்திலிருந்து ,நேற்றைய தினம் ,வண்டு மொய்த்த புழுக்கொடியல் 521 கிலோகிராம், வண்டு மொய்த்த ஒடியல் 2139 கிலோகிராம், பங்கசு தொற்று ஏற்பட்ட பனாட்டு 220 கிலோ கிராம், என்பன பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைப்பற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டு உடனேயே தீ மூட்டி அழிக்கப்பட்டது.






## வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தின் ஆசிரியர், சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 11
வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தின் (வை.எம்.சி.ஏ) ஏற்பாட்டில் பன்னாட்டு ஆசிரியர், சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த 8ஆம் திகதி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றன.
நவாந்துறை கலைவாணி முன்பள்ளி, அரியாலை சென். யூதா முன்பள்ளி, பூம்புகார் சண்முகா முன்பள்ளி, அறிவொளி முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் நிகழ்வில் மதிப்புறுத்தப்பட்டனர். மாணவர்கள், ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம)

## சாரண ஆசிரியர்களுக்கான பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 11
சாரண ஆசிரியர், குருளைச் சாரண ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி நாளை நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளை முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை மூன்று தினங்கள் இந்தப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது. (ம)

# அதிவேகத் தபால் சேவைகள் சிறப்புற நடக்கின்றன யாழில்

## தலைமைத் தபாலக வட்டாரம் தகவல்

**யாழ்ப்பாணம், ஒக்.11**
**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட அதிவேகத் தபால் சேவை தற்போது முன்னேற்றகரமாக நடைபெற்று வருகின்றது என்று யாழ்ப்பாணத், தலைமைத் தபாலக வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வந்துள்ளன.**

தபால்த்தொலைத்தொடர்புகள் அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி இந்த அதிவேகத் தபால் சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
இந்த மோட்டார்சைக்கிள்களைப் பயன்படுத்தி அதிவேக தபால் சேவைகள் தற்போது வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது இடம்பெற்றுவரும் இந்தச் சேவையை பரவலாக்கம் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தலைமைத் தபாலக வட்டாரத்தில் இருந்து மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது நிதியொதுக்கீட்டின் கீழ், யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத் தோட்டக் காணிக்கான சுற்றுமதிலை அமைத்ததுடன் அதை அண்மையில் திறந்தும் வைத்தார். பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதிஅதிபர் இ.இராஜ்கரன், உதவிஅதிபர் பொ.சர்வானந்தன், ஆசிரியர்களான திருமதி த. எழில்வேந்தன், திருமதி க.கணேஸ்வரன், திருமதி சி.யஸ்ரஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம)





பண்டத்தரிப்பு அன்னை வேளாங்கன்னி சனசமூக நிலையத்திற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் ஒதுக்கீட்டில் 70 கதிரைகளும் மாகாணசபை உறுப்பினர் ச.குகதாஸின் ஒதுக்கீட்டில் கற்றல் உபகரணங்களும் கையளிக்கின்ற நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ம)

# கழிவுகள் கொட்டப்படும் இடம் மிகவிரைவில் சீரமைக்கப்படும்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், ஒக். 11
வலிகாமம் மேற்குப்பிரதேசசபையினால் மீள் சுழற்சிக்காக கழிவுகள் கொட்டபடும் இடம் எதிர்வரும் நவம்பர் மாத இறுதிக்குள் சீரமைக்கப்படும் என்று சபையின் தவிசாளர் த.நடனேந்திரன் தெரிவித்தார்.
குறித்த பிரதேச சபையால் கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் இருந்த சுகாதாரச் சீர்கேடு அண்மையில் பேசுபொருளானது. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது
வலிகாமம் மேற்குப்பிரதேசசபையால் மீள் சுழற்சிக்காக கழிவுகள் கொட்டப்படும் அராலிப் பிரதேசத்தில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் காணப்படுவதாகச் சுகாதாரப் பிரிவின் அறிக்கை கிடைத்துள்ளது.
இது தொடர்பில் கடந்த மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற சபையின் மாதாந்த அமர்வில் சபைக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. குப்பைகள் காற்றுக்கு மேல்நோக்கி வெளியே பறக்காத வண்ணம் சுற்றிவர வலைகள் பொருத்துதல் வேண்டும். வாயிற் கதவு எப்போதும் திறந்து காணப்படுகிறது.
குப்பைகள் கொட்டப்படும் நேரத்திலும் தேவையான நேரம் தவிர ஏனைய நேரங்களில் கதவு பூட்டியிருக்க வேண்டும். அப்போது தான் கால்நடைகள் உள்ளே சென்று குப்பைகளைக் கிளறாமலும் அதனை வெளியிடங்களுக்கு இழுத்துசெல்லாமலும் இருக்கும். அத்துடன் பாதுகாப்பு உத்தயோகத்தர் ஒருவரையும் நியமிப்பது தொடர்பில் சபையில் தீர்மானிக்கப்பட்டது.
அதற்கு அமைவாக மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளன. எதிர்வரும் நவம்பர் மாத இறுதிக்குள் குப்பை கொட்டும் இடம் சீரமைக்கப்படும் இதன் மூலம் கழிவுமுகாமைத்துவம் சிறப்பாக இடம்பெறும் என்றார். (ம-7)

## நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 11
சரஸ்வதி உபதேசத் திருக்கோவில் நவராத்திரி தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகளும் வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன.
இந்த வரிசையில் மூன்றாம் நாளான இன்று துர்க்காவழிபாடும், அனைவரது உடல்உள ஆரோக்கியத்துக்கான வழிபாடுகளும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ம)

## உலக உணவு தின விழா

உலக உணவுதின விழாவும் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் நாளை நடைபெறவுள்ளன. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் என். இன்பம் தலைமையில் உரும்பிராய் காளியம்பாள் திருமணமண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண மீன்பிடி மற்றும் விவசாய அமைச்சர் கே.சிவனேசன் கலந்துகொள்கிறார். கிராம அலுவலர் சி.எழிலரசன், கிராம அலுவலர் அன்ரன் தீபராஜ், வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.வி.சுப்பிரமணியம், உரும்பிராய் விவசாயிகள் சம்மேளனத்தைச் சேர்ந்த என். கணேசலிங்கம், மாவட்ட பூந்தளிர் அமைப்பின் தலைவர் இ.தர்மறாகினி, சட்டத்தரணி க.சுபாகர், மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் ஆர்.முரளிதரன், உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவர் க. அருந்தவராசா, உரும்பிராய் இலக்குமி சி.க.வ.கூ.சங்கத்தின் தலைவர் இ.அனுசா ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். (ம)

## நாட்டிய சங்கமம்

யாழ்ப்பாணம், ஒக். 11
பொன்னாலை சந்திர பரத கலாலய 20ஆவது ஆண்டு விழாவும், நவராத்திரி விழாவும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் சுப்பையா உடையார் தெய்வானைப் பிள்ளை திறந்தவெளி அரங்கில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் வ.சிறிகாந்தன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
முதன்மைவிருந்தினர்களாகத் தெல்லிப்பழை துர்க்காதேசி தேவஸ்தானதலைவர் கலாநிதி ஆறுதிருமுகன், சங்கானைப் பிரதேசசெயலர் பொ.பிறேமினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். சிறப்புவிருந்தினர்களாகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி சாந்தினி சிவனேசன் கலந்து கொள்கிறார். மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியின் அதிபர் சி.சிவகுமார், இராமநாதன் நுண்கலைப்பீட விரிவுரையாளர் சி.மகேந்திரன், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஆசிரியர் பூ.ஜெயமலர் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ம)

### தீபாவளியை முன்னிட்டு வியாபாரம் செய்ய

# வெளி வியாபாரிகளை அனுமதிக்க வேண்டாம்

### சாவகச்சேரி வணிகர் மன்றம் கோரிக்கை


**கொடிகாமம், ஒக். 11**

**தீபாவளியை முன்னிட்டு வெளிமாவட்ட வியாபாரிகளைச் சாவகச்சேரியில் வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டாம் என்று சாவகச்சேரி வணிகர் மன்றத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் யாழ்ப்பாணம், சங்கானை, நெல்லியடி ஆகிய இடங்களில் பண்டிகைகளின்போது வெளிமாவட்ட வியாபாரிகள் வியாபாரம் செய்ய பெரியளவில் அனுமதி வழங்கப்படவில்லை. இதைப்போல் இந்த வருடம் சாவகச்சேரி சந்தைப் பகுதிகளில் அவர்களை அனுமதிக்க வேண்டாம். எதிர்வரும் தீபாவளித் தினத்தன்று சாவகச்சேரி வியாபாரிகள் சுதந்திரமான முறையில் வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று வணிகர் மன்றத்தின் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

வணிகர் மன்றத்தினரின் வேண்டுகோளை ஏற்றுக் கருத்து தெரிவித்த நகர சபை உறுப்பினர் ம.நடனதேவன், தீபாவளியை முன்னிட்டு நகர சபை எல்லைக்குள் வெளிமாவட்ட வியாபாரிகளிற்கு அனுமதி வழங்கக்கூடாது. அப்படி அனுமதி வழங்குவதாயின் ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் வழங்க வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்தார். அவரின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் வெளிமாவட்ட வியாபாரிகளுக்கு வியாபாரம் செய்ய இடம் கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

(ம-159)



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தென்மராட்சி அலுவலகம் சாவகச்சேரி நகரின் மத்தியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (ம-159)

# குடாநாட்டில் நவீன வசதியுடன் கள்ளுவிற்பனைநிலையங்கள்

### விரைவில் அமையும் என்கிறார் தெய்வேந்திரம்

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்ப்பாணக்குடாநாட்டில்நவீன வசதிகளுடன் கூடிய கள்ளு விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக்குடாநாட்டில்நவீன வசதிகளுடன்கூடிய கள்ளு விற்பனை நிலையங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. குறிப்பாக சாவகச்சேரிபனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் கொடிகாமம் இராமாவில் பகுதியில் நவீன வசதிகளைக் கொண்டகள்ளுவிற்பனைநிலையம் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதனைவிடக் கைதடிச் சந்தி, நுணாவில் போன்ற பிரதேசங்களிலும் நவீன வசதிகளைக் கொண்ட நிலையங்கள் அமைக்கப்படவும் உள்ளன. குடாநாட்டில் உள்ள சகல கள்ளு விற்பனை நிலையங்களும் படிப்படியாக நவீன வசதிகளுடன் மாற்றியமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

(ம-17)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1952 . 03 . 06

உதிர்வு 2016 . 10 . 03



அமரர் திருநாவுக்கரசு ஆறுமுகநாதன்

திதி -11.10.2018

**ஆண்டு இரண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதை விட்டு நீங்காது !**

அன்னாரின் இரண்டாம் ஆண்டு நினைவுதினம் இன்று (11.10.2018) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அனுவிந்தன் இல்லம்,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.


## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 11

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட உடுவில் பொதுநூலகம் பன்னாட்டுச் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகளை இன்று நடத்தவுள்ளது.

பொதுநூலகர் ம.ஆனந்தராசா தலைமையில், உடுவில் மல்வம் திருக்குடும்ப மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் கருணாகரன் தர்ஷன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## சண்டிலிப்பாய் முதலிடம்

சாவகச்சேரி, ஒக். 11

பன்னாட்டு முதியோர் வாரத்தை யொட்டி யாழ். மாவட்டப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முதியோர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேசப் செயலக அணி முதலிடம் பிடித்தது.

(ம-9)


## மரண அறிவித்தல்

### நாகநாதர் திரவியநாயகம்



அல்லாரையைப் பிறப்பிடமாகவும், பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் திரவியநாயகம் நேற்று (10.10.2018) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஞானசேகரம்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் மனோன்மணியின் அன்புக்கணவரும் நவநீதராசா, சிவசக்தி காலஞ்சென்ற ஞானசக்தி, நகுலன், மங்களசக்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் உதயபவானி, மகிந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் சஜீவன், திருவருள் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இராமச்சந்திரன் மற்றும் தங்கராணி, ஜெகசோதி, ஞானகலை, கணேசலிங்கம், விநாயகமூர்த்தி. வேல்முருகன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்ப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அறுகம்புலம் வீதி,**
**அல்லாரை தெற்கு, மீசாலை.**
**077 187 4410**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 05 . 1937



இறப்பு 07 . 10 . 2018

### திருமதி மகேஸ்வரி சிவஞானசேகரம்

யாழ். தெல்லிப்பழை பன்னாலை களனை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவஞானசேகரம் 07.10.2018 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - தங்கம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற செல்லப்பா- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானசேகரம் (சின்னமணி) அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரராணி, வசந்தராணி ஆகியோரின் பாசமிகு தாயும், பரமேஸ்வரி, சந்திரசேகரம், கைலநாதன் ஆகியோரின் சகோதரியும், சண்முகதாசன், புஸ்பராசா ஆகியோரின் அன்பு மாமியும், திருநாவுக்கரசு, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சஜனி, யாதவன், யசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்முகதாசன்** (கனடா - 01 416 402 5152)
**வசந்தா** (இலங்கை - 077 945 2 803)
**நவநீத கிருஸ்ணன்** (இலங்கை - 077 589 0650)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(c 7956)



## சாஸ்திரி கூழாங்குளத்தில் பன்னாட்டு சிறுவர் தின நிகழ்வு

வவுனியா .ஒக் .11
சாஸ்திரி கூழாங்குளம் ஈஸ்வரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 7 ஆம் திகதி இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் மாகாண சுகாதார சிறுவர் நலத்துறை அமைச்சரும் மாகாணசபை உறுப்பினருமாகிய மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் கலந்துகொண்டதுடன்,
பிரதேச சபையின் வட்டார உறுப்பினர், கிராம அலுவலர், காவல்துறைப் பொறுப்பதிகாரி, விளையாட்டுக்கழக உறுப்பினர்களெனப் பலரும்கலந்துகொண்டனர். (110)



## ஆசிரியர் மதிப்பளிப்பு நிகழ்வு

வவுனியா.ஒக் .11
வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வித்தியாலய மாணவத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செந்தில்குமரன் கலந்து கொண்டார். (422)



துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்களால் மதிப்பளிக்கப்பட்டுள்ளனர் . (422)



## மாணவர்களுடன் கொண்டாடிய பிறந்ததினம்

முல்லைத்தீவு,ஒக் .11
லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபன் தனது 47 ஆவது பிறந்த தினத்தினை கடந்த 8 ஆம் திகதி ,2018 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்திலே சாதனை படைத்து முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட, மாமடு,பழம்பாசி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சாதனை மாணவர்களுடன் கொண்டாடியுள்ளார். இந்த நிகழ்வின் போது போரினால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய பிரதேசத்திலுள்ள பாடசாலையில் சாதனை மாணவர்களை உருவாக்குவதற்கு சிறந்த முறையில் வாழிகாட்டிச் சென்ற அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (222)

செட்டிகுளம் பிரதேசத்தின்

# குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுங்கள்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

வவுனியா,ஒக் .11

**வவுனியா, மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேச செயலர் பிரிவான செட்டிகுளம் பிரதேசத்தின் குறைகளை போக்க மாவட்டச் செயலகம் ஊடாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கைகளை முன்வைத்தனர்.**

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவின், ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த 8 ஆம் திகதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில், இணைத்தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கைகள் கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் மக்கள் சார்பில் முன் வைக்கப்பட்டன.
குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது மக்கள் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகளாக,
முதலியார்குளம் பகுதியில் உள்ள மதுபானசாலையுடன் கூடிய விருந்தினர் விடுதியில் அங்கே சென்று மது அருந்துபவர்கள் தவிர்ந்து வெளியாருக்கும் வழங்கப்படுகின்றது. அத்துடன் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. இத்தோடு பல குற்றச் செயல்களும் இடம்பெறுகின்றது. எனவே இந்த மதுபானசாலையை அங்கிருந்து அகற்றியே ஆகவேண்டும். எனப் பலராலும் விடுத்த கோரிக்கையினையடுத்து குறித்த மதுபானசாலைக்கான 2019 ஆம் ஆண்டிற்கான அனுமதியினை பிரதேசசெயலர் வழங்க கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டது.
இதேபோன்று, செட்டிக்குளத்தில் அதிக கிராமங்கள் காட்டு யானைத் தாக்கத்தின் அச்சத்திலேயே காணப்படுகிறது. இந்தக் கிராமங்களுக்குப் பாதுகாப்பு வேலி அமைக்குமாறு நீண்டகாலமாக விடப்படும் கோரிக்கை, இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. இதேநேரம் ஆண்டின் இறுதிக் காலாண்டுக்குள் நுழைந்தும், இதுவரை மழை கிடையாது.
இதனால் நீர்த் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாகவே உள்ளது போன்றவற்றிற்கான தீர்வை முன்வைக்க வேண்டும் - எனக் கோரிக்கை விடுத்தனர். (105)

சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை குழந்தை மருத்துவ விடுதியில் சிறப்
பாக நடைபெற்றது. குறித்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்ட மருத்துவ
மனை பணியாளர் மருத்துவ கலாநிதி செந்தூர்பதிராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக குழந்தை
மருத்துவ நிபுணர்களான ஜேயபாகம் மற்றும் அமில டீ சில்வா ஆகியோரும் கலந்து கொண்
டனர். நிகழ்வில் பங்கேற்ற சிறார்களுக்குப் பரிசில் போதிகளும் வழங்கப்பட்டன.



## ஊடகத்தார் ஊடக தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும்

### கிளி.கரைச்சி பிரதேச சபையில் தீர்மானம்

கிளிநொச்சி ,ஒக்.11
கரைச்சி பிரதேச சபையின் எட்டாவது அமர்வு கடந்த 8 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது இந்த அமர்வில் சபைக்கு 5 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பெரும்பான்மை பலத்துடன் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.
நீதியான அறம்கூறும் ஊடகச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் - பிரேரணை மீதான விவாதம் சுமார் 2 மணி நேரம் வரை நடைபெற்று நிறைவேறி யது. ஊடகத்தார் ஊடக தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் சபை உறுப்பினர்களும் சிறந்த சொற்பிரயோகங்களையும், சிறந்த முகப்பாவனை, சைகையினை காண்பித்தல், சபை ஒழுங்குகளை கடைப்பிடித்தல் என்பன எதிர்காலத்தில் சிறந்த பயனைத் தரும் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.
வரவேற்பு வளைவு மற்றும் மணிக்கூட்டுக்கோபுரம் என்பவற்றை கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைப் பரப்பில் நிறுவுதல் - ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற்று பிரேரணைநிறைவேறியது. வளைவுகளுக்கு இரணைமடுச்சந்தி, ஆனையிறவு மணிக்கூட்டுக்கோபுரத்துக்கு, டிப்போச்சந்தி இனங்காட்டப்பட்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதோடு ,இதற்கான நிபுணத்துவக் குழு ஒன்றை அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
நகரத்தில் உள்ள மருதமரங்களை பாதுகாத்தல் - விவாதத்தின் பின் நிறைவேற்றப்பட்டது. அனைத்து மரங்களையும் பாதுகாப்போம் எனவும் மரங்கள் மீது விளம்பரங்கள் காட்சிப்படுத்துவதை முற்றாக தடுப்போம் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
பிரமந்தனாறு கிராமத்தில் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் உள்ள குடிதண்ணீர்க் கிணறு மற்றும் நீர்த்தாங்கியை உள்ளடக்கி பாதுகாப்பு வேலி அமைத்தல் - இதனை சபை ஏகமனதாக ஏற்று தீர்மானம் நிறைவேறியது.
அரச சார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்பட்டு தற்போது இயங்காத நிலையில் உள்ள தொழில் பேட்டைகளை மீள இயங்கச் செய்தல் - நீண்ட விவாதங்களின் பின் பிரேரணை நிறைவேறியது. சம்பந்தப்பட்ட திணைக்களங்களோடு தொடர்புகளை மேற்கொள்வதாக கருத்துக்கள் பகிரப்பட்டது. இறுதியாக உபசபைகளின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாலை 5.35 மணிக்கு சபை நிறைவுற்றது. (105,222)

## வவுனியா நகரசபையால் ‘எழு நீ பண்பாட்டு முற்றம்’ கலாசாரசபை உருவாக்கம்

வவுனியா,ஒக் .11
வவுனியாவில் மொழி, கலை, கலாசார, பண்பாட்டு மேம்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்வதற்கான முயற்சியாக, வவுனியா நகரபிதா இராசலிங்கம் கௌதமன் வவுனியா நகரசபைக்குட்பட்டு இயங்கிவரும் மொழி, கலை, கலாசார, பண்பாடு தொடர்பான பதிவுசெய்யப்பட்ட அமைப்புகளைச் சந்தித்து உரையாடியிருந்ததன் பிரகாரம் ,அனைத்து அமைப்புகளையும் ஒன்றாகக் கூட்டி, கடந்த 7 ஆம் திகதி கலாசாரசபை ஒன்று உருவாக்கபட்டுள்ளது. நகரபிதாவை தலைமையாக கொண்ட இக்கலாசார சபைக்கு 'எழு நீ பண்பாட்டு முற்றம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதற்கான ஒரு செயற்பாட்டுக்குழுவும் தெரிவு செய்யப்பட்டதுடன் அதில் தமிழருவி த.சிவகுமாரன், கலாபூசணம்.மேழிக்குமரன், இந்திரன் சஜீந்திரா, கவிஞர். மாணிக்கம் ஜெகன், இரா. இராஜேஸ்வரன், ஏ.ஜே.தனுசன், கலாபூசணம். திருமதி.செந்தில்மதி பரமசிவராஜா, பாலசுப்பிரமணியன் பாலேந்திரன், பூலோகசிங்கம் சர்மிலன், பண்டிதர் வீ.பிரதீபன், தமிழ்ச்சுடர்.ந.பார்த்திபன் ,எஸ்.எ.ஷமட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இக்குழுவின் செயல்தலைவராக தமிழருவி.த.சிவகுமாரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
முன்னதாகவே வவுனியா நகரசபை உறுப்பினர் பரதலிங்கத்தின் தலைமையில் இயங்கும் கலாசாரகுழுவில் நகரசபை உறுப்பினர்களான பா.பிரசன்னா, பா.ஜெயவதனி, தி. செந்தில்றூபன், லக்சனா நாகராஜன், அப்துல்ரசூல் முகமட்லரீப், தர்மதாசா புஞ்சிகுமாரி ஆகியோர் நகரசபையின் கலாசார குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். இக்கலாசாரக்குழுவுடன் எழுநீ பண்பாட்டு முற்றத்தின் செயற்பாட்டுக்குழு கலந்துரையாடியுள்ளதுடன், வவுனியாவில் மொழி, கலை, கலாசார, பண்பாட்டு மேம்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்வது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.
எழுநீ பண்பாட்டு முற்றம் முதற்கட்டமாக பல்துறை சேவையாளர்களுக்கான விருதுவழங்கும் விழா ஒன்றினை நடாத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)



## புதுக்குடியிருப்புப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஒக் .11
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 1 மணிக்கு இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி .சிவமோகன்,ரிஸ்மா ஜமால்டீன் ஆகியோரின் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.
இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத்துவ கலாநிதி சி.சிவமோகன் ,திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, இணைத்தலைவர் ரிஸ்மா ஜமால்டீன், வடமாகாண சபை உறுப்பினர்களான ஆ.புவனேஸ்வரன், து.ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்த் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலர் ,ம பிரதீபன் உள்ளிட்ட திணைக்கள தலைவர்கள் ,அரச அதிகாரிகள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

### உடையார்கட்டுப் பிரதேசத்திலிருந்து

# வெளி மாவட்டங்களுக்கு மணல்கொண்டு செல்லத் தடை

முல்லைத்தீவு ,ஒக் .11
**உடையார்கட்டுப் பிரதேசத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு மணல்கொண்டு செல்வதற்கு, அபிவிருத்திக் குழு தற்காலிகமாகத் தடை விதிப்பதாக அறிவித்துள்ளது.**

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று முன்தினம் பகல் 1 மணிக்கு இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி .சிவமோகன் ரிஸ்மா ஜமால்டீன் ஆகியோரின் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.
இதன்போது வடமாகாண சபை உறுப்பினர் து .ரவிகரனால் உடையார்கட்டு குளக்கட்டினூடாக மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும், இதனை தடுக்குமாறும் கோரப்பட்டது. அதனைவிட வடமாகாண சபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரனால் , குறித்த பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான டிப்பர்களில் மணல் வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்வதாகவும் இவற்றை நிறுத்துமாறும் கோரப்பட்டது.
இதனைத் தொடர்ந்து உடையார்கட்டுப் பிரதேசத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு மணல்கொண்டு செல்வதற்கு, அபிவிருத்திக் குழு தற்காலிகத் தடை விதிப்பதாக அறிவித்துள்ளது.
புதுக்குடியிருப்புப் பிரதேசத்துள் இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பாக கடந்த 7 ஆம் திகதி பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டது.
மேலும்பிரதேசத்திற்குட்பட்ட உடையார்கட்டு, சுதந்திரபுரம், இருட்டுமடு, பேராறு ஆகிய பகுதிகளில் மிக அதிகமாக மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும், இவை நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டது.
அத்துடன் மணல் அகழ்ந்து வெளி மாவட்டங்களுக்கு கொண்டுசெல்வதை தற்காலிகமாக நிறுத்துவதுடன், மணல் அகழ்வு அனுமதிகள் பிரதேசத்துள் அகழப்படும் மணல் அனுமதியை உள்ளூர் அமைப்புகளுக்கும், மக்களுக்கும் வழங்கவே அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பன்னாட்டு சிறுவர் முதியோர் தினம்

வவுனியா ,ஒக் .11
மூத்த பிரையைகளை கொண்டாடுவோம், சிறுவர்களைப் பலப்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் பன்னாட்டு சிறுவர், முதியோர் தினம் வவுனியா வடக்குபிரதேச செயலகத்தில் நாளை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.
வவுனியா வடக்கு பிரதேச் செயலர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெறவுள்ளநிகழ்வில்முதன்மை விருந்தினராக மாவட்ட செயலர் எம்.கனீபா கலந்துகொள்ள உள்ளதுடன், மதிப்புறு விருந்தினர்களாக எஸ்.சிறினிவாசன் ,மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர், யெ.கெனடி சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (110)



## ஒட்டுசுட்டான் மருத்துவமனையை தரமுயர்த்துமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு ,ஒக் .11
ஒட்டுசுட்டான் மருத்துவமனையைத் தரமுயர்த்துமாறு அந்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே பிரதேச மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.
இது தொடர்பில் மேலும் அறியவருகையில்:
ஆண்டுக்கு இரண்டு மருத்துவமனையை தரமுயர்த்தல் , செயற்றிட்டத்தின் கீழ் இந்த வருடம் இரண்டு மருத்துவமனைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக கடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முல்லைத்தீவு சுகாதாரப்பணிப்பாளர் தெரிவித்திருந்ததாகவும்.
எனவே தமது பகுதியில் காணப்படும் மருத்துவமனையை தரமுயர்தும்படியும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மேலும் இந்த மருத்துவமனைக்கு மருத்துவர்கள் குறிப்பிட்ட நாள்களில் வருகைதந்தே நோயாளர்களை பார்வையிடுவதாகவும், போதிய வசதிகள் இல்லாததால் இந்தப்பகுதி மக்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கே நீண்டதூரம்செல்லவேண்டியுள்ளது எனவும் தெரிவித்தனர்.
அத்துடன் தற்போது மகப்பேற்று தாதியர்கள், ஊசி போடும் தாதியர்கள் இந்த மருத்துவமனைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதேச மக்களால் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.
அதேபோல் அங்கு தரித்து நின்று மருத்துவர்கள் தமது சேவைகளை செய்யக்கூடிய வசதிகளையும், மருத்துவனைக்கு ஏனைய வசதிகளையும் செய்து தரும்படியும் கோரிக்கை விடுத்தனர். இதனால் இடதுகரை மற்றும்வலதுகரை மக்களுக்கு பெரிய உதவியாக இருக்கும் எனவும் அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்தனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான கைத்தொலைபேசி திருத்துவதற்கான பயிற்சி கடந்த7 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில் ஆரம்பமாகியது. (222)

## தந்தைக்கோர் தாலாட்டு

முல்லைத்தீவு ,ஒக் .11
தந்தைக்கோர் தாலாட்டு என்னும் நிகழ்வின் ஊடாக அவுஸ்ரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் முல்லைத்தீவைச் சேர்ந்த அருளப்பு நாகேஸ்வரன் தனது சொந்த நிதியிலிருந்து முல்லைத்தீவு பிரதேசத்தை சேர்ந்த 50 வறிய பாடசாலை மாணவர்களுக்குத் தலா பத்தாயிரம் ரூபா வீதம் வங்கி சேமிப்புப் புத்தகமும், ஐந்து பேருக்கு ஈருருளிகளும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி புனித இராயப்பர் ஆலயத்தில் பங்குத்தந்தை அன்ரன் யோஜ் தலைமையில் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.இதில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர்.



### ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம்

# மணல்அகழ்வுதொடர்பில் நீண்ட நேரமாக விவாதம்

முல்லைத்தீவு.ஒக் .11
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பில் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பலமணிநேரம் வாத பிரதி வாதங்கள் இடம்பெற்றுள்ளது.
இதில் குறிப்பாக உள்ளூர் விண்ணப்பங்களை பிரதேச செயலகம் சிபார்சு செய்து அனுப்பிய பின்னரும் ,ஏனைய திணைக்களங்கள் இழுத்தடித்து வருவதாகவும் ஏனைய வெளி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு உடனடியாக அனுமதிகள் வழங்குவதாகவும், இவற்றை நிறுத்தி உள்ளூர் மக்களுக்கு குறித்த அனுமதியை வழங்குமாறும், மணல் அகழ்வு தொடர்பில் நடைபெறும் பல்வேறு சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பிலும் கருத்து தெரிவிக்கப்பட்டது.
வெளிமாவட்டங்களுக்கு வழங்கப்படும் அனுமதிகளை நிறுத்துமாறு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும், அதைமீறி இந்த அனுமதிகள் எவ்வாறு வழங்கப்பட்டது என கேள்வி எழுப்பப்பட்டது.
இருப்பினும் குறித்த விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாது இருப்பது இன்னும் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத்துவ கலாநிதி சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, ஆகியோரின் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளது.
கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத்துவ கலாநிதி சி .சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ,வடமாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன் ,வடமாகாண சபை உறுப்பினர்களான ஆ.புவனேஸ்வரன், து.ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபைதவிசாளர்செ.பிறேமகாந்த் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலர், ம பிரதீபன், உதவி பிரதேச செயலர், இ. ரமேஸ் உள்ளிட்ட திணைக்கள தலைவர்கள் அரச அதிகாரிகள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

## முதிரைக் குற்றிகளுடன் மூவர் கைது

வவுனியா.ஒக் .11
வவுனியா செட்டிகுளம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஒட்டாரக்குளம் காட்டுப்பகுதியில்முதிரைமரக்குற்றிகள் மற்றும் சிறியரக உழவியந்திரத்துடன் மூன்று பேரை செட்டிகுளம் பொலிஸார் நேற்று முன் தினம் கைதுசெய்துள்ளனர்.
காட்டிற்குள் முதிரை மரங்களைச் சட்டவிரோதமான முறையில் வெட்டுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலிற்கமைய நேற்று முன் தினம் ஒட்டாரகுளம் பகுதியில் தேடுதல் நடத்திய செட்டிகுளம் பொலிஸார் மூவரை கைதுசெய்தனர். சிலர் பொலிஸார் வருவதை அவதானித்து தப்பிச் சென்றுள்ளனர். கைதுசெய்யபட்ட வர்களிடம் இருந்து சிறியரக உழவியந்திரம் மற்றும் 100 ற்கும் மேற்பட்ட முதிரை குற்றிகள் என்பனவற்றை பொலிஸார் மீட்டதுடன் சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (110)

# யாழ். பாரம்பரியத்தைப் பாதுகாக்க அமெரிக்கத் தூதரகம் நடவடிக்கை

## யாழ்ப்பாணப் பல்கலையில் ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்ப்பாணத்தில் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் திட்டத்தை அமெரிக்கத் தூதரகம் ஆரம்பித்து வைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள வரலாற்றுக்கு முந்திய கலைப்பொருள்களைப் பேணிப் பாதுகாக்கும் இரண்டு வருட திட்டமொன்றையே அமெரிக்க பதில் தூதுவர் ரொபர்ட் ஹில்டன் ஆரம்பித்துவைத்தார். இந்தத் திட்டத்துக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், கலாசாரபாதுகாப்புக்கான தூதுவர்கள் நிதியத்தின் கீழ் 23 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் மூலமாக மீளவும்பெறமுடியாத, சிதைவடையும் நிலையிலுள்ள, வரலாற்றுக்கு முற்பட்ட மட்பாண்டங்கள், பித்தளை மற்றும் செப்புப் பொருள்கள், கோவிற் சிலைகள், நாணயங்கள், பவளக் கற்கள் மற்றும் செரமிக் உருவங்கள் போன்றன பேணிப் பாதுகாக்கப்படவுள்ளன. அவற்றில் பெரும்பாலான கலைப்பொருள்கள் வடக்கு மாகாணத்திலிருந்து மீட்கப்பட்டவை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள தொல்லியல்துறைபட்டக்கல்விமாணவர்கள் மற்றும்பட்டப்பின்படிப்புமாணவர்களைஉள்ளடக்கியதாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும். மூத்த பேராசிரியரும் திட்டப் பணிப்பாளருமான பேராசிரியர் பி.புஷ்பரட்ணம இந்தத் திட்டம் தொடர்பான சிறந்த யோசனையொன்றை அமெரிக்கத் தூதரகத்துக்கும் கலாசாரபாதுகாப்புக்கானதூதுவர்கள்நிதியத்துக்கும் சமர்ப்பித்திருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் இந்தத் திட்டத்தை வழிநடத்துவதற்கு உதவுவார் என்று தூதரக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஒருநாட்டின்கலாசாரபாரம்பரியம்என்பது அந்தநாட்டினது விலைமதிக்கமுடியாத சொத்து.

என்று அமெரிக்க பதில் தூதுவர் ஹில்டன் குறிப்பிட்டார். "கலாசார பாரம்பரியங்கள் மனிதநேயத்தின் வரலாற்று அனுபவங்களைநினைவுபடுத்துபவையாகக்காணப்படுகின்றனஎன்றுஅவர் குறிப்பிட்டார். கலைப்பொருள்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டபின்னர்பல்கலைக் கழகத்தின் நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்படும்.

2001ஆம் ஆண்டு முதல் கலாசார பாதுகாப்புக்கானதூதுவர்கள்நிதியத்தின்ஊடாகஇலங்கையில்

13 திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளன. அதில் பௌத்த விகாரைகளைப் பேணுதல், மட்டக்களப்புஒல்லாந்தர்கோட்டையைச் சீரமைத்தல், அநுராதபுரம் தொல்பொருள் நூதனசாலையில்உள்ளபௌத்த, இந்துமற்றும்ஏனையகலைப்பொருள்களைப்பேணிப் பாதுகாத்தல், ஆதிவாசிகள், தமிழ் மற்றும் பௌத்த சமூகத்தில் உள்ள அருமையான சடங்குரீதியானஇசைமற்றும்நடனங்களைப் பாதுகாத்தல்போன்றதிட்டங்கள்உள்ளடங்குகின்றன.



கலாசார பாதுகாப்புக்கான தூதுவர்கள் நிதியமானது உலகம்முழுவதிலுமுள்ள100நாடுகளில்கலாசாரபகுதிகள், கலாசாரப்பொருள்கள், மற்றும் பாரம்பரிய கலாசார வெளிப்படுத்தல்கள் என்பவற்றைப் பாதுகாக்க உதவிவருகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)



## மன்னார்சதொசவளாகத்தில் இதுவரை175மனிதஎன்புகள்

மன்னார், ஒக். 11

மன்னார் 'சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் இதுவரை, 175 மனித எலும்புக்கூடுகள் குறித்த வளாகத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனஎன்றுசிறப்புசட்டமருத்துவ நிபுணர் சமிந்த ராஜபக்ஸ இதனை நேற்றுத்தெரிவித்தார்.

மனித எலும்புக்கூடுகள் அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

நேற்று 84 ஆவது தடவையாக அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

அவற்றில் 169 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுமன்னார்நீதிமன்றின்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மனிதஎலும்புக்கூடுகளின்மாதிரிகள்காபன் பரிசோதனைக்காகஅமெரிக்காவின்புளோரிடாமாநிலத்துக்குஅனுப்புவதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மன்னார் நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் குறித்தமனிதஎலும்புக்கூடுகளின்மாதிரிகள் காபன்பரிசோதனைக்காகப்புளோரிடாவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

ஏனைய அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளை மீட்கும் பணி இடம்பெற்றுவருகின்றனஎன்றுமேலும்தெரிவித்தார். (4,56)



## இலங்கையில் வாழாத இலங்கையர்களுடன் ஆளுநர் குரே லண்டனில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 11

இலங்கையில் வாழாத இலங்கையர் (என்.ஆர்.எஸ்.எல்)என்றஅமைப்பின் பிரதிநிதிகளை வடக்கு மாகாண ஆளுநர் லண்டனில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

லண்டனில்புலம்பெயர்தமிழ்மக்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டுவரும் ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்றுமுன்தினமிரவு குறித்த அமைப்பினரை லண்டனில் அமைந்துள்ள இம்பேறியல் சைனா விடுதியில்

சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். சந்திப்பில்மருத்துவர்கள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட புத்திஜீவிகள்கலந்துகொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டரசுமலர்ந்தபின்னர்வடக்குமாகாணத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பாராட்டிய அவர்கள் ஆளுநர் தமிழ்மொழியில்பேசுவதுமட்டுமல்ல தமிழ் மக்களின் பிரச்சினைகள் மீது கொண்டுள்ள அக்கறையையும் தாம் பாராட்டுவதாகத்தெரிவித்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

நிரந்தரத் தீர்வுக்குக் கொழும்பு அரசு எடுத்துவரும் முயற்சிகள் என்ன என்பதுகுறித்தும்அரசியல்கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வது தொடர்பாகவும் வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பிலும் அமைப்பினர் கேட்டறிந்து கொண்டனர். அவர்கள்மத்தியில்கருத்துவெளியிட்ட ஆளுநர் குரே.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுயற்சிகள்மேற்கொள்ளப்படும் அதேவேளை, மறுபக்கத்தில்அந்தமக்களுக்கான அபிவிருத்தி தொடர்பிலும் கவனம்செலுத்துவதுகட்டாயமாகவுள்ளது என்று தெரிவித்தார்.

எனது ஐரோப்பிய பயணம் எந்தவித அரசியல் நோக்கமும் இல்லாதது. வடக்கு மாகாணத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் முதலீடுகளைச் செய்து, அங்குபொருளாதாரத்தைவளப்படுத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

வாரம் தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் என்னைச் சந்தித்து வருகின்றார்கள். அவர்களின் பிரச்சினைகள் பலவற்றை என்னால் முடிந்த அளவு அதிகார வரம்புக்கு உட்பட்டுச் செயற்படுத்தி வந்திருக்கின்றேன்.

ஆனாலும் அங்கு பெருமளவில் வருவோர் இளைஞர்களாக இருக்கின்றனர். அவர்கள், தமது வாழ்க்கைக்கு ஒரு வேலையில்லாதது பிரச்சினையாகவுள்ளது என்று கூறுகின்றனர். அதற்காகப் பல தொழில் நிறுவனங்களை உருவாக்க வேண்டும் அப்போதுதான்அவர்களின்பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும்என்றுநான்நினைக்கின்றேன். அதுவே எனது வருகையின் நோக்கம் என்று கூறியுள்ளார் என்று மேலும்தெரிவிக்கப்பட்டது. (4,10)

# இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வுகள்





யாழ்ப்பாணம், ஒக். 11

இலங்கை இராணுவத்தின்69ஆவதுஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வுகளை வடக்கில் இராணுவத்தினர் நேற்றுநடத்தினர்.

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களிலும்நிகழ்வுகள்நடத்தப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல்தர்ஷனகெட்டியாராய்ச்சி, தலைமையிலும் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள், சாதாரண இராணுவ வீரர்களுடைய முழு ஒத்துழைப்பிலும் யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் இராணுவத்தினரின் 69ஆவதுவருடநிறைவு விழா இடம்பெற்றது.

முதலில் இராணுவகீதம் இசைக்கப்பட்டது. அதன் பின்னர் உயிரிழந்த இராணுவத்தினருக்காக 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து இராணுவத்தளபதி முன்வைத்த இராணுவத்தினருக்கான நற்செய்தி வாசிக்கப்பட்டது. பின்னர்இந்தத்தினத்தைநினைவுகூரும் முகமாக பாதுகாப்பு படைக் கட்டளைத்தளபதி மாங்கன்றுகளை நட்டார்.

**மன்னார்**

மன்னார் தள்ளாடியிலுள்ள 54 ஆவது படைப்பிரிவின் நிகழ்வு அணிவகுப்புடன் இடம்பெற்றது. தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிக்கேடியர் செனரத் பண்டார தலைமையில் குறித்த அணிவகுப்பு நிகழ்வு இடம்பெற்றது.

சௌத்பார் முதன்மைவீதியில் ஆரம்பமான குறித்த அணிவகுப்பு ஊர்வலம் மன்னார் பஸார் பகுதிக்குச் சென்று மன்னார் முதன்மை பாலத்தினூடாக தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவைச் சென்றடைந்தது.

குறித்தநிகழ்வில்70அதிகாரிகளும், 800இராணுவ வீரர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

தினத்தையொட்டிடெங்குஒழிப்புநடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டனர். (4,56)

# ஊற்றுப்புலம் குள சீரமைப்பு நிறுத்தம்: திணைக்களங்கள் முரண் கருத்துகள்!

## இக்கட்டு நிலையில் பிரதேச விவசாயிகள் தவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஊற்றுப்புலம் குளம் சீரமைக்கப்படும் நிலையில், அந்தப் பகுதி தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம் என்றுகூறி வனவளத் திணைக்களம் பணிகளைத் தடுத்து நிறுத்தியுள்ளது. இந்த விடயத்தில் அரச திணைக்களங்கள் முரண்பாடான கதைகளைக் கூறிக்கொண்டிருக்கின்றன. இதனால்தாம் பாதிக்கப்படுகிறோம் என்று பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஊற்றுப்புலம் குளத்தின் கீழ் 250 ஏக்கர் வயல் நிலம் செய்கை இடம்பெற்ற நிலையில் போர்க் காலத்தில் சுமார் 100 ஏக்கர் நிலம் காடு சூழ்ந்துவிட்டது. பிரதேசத்துக்குச் செல்வதற்குத் தற்போது வனவளத் திணைக்களம் தடுத்து வருகிறது. பல விவசாயிகள் நிலத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமக்கான நீரேந்து குளத்தைச் சீரமைத்துத் தருமாறு கடந்த 3 ஆண்டுகளாக விடுத்த கோரிக்கையின் பெயரில் இந்த ஆண்டு 23 மில்லியன் ரூபா பணம் விடுவிக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிலையில் தற்போது குளத்தின் அலைகரைப் பகுதிகளும் தமது ஆளுகைப் பிரதேசம் என்று சொந்தம் கொண்டாடி சீரமைப்புப் பணிகளையே தடுத்து விட்டனர்.

அதனால் இந்த ஆண்டு நிறைவுக்குள் பணியை நிறைவு செய்ய முடியுமா என்ற அச்சம் எழுகின்றது. நிறைவு செய்யாதுவிடின் பணம் திரும்பினால் மீண்டும் கிடைக்குமா என்ற அச்சமும் உள்ளது. குறித்த விடயத்துக்குத் தீர்வு தருமாறு மாவட்டச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். தீர்வு கிட்டவில்லை" என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

அந்தப்பகுதியில் உள்ள சர்ச்சைக்குத் தீர்வை எட்டாமலா ஒப்பந்தம் வழங்கப்பட்டு பணியை ஆரம்பித்தீர்கள் என்று மாவட்ட கமநல உதவி ஆணையாளர் ஆயகுலனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"குறித்த குளத்தைச் சீரமைப்பதற்கான திட்டம், அதற்கான செலவு மதிப்பீடு, கள ஆய்வுகள் என்பன 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அன்றுதொடக்கம் ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்பே 3 தடவைகள் வனவளத் திணைக்களத்துக்கு எழுத்தில் கடிதம் அனுப்பியிருந்தோம். அந்தப் பகுதியில் உங்கள் பிரதேசம் உள்ளதா? அவ்வாறாயின் அதன் எல்லையை அடையாளப்படுத்த முடியுமா? என்று கோரியிருந்தோம். அந்த 3 கடிதங்களுக்கும் பதில் வழங்கப்படவில்லை. பணியை ஆரம்பித்த பின்னர் ஓர் ஆண்டுகடந்த நிலையில் அந்தப் பகுதி தமது பிரதேசம் என்பதனாலேயே திட்டம் தடைப்பட்டுள்ளது" என்றார்.

இவ்வாறு விவசாயிகளும் கமநல உதவி ஆணையாளரும் குற்றஞ்சாட்டுவது தொடர்பில் வனவளத் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் ஜெயச்சந்திரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"கடந்த காலத்தில் கடிதம் அனுப்பியது உண்மை. இருப்பினும் அதற்குப் பதிலளித்தோம். குளத்தின் அணைக்கட்டுக்காக மண் எடுக்கப்படும் பிரதேசத்தில் பல மரங்கள் உள்ளன. அவை அழிவடைந்து விடும் என்பதே பிரச்சினை. அதேநேரம் ஒரு குளம் இருந்தால் அது அந்தத் திணைக்களத்துக்கு உரித்தானது என்று அரசிதழில் பிரசுரித்திருந்தால் குளத்தின் அணைக்கட்டு எத்தனை அடி உயரமோ அதன் 15 மடங்கு நிலம் அந்த திணைக்களத்திற்கே உரியது" என்றார்.

இவ்வாறு குளத்தின் சீரமைப்புப் பணிகளில் சர்ச்சை ஏற்படுவது தொடர்பில் மாவட்டச் செயலர் சு.அருமைநாயகத்திடம் தொடர்பு கொண்டு இரு திணைக்கள அதிகாரிகளின் கூற்றுத் தொடர்பில் கேட்டபோது,

கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் 444 குளங்கள் உள்ளன. இவற்றுக்கோ அல்லது வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள எந்தக் குளத்துக்கும் அரசிதழ் அறிவித்தல் கிடையாது. ஒவ்வொரு குளத்துக்கும் அனுமதிக்கப்பட்ட அளவு நிலத்தில் இருந்து மண்ணைப் பெற்றுக் குளத்தைச் சீரமைக்கும் உரிமை உண்டு. அதனால் அந்தப் பணி எந்தக் காரணத்துக்காகவும் தடைப்பட முடியாது. இது தொடர்பில் உடனடியாக வனவளத் திணைக்களத் துக்குத் தெரியப்படுத்தப்படும்"- என்றார்.

(4,105)

# எமது பெயரால் குற்றஞ்சாட்ட எவருக்கும் உரிமையில்லை!

## *விடுதலைக்காகச் செயற்படுமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை*

சிறையில் வாடும் கைதிகளைத் தவிர வெளியில் கைதிகளுக்காக அனைவரும் குரல்கொடுக்கலாம். ஆனால் அரசியல் கைதிகள் சார்பாக என்றுகூறி எவரையும் குறைகூறும் அதிகாரத்தை நாம் யார்வசமும் ஒப்படைக்கவில்லை. எனவே அதனைக் கருதாது எமது விடுதலைக்கு நடவடிக்கை வேண்டும்.

இவ்வாறு மகசின் சிறைக் கைதிகள் கோரியுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளும்மன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மகசின் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 42 பேரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இ. சாள்ஸ் நிர்மலநாதன் சி.சிறிதரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் சென்று சந்தித்திருந்தனர். சந்திப்புத் தொடர்பில் சாள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்ததாவது:.

தமிழ் அரசியல் கைதிகள் 107 பேரையும் ஒரே வகையில் மன்னிப்பின் கீழ் குறுகிய கால மறுவாழ்வு மூலமாக விடுவிக்க வேண்டும் என்பதே அந்தக் கைதிகளின் விருப்பம் என்று கைதிகள் கூறுகின்றனர். அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு முயற்சி எடுக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும் முயற்சிகளின் முன்னேற்றத்தை அறியத் தரவும்.

வெளியில் இருந்து பலரும் கூறும் கருத்துகள் அவர்களது நிலைப்பாடு. எமக்கு வேண்டியது எமது விடுதலையே என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர் - என்றார் நிர்மலநாதன்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கைதிகளைப் பார்க்கச் சென்றபோது. "நாங்கள் போராட்டம் நடத்தினால் மாத்திரம்தான் எங்களைப் பார்க்க வருவீர்களா என்று அரசியல் கைதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேள்வி எழுப்பியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(4,105)

# பாடசாலை மாணவியும் தந்தையும் காயம்: இ.போ.ச பேருந்துக்குப் பிறேக் இல்லையா?

யாழ்ப்பாண்ம், ஒக். 11

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து, அதன் முன்புறமாக வீதியில் பயணித்துக்கொண்டிருந்த உந்துருளியை மோதியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் உந்துருளியில் பயணித்த மாணவியையும் அவரைப் பாடசாலைக்கு ஏற்றிச் சென்ற தந்தையாரும் காயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் நகரில் முட்டாஸ் சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்றது.

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்தபோதே இருவரையும் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. வேம்படி மகளிர் கல்லூரியில் தரம் 10இல் கற்கும் மாணவியும் அவரது தந்தையும் காயமடைந்தனர்.

விபத்துக்குள்ளான பேருந்து முன்னர் காரைநகர் வழித்தடத்தில் யாழ்ப்பாணம் நோக்கி வரும்போது சங்கானையில் வேகத்தடை (பிறேக்) செயற்படவில்லை, ஸ்ரேறிங் திருப்ப முடியவில்லை என்று சாரதி அலைபேசியில் யாருக்கோ தகவல் வழங்கியுள்ளார். அதனைத் தொடர்ந்தும் பயணித்த பேருந்து காங்கேசன்துறை வீதியில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியை அடைந்து முட்டாஸ் கடைச் சந்தியின் ஊடாக ஸ்ரான்லி வீதியூடாகவே நகரை அடைய வேண்டிய நிலையிலேயே பேருந்தைத் திருப்புவதற்கு சாரதி முயன்றுள்ளார் என்று அதில் பயணித்த மு.செல்வகுமார் தெரிவித்தார். அவர் யாழ்ப்பாண நகரில் வேலைசெய்கிறார்.

பேருந்தைத் திருப்ப இயலாத காரணத்தால் இ.போ.சதனக்குரிய வழித்தடப்பாதையில்பயணிக்காது வேறு வழித்தடத்தில் காங்கேசன்துறை வீதிவழியாக நேரில் பயணிக்க முற்பட்டது. அதன்போதே பாடசாலை மாணவியை இ.போ.ச. மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, விபத்தில் படுகாயமடைந்த பாடசாலை மாணவியினதும் தந்தையினதும் தலைக் கவசங்களை குறித்த பேருந்தில் எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டார். அவர் விசாரணையில் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் காரைநகர் இ.போ.சபை முகாமையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"விபத்துக்குள்ளான உந்துருளி மானிப்பாய் வீதி வழியாகப் பயணித்த நிலையில் வீதிக்குக் குறுக்கே பயணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. பாடசாலை மாணவர்கள் உள்ள நிலையில் பாடசாலைக்கான வீதியில் பயணிக்கமுடியும். புழுது தொடர்பில் எமக்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை" என்று தெரிவித்தார்.

(4,105)

*வடக்கு ஆசிரிய இடமாற்றங்களில் முறைகேடு*

# கடந்த கால முறைகேடுகளைச் சீர்செய்யும் வரையில் புதிய இடமாற்றங்களுக்கு ஆதரவு வழங்குவதில்லை

## *ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஸ்ராலின் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 11

வடக்கு மாகாண ஆசிரிய இடமாற்றங்களின்போது அரசியல் தலையீடுகள் இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த காலங்களில் இடமாற்றத்தில் நடந்த முறைகேடுகள் சீர்செய்யப்படும் வரை இடமாற்றச் சபைகளில் கலந்துகொண்டு புதிய இடமாற்றங்களை நடைமுறைப்படுத்த ஆதரவு வழங்குவதில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது. இதனையும் மீறி வலய மற்றும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துமானால் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடமாற்றங்களில் நடைபெற்ற முறைகேடுகள் மற்றும் பாரபட்சங்கள் தொடர்பான பல முறைப்பாடுகள் இலங்கை ஆசிரியர் சங்கத்தால் ஆதாரங்களுடன் பல தரப்பினரிடமும் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆயினும் அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் பக்கச்சார்ப்பான செயற்பாடுகளால் நியாயத் தன்மை பின்பற்றப்படவில்லை. சட்டபூர்வமான இடமாற்றச் சபைகள் ஊடாகத் தீர்மானிக்கப்பட்ட இடமாற்றங்களில் பாரபட்சங்கள் காட்டப்பட்டன. கடந்த வருடம் இடம்பெற்ற வருடாந்த இடமாற்றங்களிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இடமாற்றத்துக்கு தகுதிபெற்றிருந்த அழகியல் பாட ஆசிரியர்கள் சிலருக்கு இன்னமும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவை தொடர்பாக வடக்கு மாகாணத்தின் கல்வியமைச்சர், ஆளுநர், முதலமைச்சர் ஆகியோருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் முறைகேடுகள் இன்றுவரை தீர்க்கப்படவில்லை. இடமாற்றச் சபைகள் கூடுகின்றபோது இடமாற்றச்சபையின் தீர்மானங்களுக்குரிய அறிக்கைகள் பேணப்படுகின்றன. இந்த நிலையில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இடமாற்றசபைத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தியதாகக் கூறிவருகிறார். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. இவைதொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதாரங்களுடன் தெரியப்படுத்தியிருந்தபோதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாதமை கவலைக்குரியது. யாழ்ப்பாண வலயத்தில் இடமாற்ற சபைத் தீர்மானத்துக்கமைய நடைமுறைப்படுத்தியிருந்த சில இடமாற்றங்களிலும் இடமாற்றச்சபையின் தீர்மானத்தை மீறி வடக்கு மாகாண கல்வியமைச்சு தன்னிச்சையான முறையில் இடமாற்றங்களைச் செய்துள்ளது.

கடந்த கால முறைகேடுகளை நிவர்த்தி செய்வதற்கு வடக்கு மாகாண கல்வியமைச்சுக்கு ஒருநாள் போதுமானது. முறைகேடுகளை நீக்க கல்வியமைச்சும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் உடனடியாக முன்வரவேண்டும். எமது இத்தகைய நிலைப்பாட்டை வெளிமாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றங்களுக்குக் காரணம் காட்டி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வருடாந்த இடமாற்றத்தை இழுத்தடிக்க அனுமதிக்கமாட்டோம். முறைகேடுகள் நிவர்த்திசெய்யப்பட்டு உரிய காலத்தில் இடமாற்றச்சபைகள் கூட்டப்படவேண்டும். தவறும் பட்சத்தில் வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களையும் ஒன்றிணைத்துப் பெரும் தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுவோம் என்பதைத் தெரிவிக்கின்றோம். எமது இந்தக் கோரிக்கையைப் புறக்கணித்து இடமாற்றங்கள் தொடர்பாக நீதியாகச் செயற்படுவதற்கு வடக்கு மாகாணத்தின் கல்வியமைச்சு, கல்வித் திணைக்களமும் தொடர்ந்தும் பின்நிற்குமானால் மிகப்பெரிய நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலையேற்படும் என்று எச்சரிக்கின்றோம் -என்றார்.

(4)

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுசெய்ய

## அரசு வழியேற்படுத்தி கொடுக்கவேண்டும்

கூறுகிறார் சம்பிக்க



புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அரசு இதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் அதிக முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பிலான திட்டத்தை அரசு எனும் ரீதியில் நாம் வகுத்து வருகின்றோம்.

அதற்கிணங்க, வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களிடமும் நாம் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினோம். அவர்களும் இதற்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பம் தெரிவிக்கும் புலம்பெயர் தமிழர்கள், புலிகளுடன் தொடர்புடையவர்களா - இல்லையா என்பது தொடர்பில் மத்திய வங்கி ஊடாக ஆராயப்படும்.

எவ்வாறாயினும், விடுதலைப் புலிகளுக்கு வாகனங்கள், அலைபேசிகளைக் கடந்த காலங்களில் விற்றவர்கள், அவர்களுக்கு வீடுகளை அமைக்கப் பணம் வழங்கியவர்கள் எல்லாம் கொழும்பில் தற்போது சொகுசு வாழ்க்கை வாழ்ந்துக்கொண்டு இதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்தத் தருணத்தில் இதற்கு எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதில் எந்தப்பயனும் இல்லை. இலங்கையில் முதலீடு செய்ய விரும்புபவர்களுக்கு நாம் இடமளிக்க வேண்டும். தமிழ் - சிங்கள பேதங்களை மறந்து, நாம் இந்த விடயத்தில் செயற்பட வேண்டும். மேலும், அவர்கள் இடையூறுகள் இன்றி முதலீடுகளை மேற்கொள்ள அரசு என்ற வகையில், இன்னும் நாம் வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அத்தோடு, பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரை கடந்த அரசு மட்டுமன்றி, கூட்டாச்சி அரசிலும் நிறையக் குறைகள் காணப்படுகின்றன. இவற்றையும் நாம் நிவர்த்தி செய்ய வேண்டும்" என்றார்.

---

அரச தலைவர் படுகொலைச் சதி

## விமல் வீரவன்சவின் மனைவிக்கும் தொடர்பு?

**கொழும்பு, ஒக் .11**

**அரச தலைவர் படுகொலைச் சதி முயற்சி தொடர்பாக, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவியை சிஐடியினர் விசாரணைக்குட்படுத்தவுள்ளனர்.**



அரச தலைவர் கொலைச் சதி முயற்சியுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய நபர் விமல் வீரவன்சவின் மனைவியான சசி வீரவன்சவைச் சந்தித்துள்ளமை சி.ஐ.டியினரின் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகின்றன.

கைது செய்யப்பட்டுள்ள இந்தியர், தான் விமல்வீரவன்சவின் வீட்டுக்குச் சென்றதாகத் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைகளில் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்தே தான் அவரது வீட்டுக்குச் சென்றதாகவும் அவ்வேளை விமல் வீரவன்சவின் மனைவியைச் சந்தித்துப் பேசியதாகவும் கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் தெரிவித்துள்ளார். முன்னாள் அரச தலைவர் மற்றும் அவரது குடும்பத்தவர்களின் உயிர்களுக்கு ஆபத்து உள்ளதாகவும் கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் தெரிவித்துள்ளார். கடவுச்சீட்டு மோசடி தொடர்பாகச் சசி வீரவன்சவுக்கு எதிராக ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

---

## 20ஆவது திருத்த சட்டத்துக்கு எதிராக தடையாக யாரும் இருக்கவேண்டாம்

கொழும்பு. ஒக் 11

20ஆவது திருத்தச் சட்டத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்கும் இதனை மக்கள் மத்தியில்கொண்டு செல்வதற்கும் யாரும் தடையாக இருக்க வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் முதன்மைக் கொரடாவுமான அநுரகுமார திஸாநாயக்க சபையில் பகிரங்கக் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் பிரதிசபா நாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் ஆரம்பமானது. இதன்போது மக்கள் விடுதலை முன்னணியினால் தனிநபர் தீர்மானமாகச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பைப் பிரதி சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். அதனையடுத்து சட்டமூலத்தினை சமர்ப்பித்த நாடாளுமன்ற உறுப்பினர். அநுராகுமரா திஸநாயக்க ,

"20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு பொதுஜன வாக்கெடுப்பு அவசியம் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. நாட்டின் அடிப்படை சாசனத்தில் மாற்றம் ஏற்படுத்துகின்றபோது இவ்வாறு மக்களின் விருப்பினை பெறவேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் முடிவை நாம் மதிக்கின்றோம். இருப்பினும் பொதுஜனவாக்கெடுப்புக்குச் செல்வதற்கு முன்னதாக 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறவேண்டிய தடைக்கல்லொன்று உள்ளது. ஆகவே அதனை குழப்பும் வகையில் யாரும் செயற்படவேண்டாம் என்று கோருகின்றோம். மேலும் பொதுமக்கள் மத்தியில் நாம் 20ஆம் திருத்தச்சட்டம் தொடர்பிலான சிந்தனைக் கருத்தாடலைத் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளோம். ஆகவே அதற்கும் யாரும் இடையூறு அளிக்கக் கூடாது"- என்றார். (31)

---

## கட்டார் வானூர்தி நிலையத்தில் சந்தேகத்துக்கிடமாக நடமாடியவர் யார்?

கொழும்பு, ஒக் 11

ஐ.நா சபையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சென்ற போது, அவரது மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சி.ஐ.டி. விசாரணை களை ஆரம்பித்துள்ளது.

அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஹான் சில்வா முன்வைத்துள்ள முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த விசாரணைகள் இடம்பெறுவதாக சி.ஐ.டி. கொழும்பு முதன்மை நீதிவானுக்கு பீ 648 எனும் இலக்கத்தின் கீழ் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த செப்ரெம்பர் 25ஆம் திகதி ஐ. நா. கூட்டத்தொடரில் உரையாற்றினார். இதற்காக அவர் கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதி கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றார். அவருடன் அமைச்சர்கள் அரச அதிகாரிகளும் சென்றனர். அந்தப் பயணத்துக்கு முன்னர் அரச உளவுத் துறைப் பணிப்பாளரிடம் இருந்து அரச தலைவரின் பாதுகாப்புத் தொடர்பில் அறிக்கை பெறப்பட்டது.

அதில், அரச தலைவர் அமெரிக்கா சென்று ஐ. நா. கூட்டத்தொடரில் பங்கேற்கும் போது. அல்லது வேறு சந்திப்புக்களை நடத்தும்போது அவருக்கு எதிராக போராட்டங்கள் ஐ. நா. வளாகத்துக்குள்ளோ அல்லது சந்திப்புக்கள் நடக்கும் இடங்களிலோ இடம்பெறும் எனக் கூறப்பட்டது. இதனை நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் எனக் கூறப்படும் ருத்ரகு மார் உள்ளிட்டோர் ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரியவந்தது. அரச தலைவர் தலைமையிலான குழுவினர் செப்டம்பர் 23ஆம் திகதி நியூ யோர்க்கை அடைந்தனர். அவர்கள் அங்கு பார்க் எவனியூ, லொஸ் ரீஜென்ஸி எனும் விடுதியில் தங்கியிருந்தனர். அதில் இலங்கை அரச தலைவருக்கு மேலதிகமாக இஸ்ரேல் அரச தலைவர் உள்ளிட்டோரும்தங்கியிருந்தனர். இந்த நிலையில் அரச தலைவர் , குறித்த விடுதியில் தங்கியிருந்த அறை இலக்கம் உள்ளிட்ட அவரது பாதுகாப்புத் தொடர்பில் மிக இரகசிய தகவல்கள் ஒரு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் அவ்விணையத்தளத்தில் அரச தலைவர் அமெரிக்கா செல்லும் போது அவரது குழுவினருடன் இருக்கும் வானூர்தியில் வைத்து எடுக்கப்பட்ட படமும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.இதனைவிட அரச தலைவரின் பயணத்தின் இடை நடுவே, கட்டார் வானூர்தி நிலையத்தில் அரச தலைவர் செல்லும் போது சந்தேகத்துக்கு இடமாக நடந்துகொண்ட ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஜாசிங்க விஜேநாயக்க மலித்த இசுரு என்பவரே இவ்வாறு விசாரணை செய்யப்பட்டார். அவரிடம் இருந்த அப்பில் ரக அலைபேசியும் கைப்பற்றப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

அரச தலைவர் தொடர்பான தகவல்கள் அதிலும் அதி இரகசியமான பாதுகாப்புக் குறித்த தகவல்கள் எப்படி ஒரு இணையத் தளத்துக்குச் சென்றது என்பது தொடர்பில் கணினிக்குற்றங்கள் சட்டத்தின் 24 (6) ஆம் அத்தியாயத்தின் கீழ் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனச் சி.ஐ.டி.'நீதி மன்றுக்கு அறிவித்துள்ளது. (71)

---

## விடுதலைப் புலிகள் பொருளாதார ரீதியில் இன்றும் பலமாகவே இருக்கின்றனர்

கூறுகின்றார் பேராசிரியர் ஜீ.எஸ்.பீரிஸ்

கொழும்பு.ஒக் 11

விடுதலைப் புலிகள் அமைப்பானது தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் பொருளாதார ரீதியில் அந்த அமைப்பானது மிகவும் பலமாகவே காணப்படுகின்றது. என்று முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எஸ்.பீரிஸ் தெரிவித்தார்.இந்த நிலையில் புலம்பெயர் தமிழர்களிடமுள்ள நிதியை இலங்கையில் முதலீடு செய்யுமாறு அரசு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளமை யானது நாட்டுக்குப் பாதகமாக அமையும் எனவும் தெரிவித்தார். கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (61)

---

## மாற்று அரசுக்கு வாய்ப்பே இல்லை

கூறுகின்றார் லக்ஸ்மன் கிரியெல்ல

மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுவால் ஆட்சியமைக்க முடியாது. அத்தகையை குழுவுடன் இணைய நாம் தயாரில்லை என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அரச தலைவரும், தலைமை அமைச்சரும் நாட்டில் இல்லாத நிலையில், மாற்று அரசொன்றை அமைப்பதற்கு முயற்சிக்கப்பட்டு வருவதாகவும், இரண்டு அணிகள் இணையப் போவதாகவும் வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கூட்டாட்சி அரசுக்கே மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுவால் மாற்று அரசை அமைக்க முடியாது.அவ்விரு அணிகளும் இணையும் என்று நாம் நம்பவில்லை என்றும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

---

கோத்தாவின் நிதி மோசடி வழக்கு

## தினமும் விசாரணை நடத்த சிறப்பு நீதிமன்றம் முடிவு

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்சவுக்கு எதிராக நிதி முறைகேடு வழக்கை, டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் தினமும் விசாரிக்கப் போவதாக, கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது. நிதிமுறைகேடுகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில், கோத்தாபாய ராஜபக்சவுக்கு எதிரான வழக்கு நேற்றுமுன்தினம் விசார ணைக்காக எடுக்கப்பட்டது. தங்காலையில் டி.ஏ.ராஜபக்ச நினை விடத்தை அமைப்பதற்காக, 33 மில்லியன் ரூபா அரச நிதியை தவறாகப் பயன்படுத்தினார் என்று கோத்தாபாய ராஜபக்சவுக்கு எதிராக நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.



## எதிரெதிரே வந்த தொடருந்துகள்; மயிரிழையில் தடுக்கப்பட்டது விபத்து!

கொழும்பு, ஒக் 11
இரு தொடருந்துகள் நேருக்கு நேர் மோதி இடம்பெறவிருந்த விபத்து ஒன்று மயிரிழையில் தடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பம்பலப்பிட்டி வெள்ளவத்தை தொடருந்து நிலையங்களுக்கு இடையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து காலி நோக்கிப் பயணித்த தொடருந்தும், காலியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தொடருந்துமே ஒரே பாதையில் பயணித்துள்ளமையினால், இரு தொடருந்துகளும் நேருக்கு நேர் மோதிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது.

எனினும் தொடருந்து ஊழியர்கள் அவசரமாகச் செயற்பட்டு, தடுத்து நிறுத்தப்பட்டதால், அதிர்ஷ்டவசமாக இந்த விபத்து தடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில், இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாகப் பயணிகள் தெரிவித்துள்ளனர்

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே விஜயகலா மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கவேண்டும்

## கூறுகின்றார் நாமல் ராஜபக்ச



**கொழும்பு, ஒக். 11**

**நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே வழக்குத் தொடரப்பட்டிருக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசுராஜபக்சவினரைநீதிமன்றங்களுக்கு கொண்டுவந்துதான் மகிழ்ச்சியடைந்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், எம்மை நீதிமன்றங்கள் மட்டுமன்றி, சிறைச்சாலைகளில் அடைத்தால் கூட நாம் மக்களுக்கான எமது போராட்டத்தை ஒருபோதும் நிறுத்தப்போவதில்லை.

மக்களுக்கான எமது இந்தப் பயணத்தை இவ்வாறான தடுப்புக்களை இட்டு நிறுத்தி விட முடியும் என்று அரசு கருதினால், அது பிழையென்றே கூறவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தற்போது அதிவேக பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த அதிவேகப்பிணையானது நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜயகலா மகேஸ்வரனுக்கும் கருணிகாவுக்கும் மட்டும்தான் இந்த நாட்டிலேயே வழங்கப்படும்.

விஜயகலா கூறிய கருத்தானது மீண்டும் பயங்கரவாதத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற நோக்கிலேயே அமைந்திருத்தது. ஆனால், அவர் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள், இராணுவத்தினர், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான், தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியைச் சமூகவலைத்தளத்தில் பகிர்ந்த இரண்டு இளைஞர்கள் என பலருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்தான் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எனினும், பயங்கரவாதத்துக்கு மீண்டும் உயிர்கொடுக்க வேண்டும் என்று கூறிய விஜயகலா மகேஸ்வரனுக்கு மட்டும் இந்த சட்டத்தின் கீழ் வழக்குத் தொடராமல், பிணையும் வழங்கி வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, கூட்டாட்சி அரசு விடுதலை செய்யும் என்ற நம்பிக்கையில், இன்னும் சிறைச்சாலையில் பலர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள், தொடர்பில் எல்லாம் கதைக்காமல், பிரபாகரனுக்கு உயிர்க்கொடுக்க வேண்டும் என்று கூறிய விஜயகலா மனேஸ்வரனுக்கு மட்டும் பிணை வழங்கியுள்ளமைத்தான் இந்த விடயத்தில் எமக்குள்ள பிரச்சினையாக இருக்கிறது.

அரசானது தமது தரப்பினருக்கு ஒரு சட்டத்தையும் எதிரணியினருக்கு ஒரு சட்டத்தையுமே தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதனால்தான் நாம், பொலிஸ்துறை, சட்டமா அதிபர் திணைக்களம் என்பன அரசியல் மயமாகிவிட்டதாகக் கூறிவருகிறோம். மேலும், இடைக்கால அரசு தொடர்பிலும் தற்போது ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துக்கொண்டிருக்கின்றன.

இதுதொடர்பில் எமது தரப்பில் எந்தப்பேச்சுக்களும் ஆரம்பமாகவில்லை. எமது அணியின் கட்சித்தலைவர்கள் கூடி ஆராய்ந்த பின்னர்தான், இது தொடர்பில் அடுத்தக் கட்ட நடவடிக்கையை எடுக்க முடியும் -என்றார்.

## இந்தியாவில் இல்லை இலங்கையில்

கொழும்பு, ஒக். 11
கடுமையான மழை காரணமாக வீதியில் குழி ஏற்பட்டதை அடுத்து மூடுந்து வாகனம் குழிக்குள் விழுந்துள்ளது.

இந்தச் சம்பவம் கொழும்பு கிருலா வீதியில் நேற்று இடம்பெற்றது.

வீதிகள் சரியான முறையில், அமைக்கப்படாமையினால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு வழிவகுக்கின்றன.



## நாடாளுமன்றில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக் 11
பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டு வரத் திட்ட மிடப்பட்டுள்ள, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில், இந்தச் சட்டவரைவைச் சமர்ப்பித்தார்.

இந்தச் சட்ட வரைவுக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்தால், 1979ஆம்ஆண்டின் 48ஆவது இலக்க, பயங்கரவாதத் தடைச் சட்டம் காலாவதியாகும்.

# பொட்டுக்கும் சேலைக்கும் சாயும் சட்டம் காவியை மட்டும் துரத்துவது ஏன்?

## கேள்வி எழுப்பியது பொதுபல சேனா

கொழும்பு, ஒக். 11
நாட்டில் பொட்டு வைத்தவர்களுக்கும் சேலை அணிந்தவர்களுக்கும் தனியாகத் தொழிற்படுகின்ற சட்டம் காவியுடை அணிந்தவர்களுக்கு வேறொரு வகையில் செயற்படுகின்றது. நாட்டில் மீண்டும் போர் ஏற்படக் காரணமாக இருந்த புலிகள் மீண்டும் வரவேண்டும் எனப் பகிரங்கமாகக் கோரிய சேலை அணிந்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற பிணை நாட்டினதும், சிங்கள பௌத்தர்களினதும் உரிமைகளுக்கான குரல்கொடுத்த கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்கப்படாதது ஏன்? என சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் கேள்வி எழுப்பினார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள பொதுபலசேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் பொலிஸார் மீதும் சட்டத்தின் மீதும் முழுமையாக நம்பிக்கை இழந்துள்ளோம். விஜயகலா மகேஸ்வரனுக்குச் சாதகமாக செயற்படும் சட்டம் ஞானசாரதேரருக்கு எதிராகச் செயற்படுகின்றது.

மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற போர் முறியடிக்கப்பட்டு மக்கள் அனைவரும் அச்சமின்றி வாழும் சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில், புலிகள் மீண்டும் வர வேண்டும் எனப் பகிரங்க மேடையொன்றில் கூறிய விஜயகலாவுக்கு உடனடியாகப் பிணை வழங்கப்படுகின்றது.

எனினும் நாட்டின் நலன் தொடர்பில் சிங்கள பௌத்தர்களின் உரிமைகள் தொடர்பிலும் குரல்கொடுத்த ஞானசாரதேரருக்குப் பிணை வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள், அரசபதவிகளில் உள்ளவர்களுக்கு பக்கச்சார்பாக செயற்படுகின்ற சட்டம், பிக்குமாருக்கு எதிராகச் செயற்படுகின்றது. எனவே தமது சுயவிருப்பங்களின்படி அடிக்கடி மாற்றியமைக்கப்படுகின்ற நாட்டின் சட்டம் தொடர்பில் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளோம்.

எங்களுடைய கொள்கையில் முதன்மையானது நாடு ஒன்றே ஆகும். நாடு நிலைபெறும் பட்சத்திலேயே ஏனைய முன்னேற்றங்கள், அபிவிருத்திகள் என்பன தொடர்பில் கவனஞ் செலுத்த முடியும். ஆனால் அந்த நாட்டைச் சிதைக்கும் வகையிலான நடவடிக்கைகளே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது ஞானசார தேரருக்கான விடுதலையினைப் பெற்றுக்கொடுக்க அரச தலைவரால் மாத்திரமே முடியும். பொதுமன்னிப்பின் அடிப்படையில் அரச தலைவர் ஞானசார தேரருக்கு விடுதலை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

சிறைக்கைதிகளுக்கு அரச தலைவரின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை வழங்கப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்கள் வரலாற்றில் பதிவாகியுள்ளன. எனவே அரச தலைவர் நாடு திரும்பியதும் இந்த விடயம் தொடர்பில் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். எதிர்காலத்தின் ஆட்சி அதிகாரத்தையும், ஆட்சியாளனையும் நிர்ணயிப்பது சிங்கள பௌத்தர்கள்தான் என்பதை அரச தலைவர் மறந்துவிடக் கூடாது.

நாடாளுமன்றத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்மக்களின் உரிமைகள்மற்றும்தேவைகள்என்பனதொடர்பில் குரல் கொடுக்கின்றனர். ஞானசார தேரருக்கு விடுதலை வழங்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் கோருவதற்கு எந்த வொரு பெரும்பான்மை இனப்பிரதிநிதியும் முன்வரவில்லை.

எதிர்காலத்தில் ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிக்கப் போவது சிங்கள பௌத்தர்கள் என்பதை இவர்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் - என்றார். (61)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழர்களின் அரசியல் துன்பியல்

பன்னாட்டுச் சமூகத்துக்குத் தான் வழங்கிய வாக்குறுதியை மீறுவது என்பது கொழும்பு அரசுக்கும் அதன் ஆட்சியாளர்களுக்கும் புதிதானஒன்றல்ல. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருந்தபோதும் பன்னாட்டுச்சமூகத்துக்குப் பலவாக்குறுதிகளைவழங்கியிருந்தார். குறிப்பாகப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் விடயத்தில் கொழும்பு எடுத்த மனிதாபிமானமற்ற அணுகுமுறைகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு இந்த வாக்குறுதிகளை அவர் பயன்படுத்திக்கொண்டார். போரை முடித்ததும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, நிரந்தரமான அரசியல் தீர்வை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பாற் சென்று வழங்குவேன் என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால்அந்தவாக்குறுதிஎதுவும்நிறைவேற்றப்படவில்லை.

அதற்குக்கிஞ்சித்தும் மாற்றமில்லாத அணுகுமுறையையே தற்போதையமைத்திரி–ரணில் ஆட்சியும்கைக்கொள்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பன்னாட்டுச் சமூகத்துக்குப்பகிரங்கமாகத்தான்வழங்கியவாக்குறுதியை அதுஅடியோடுநிராகரிக்கின்றது. போர்க்காலமீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் செயல்முறைகளில் வெளிநாட்டுப் பங்களிப்பை ஏற்போம் என்றும் அதற்கான செயல்முறையை உருவாக்குவதில்ஐ.நாவின்வழிகாட்டலையும்வல்லுநத்துவச் சேவையைப் பெறுவோம் என்றும் வழங்கிய வாக்குறுதியை அடியோடு நிராகரிக்கின்றது கொழும்பு.

அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குக் கடந்த 4 ஆண்டுகளில் ஒரு சிறு அடியைக்கூட எடுத்து வைக்காதது மட்டுமல்ல அதைப்பகிரங்கமாகச்சொல்லும்துணிவையும் இந்த ஆட்சியாளர்கள்கொண்டிருக்கின்றார்கள்என்பது அவர்கள் தமிழர்களின் பிரச்சினையை எந்தளவுக்குத் துச்சமாக மதிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

2015ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் இருந்தே பன்னாட்டுப் பங்களிப்பை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நிராகரித்து வந்திருக்கிறார். அது அவரது சொந்தக் கருத்து, பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதியிலிருந்துஅவரால்அப்படி இலகுவாகப்பின்வாங்கிச் செல்ல முடியாது; எப்படியென்றாலும் அவர் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தியேயாகவேண்டும் என்றெல்லாம் அப்போது தமிழ் அரசியல் தலைமைகளிடம் இருந்து கருத்துக்கள் வெளிப்பட்டன. பன்னாட்டுச் சமூகத்துக்குக் கொழும்புவழங்கியவாக்குறுதியிலிருந்துஅதனால்விலகிச் செல்ல முடியாது என்று அவர்கள் உறுதியாக வலியுறுத்தினார்கள்.

ஆனால், மைத்திரிபாலவின்உறுதியானநிலைப்பாட்டைத் தொடர்ந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் பின்னர்அதேநிலைப்பாட்டைப்பட்டும்படாமலும்வெளிப்படுத்தினார். இலங்கை போன்ற நாடுகளுக்கு இத்தகைய பன்னாட்டுப் பங்களிப்புடனான கலப்பு நீதிமன்றப் பொறிமுறைகள்சாத்தியமாகமாட்டாஎன்றுஅவரும்பகிரங்கமாகத் தெரிவித்தார். தமிழ்த்தலைவர்கள்அதைக்கேட்ட பின்னரும் பன்னாட்டுக்குவழங்கியவாக்குறுதியைமீறமுடியாது, அதனை நிறைவேற்றியே தீரவேண்டும், அப்படி நிறைவேற்றாது போனால்அது அடுத்தகட்டத்துக்குத்தமிழர்களின்அரசியல் முன்னேறுவதற்குவழிவகுக்கும்என்றெல்லாம்கூறினார்கள். குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னணித் தலைவர்களே இவ்வாறு வியாக்கியானப்படுத்தினார்கள்.

ஆனால் இன்றோ கொழும்பில் ஆட்சியுள்ள இரு தலைவர்களுமே பன்னாட்டுத் தலையீடு எமக்குத் தேவையில்லை என்றுவெளிப்படையாகவேகூறுகின்றார்கள். ஐ.நா. பொதுச் சபையில் இதனை ஒரு கோரிக்கையாகவே வெளிப்படுத்துகிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. லண்டனில் உரையாற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அதனையே வழிமொழிகிறார். அதனைக் கேட்டுவிட்டும் தமிழ்த் தலைவர்கள் வாளாவிருக்கிறார்கள் என்பது தமிழர்களின்அரசியல்துன்பியல். பன்னாட்டுச்சமூகம் இருக்கிறது, பன்னாட்டுச் சமூகம் பார்த்துக்கொள்ளும் என்று அவர்கள் சொல்லி வந்ததன் பொருள், சிங்களத் தலைமைகள் எதைச் செய்தாலும் பன்னாட்டுச் சமூகம் பார்த்துக்கொண்டுதான் இருக்கும்என்பதைத்தான்என்றுபுரிந்துகொள்ளாமல்விட்டது தமிழர்களின் தவறுதானா? காலம் காலமாகத் தமிழர்களை ஏமாற்றி வரும் சிங்களத்தலைமைகளிலிருந்து ஒருதுளியளவும் மாறிவிடாத மற்றொரு தலைமையைத்தான் தமிழர்களும் சேர்ந்து தெரிவு செய்திருக்கிறோம் என்பது பெரும் வெட்கக்கேடு!



# வடக்குக் கிழக்கு இணைப்பைப் பிரிப்பதே சிங்களக் குடியேற்றங்களின் குறிக்கோள்

**முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறுப் பகுதியிலும், மகாவலி 'எல்' வலயப் பகுதியிலும் அரச அனுசரனையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் பாரம்பரிய நிலங்களான வடக்குக் கிழக்கைப் பிரிக்கும் நோக்குடன் செயற்படுத்தப்பட்டு வருவதையும், தமிழர்களின் நிலங்களைப் பறித்து, அத்துமீறி, இராணுவத்தினரின் துணையுடன் அரசு சிங்களக் குடியேற்றங்களை நிறுவி வருவதையும் கீழ் வருமாறு சுட்டிக் காட்டுகின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன். அவரால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாராந்த கேள்வி – பதிலின் ஒரு பகுதி இது.**

**கேள்வி** - மணலாற்றில் தொடங்கிய சிங்களக் குடியேற்றம் மகாவலி அதிகார சபையால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. எமது வாசகர்கள் பலருக்கு முல்லைத்தீவு, வவுனியாப் பகுதிகளில் என்ன நடக்கின்றதென்றே தெரியாமல் இருக்கின்றது. அது பற்றி விளக்க முடியுமா?

**பதில்** - தாராளமாக! ஆனால் விளக்கம் பல பக்கங்களைப் பிடிக்கும். இந்த வாரம் ஒரு பகுதியைத் தந்து மற்றுமொரு வாரம் மிகுதியைத் தர எத்தனிக்கின்றேன்.


உயர் நிலத்தில் இருந்து மணலைப் பதிவான நிலங்களுக்கு வாய்க்கால் ஒன்று கொண்டு செல்லும்போது அதை மணல் ஆறு என்று குறிப்பிடுவது வழக்கம். முல்லைத்தீவில் உள்ள மணலாறு என்ற கிராமம் முக்கியத்துவம் பெற்றதற்குக் காரணம் அது முல்லைத்தீவு, அனுராதபுரம், திருகோணமலை மேலும் வவுனியா மாவட்டங்களின் எல்லைக் கிராமமாக விளங்கியதே. அண்மையில்தான் அதன் பெயர் வெலிஓயா என்று மாற்றம் செய்யப்பட்டது. இன்று 18 கிராமங்களைக் கொண்டிருக்கின்றது வெலிஓயா. தற்போது 11ஆயிரத்த 189 பேர்களை உள்ளடக்கிய 3ஆயிரத்து 336 குடும்பங்கள் இந்தக் குடியி ருப்பில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுள் பெரும்பான்மையோர் சிங்கள மக்கள்.

### தமிழ்க் குடிகளின் பாரம்பரிய நிலப்பகுதி அது

முன்னர் தற்போதைய வெலிஓயாவை உள்ளடக்கிய 42 கிராமங்களில் காலாதிகாலமாகத் தமிழ்க் குடும்பங்களே வாழ்ந்து வந்துள்ளன. கடைசியாக எடுத்த விவரங்களின்படி ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் குறித்த 42 கிராமங்களில் வசித்து வந்துள்ளன. மேற்படி கிராமங்கள் காலாதிகாலமாக விவசாயம் செய்து வந்த தமிழ்க் குடும்பங்கள் ஆகும். 1965ஆம் ஆண்டில் தொண்ணூற்றி ஒன்பது வருடக் குத்தகையில் இந்தக் குடியிருப்புக்களைச் சுற்றிய அரச நிலங்கள் தமிழ் வணிகப்பெருமக்கள் சிலருக்கு அரசால் வழங்கப்பட்டன. மேலும் 10 தொடக்கம் 50 ஏக்கர் வரை தனிநபர்கள் குத்தகைக்குப் பெற்றிருந்தார்கள். பெரிய வணிக நிறுவனங்கள் பல ஏக்கர் காணிகளைக் குத்தகைக்குப் பெற்றிருந்தன. 16 நிறுவனங்கள் ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் குத்தகைக்குப் பெற்றிருந்தன. நாவலர் பண்ணை, சிலோன் தியேற்றர்ஸ் பண்ணை, கென்ட் பண்ணை, புகையிரதக் குழுப் பண்ணை, தபால் அதிபர்கள் குழுப் பண்ணை, டொலர் பண்ணை போன்றவை இவற்றுள் அடங்கின.

### இராணுவத்தைக் கொண்டு தமிழ்க் குடும்பங்கள் விரட்டப்பட்டன

தமிழ் முதலீட்டாளர்கள் பதினான்கு பேருக்குக் கொடுத்த மேற்படி 99 வருடக் குத்தகைகளை 1984ஆம் ஆண்டில் நீக்கம் செய்து, 42 கிராமங்களிலும் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களை இராணுவம் கொண்டு விரட்டி அடித்தது அரசு. மேற்படி கிராமங்கள் தோறும் பெரிய கவச வாகனங்களில் சென்ற இராணுவத்தினர் 48 மணித்தியாலங்களுக்குள் தமிழ்க் குடும்பங்கள் தமது வீடு, காணிகளை விட்டு வெளியேற வேண்டும் என்று கட்டளை இட்டனர். அவ்வாறு வெளியேறாதோர் பலவந்தமாக வெளியேற்றப்படுவார்கள் என்று ஒலி பெருக்கிகள் மூலம் அறிவித்து மக்களை அகற்றினர்.



இந்த இடங்களில் சிங்களவரை இராணுவம் குடியேற்றுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் போர் மூண்டது. இந்தக் காலப் பகுதியில்தான் வரலாற்றுத் தடம் பதித்த ஒதியமலைப் படுகொலைகள் இராணுவத்தால் அரங்கேற்றப்பட்டன. ஒதியமலைக் கிராமத்தை ஒரு நாள் விடியற்காலை நேரம் சுற்றி வளைத்த இராணுவத்தினர் அந்தக் கிராமத்தில் வசித்து வந்த வயது வந்த ஆண்கள் அனைவரையும் ஓதியமல்லைச் சனசமூக நிலையத்துக்கு அழைத்துச் சென்று படுகொலை செய்தனர். •

### வடக்குக் கிழக்கைப் பிரிப்பதே அரசின் குறி

வடக்கையும் கிழக்கையும் நிலத்தால் இணைந்திருக்கும் வகையிலான தமிழர் வாழ் இடங்களாகத் தொடர்ந்திருக்க விடுவதற்கு அரசு விரும்பாததாலேயே இன்று மகாவலியைக் காரணம் காட்டிச் சிங்களக் குடியேற்றங்களுக்கு அரசு வித்திட்டுள்ளது. மணலாற்றுடன் அரசின் கபடத் திட்டம் முடிவடையவில்லை. தற்போதைய அரசு கிழக்கு மாகாணத்தில் வட முனையில் (மதுறு ஓயாவின் நதிப்படுக்கை நிலத்தில்) சட்டத்துக்கு மாறாகக் குடியிருந்த சிங்களக் குடும்பங்களை (அவர்கள் அங்கு தொடர்ந்திருப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டுள்ளதால்) பதவிய எல்லைப் புறங்களில் கொண்டு வந்து குடியேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றது. அங்கிருந்து நெடுங்கேணி வரை சிங்களத் தொடர் குடியேற்றத்தை ஏற்படுத்த

வேண்டும் என்பதே அரசின் குறிக்கோளாகத் தெரிகின்றது. வடமாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் இடையில் ஒரு சிங்களவர் வாழ் இடைநிலத்தை உண்டாக்கி வடக்குக் கிழக்கு இணைப்பை ஏற்படாது தடுப்பதே அரசின் குறிக்கோள்.

### நிலப் பறிப்புகளும் இராணுவ நகர்வுகளும்

ஆரிய குண்டம், டொலர் பண்ணை ஆகிய இடங்களில் காடு பற்றிப்போய் இருக்கும் நிலங்கள் துப்புரவாக்கப்படுகின்றன. நான்கு தெருக்கள் பதவியாவில் இருந்து டொலர் பண்ணை, கும்பகர்ணன் மலை, ஆரிய குண்டம், கொக்குச்சான் குளம், கொக்குத் தொடுவாய், வெடுக்கன் மலை ஆகிய இடங்களுக்குத் திறந்தாகிவிட்டது. தற்போது இராணுவம், ,விவசாய சேவைகள் அமைச்சு, இல்மனைட் கூட்டுத்தாபனம், புகையிலைக் கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களின் வாகனங்கள் ஆகியன இந்த அரச திட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தில் பாவிக்கப்பட்டு வருகின்றன.

டொலர் பண்ணை அருகே ஏற்கனவே சிங்களக் குடியேற்றம் நடந்தாகி விட்டது. தமிழ் பேசும் வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்களுக்கோ, பிரதேச செயலாளர்களுக்கோ, காணி அலுவலர்களுக்கோ அங்கு நடைபெற்று வருவதன் சூட்சுமம் தெரிந்துள்ளதாகத் தெரியவில்லை. அவர்களும் அரசுக்குப் பயந்து அதைத் தெரிந்து கொள்ள முனையவில்லையோ அல்லது தெரிந்தும் மௌனம் காத்து வருகின்றார்களோ தெரியவில்லை. அந்தப் பிரதேசம் இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்டு அங்கு நடப்பவை அனைத்தும் அந்தரங்கமாகவே நடைபெற்று வருகின்றன. முல்லைத்தீவு எல்லைக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் புல்டோசர்கள் எனப்படும் நிலச்சமன் பொறிகள் அங்கு இரவில் வேலை செய்யும் சத்தத்தைக் கேட்டு வருகின்றார்கள். நீர் தாங்கிச் செல்லும் பெரிய குழாய்கள் அங்கு கொண்டு செல்வது காணப்பட்டுள்ளது.

### ஆரம்பத்தில் வெலிஓயா என்றோர் இடம் இருக்கவில்லை

1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதிய வர்த்தமானி அது காறும் மணல் ஆறு என்றழைக்கப்பட்ட இடத்தை வெலிஓயா என்று குறிப்பிட்டுள்ளது. அதற்கு முன்னர் அங்கு வெலிஓயா என்றொரு இடம் இருக்கவில்லை. அதன் பின்னர் வெலி ஓயா இலங்கையின் ஒரு தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. பதவியாவுக்கு வடக்கில் இருந்த மணல் ஆறு பதவியவுடன் சேர்த்து வெலிஓயா என்ற நாமத்துடன் 1987ஆம் ஆண்டில் அனுராதபுர நிர்வாக மாவட்டத்தினுள் உள்ளேற்கப்பட்டது. முதலில் 1984ஆம் ஆண்டில் காணி ஆணைக்குழுவின் கீழ் உலர்ந்த வலய விவசாயக் குடியிருப்பாகத் தொடங்கிய மணல் ஆறு, பின்னர் 1988ஆம் ஆண்டில் மகாவலி பொருளாதார முகவாண்மையத்தால் கையேற்கப்பட்டது. அதன் பின்னர் அது மகாவலி 'எல்' வலயமாக அறிவிக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி மணல் ஆறு உத்தியோகபூர்வமாக வெலிஓயாவாகப் பெயர் மாற்றப்பட்டது.

இங்குதான் மணலாறில் தொடங்கிய பெரும்பான்மையினரின் பெருந்திட்டம் மகாவலியூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை தெரிய வருகிறது.

### மகாவலி பாயப்போகும் இடங்கள் வலயமாக்கப்படும்

மகாவலி நீர் வரப்போகின்றது என்று கூறியே அதன் நீர் கொண்டு செல்லப்போகும் இடங்கள் வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டன. இன்று வரையில் மகாவலி நீர் ஒரு சொட்டேனும் வடமாகாணத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. தற்போதைய நிலையில் வரப்போவதுமில்லை. ஆனால் அதைச்சாட்டாக வைத்துச்சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. குடியேற்றங்களில் மக்களை இருத்தும்போது அந்த ஊர் மக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அவ்வாறு எவரும் முன்வராத நிலையில் முதலில் அந்தப் பிரதேசத்துக்கும் பின்னர் மாவட்டத்துக்கும் அதன் பின் மாகாணத்துக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதுவே பன்னாட்டு ரீதியாக ஏற்கப்பட்டுள்ள நடைமுறை. தமிழ்த் தலைவர்களுடன் அரசு முன்னர் செய்து கொண்ட (பின்னர் கைவிடப்பட்ட) உடன்பாடுகளில் மாகாணத்தில் தமிழ் மக்கள் முன்வராவிடில் நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று கூடக் கூறப்பட்டிருந்தது. இவற்றை எல்லாம் புறந்தள்ளியே சிறை சென்று வந்த சிங்களக் குற்றவாளிகளை இந்த இடங்களில் குடியேற்றியது அப்போதைய அரசு. அதாவது வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு நடுவில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற கபட நோக்குடனேயே சிங்களத் தலைவர்கள் இது காறும் காய் நகர்த்தி வந்துள்ளனர்.

### புலிகளால் இவர்கள் விரட்டப்பட்டனர்

போர்க்காலத்தில் விடுதலைப்புலிகளால் மேற்படிச் சிங்களக் குடியேற்ற வாசிகள் விரட்டப்பட்டனர். போர் முடிந்த பின்னர் வெலிஓயா செயற்றிட்டத்தின் கீழ் மகாவலி அதிகாரசபை மணல் ஆறு இருந்த இடங்களில் எல்லாம் மீண்டும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியது. அவர்களின் திட்டம் முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, அனுராதபுர மாவட்டங்களை இணைப்பதாக அமைந்தது.

> போரின் போது சிங்களக் குடியேற்ற வாசிகள் விரட்டப்பட்டார்கள். போர் முடிந்ததும் முன்னர் சிங்களவர் வசித்த இடங்களில் நாம் அவர்களைக் குடியிருத்துகின்றோம் என்று கூறிப் பாரம்பரியமாக அங்கு குடியிருந்த சிங்களவரை விடுதலைப் புலிகள் விரட்டியதாகவும் அவர்களை அரசு போர் முடிந்த பின்னர் குடியேற்றுவதாகவும் ஊர் உலகத்துக்கு அறிவித்தே மேற்படி சிங்களக் குடியேற்றத்தை வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கின்றன அரசுகள்.



முன்னர் தமிழ் மக்கள் இருந்த இடங்களில் பலவந்தமாகச் சிங்கள மக்கள் அரசால் போருக்கு முன்னர் குடி யேற்றப்பட்டார்கள். போர் வரக் காரணங்களில் ஒன்று இவ்வாறான சிங்களக் குடியேற்றங்களே. போரின் போது சிங்களக் குடியேற்ற வாசிகள் விரட்டப்பட்டார்கள். போர் முடிந்ததும் முன்னர் சிங்களவர் வசித்த இடங்களில் நாம் அவர்களைக் குடியிருத்துகின்றோம் என்று கூறிப் பாரம்பரியமாக அங்கு குடியிருந்த சிங்களவரை விடுதலைப் புலிகள் விரட்டியதாகவும் அவர்களை அரசு போர் முடிந்த பின்னர் குடியேற்றுவதாகவும் ஊர் உலகத்துக்கு அறிவித்தே மேற்படி சிங்களக் குடியேற்றத்தை வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கின்றன அரசுகள்.

### அனைத்து வசதிகளும் செய்துவருகிறது அரசு

தமிழர் வாழ்ந்த இடங்களில் சிங்கள மக்களைக் குடியிருத்தி, அவர்களுக்குக் காணி கொடுத்து, வீடு கட்டுவதற்குப் பணம் கொடுத்து, சிறப்பு அதிரடிப்படையைக் கொண்டு பாதுகாப்பும் கொடுத்து வருகின்றது அரசு. நான்கு மாவட்டங்களுக்கு உட்பட்ட மகாவலி செயற்றிட்டத்தின் நிர்வாகம் அனுராதபுரத்தில் இருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதனால் தான் மற்றைய மாவட்ட அரச அதிபர்களுக்கோ, அலுவலர்களுக்கோ அங்கு என்ன நடைபெறுகின்றது என்று தெரிவதில்லைப் போலும்.

### மகாவலி அதிகார சபையின் பின்னணி

இந்தத் தருணத்தில் மகாவலி அதிகாரசபை பற்றிய சில விளக்கங்களைத் தருவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். 1979ஆம் ஆண்டில் 23ஆவது சட்ட மூலமாகவே மகாவலி அதிகாரசபை உருவானது. அதன் மூன்றாம் சரத்து முக்கியமானது. அரச தலைவருடைய ஒப்புதலோடு உரிய அமைச்சரின் கருத்துப்படி மகாவலி கங்கையின் நீரை அல்லது வேறேதேனும் முக்கிய நதியின் நீரை எங்கெல்லாம் பாவித்து அங்கு முன்னேற்றம் காண முடியுமோ அந்த இடத்தை அவர் வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் 'விசேட நிலப்பகுதி' என்று அதை அறிவிக்கலாம். இவ்வாறான அறிவிப்பு நாடாளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். சகல சிங்கள மக்கள் பிரதிநிதிகளும் அமைச்சரின் இவ்வாறான கருத்தை ஏற்கத் தவற மாட்டார்கள். அதன் அடிப்படையில்த்தான் 1988ஆம் ஆண்டில் ஒரு சிறப்பு வர்த்தமானி மூலம் மகாவலி 'எல்' வல யம் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின் 2007ஆம் ஆண்டில் இன்னொரு வர்த்தமானியில் அது மேலும் விஸ்த ரிக்கப்பட்டது. இது முழுக்க முழுக்க வடக்கையும் கிழக்கையும் பிரிக்குமுகமாகவே மகாவலி நீரைச் சாட்டாகக் கொண்டு மகாவலி அதிகாரசபை வடமாகாணக் காணிகளைக் கையேற்றுள்ளது. மணலாறில் தொடங்கி தற்போது மகாவெலி மூலம் சிங்களக் பேராதிக்கம் வடமாகாணத்தில் தொடர்கின்றது.

## ஆசிரியருக்கான கடிதம்

# பறிபோகும் தமிழர் தாயகப் பிரதேசங்கள்! தடுக்க யார் முன்வருவார்?

மாறி மாறி, ஆட்சிக்குவரும் சிங்கள இனவாத, பௌத்த மேலாதிக்கம் கொண்ட அரசுகளாலும், இனவெறியர்களாலும், பௌத்த துறவிகளின் தீய கொள்கைகளாலும் திட்டமிட்டுத் தமிழர் தாயகப் பிரதேசங்களில் வரலாற்றை மாற்றியமைக்கும் கைங்கரியங்கள் இடம்பெற்று வருகின்றன.

அவை சிங்களக் குடியேற்றங்களை நிறுவுதல், சிங்கள மக்கள், பௌத்தர்கள் இல்லாத இடங்களில் புத்த விகாரைகளைத்திட்டமிட்டுஅமைத்தல்என்ற அடிப்படையில் சத்தம் சந்தடியின்றி எம் இனத்தை அழிக்கும் செயலாக பரிணாமம் கொண்டுள்ளது.

தமிழர் தாயக மண் மீட்புக்கான எமது விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், தமிழர் தாயகம் சிங்களவரிடம் பறிபோகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எமது தாயாக பூமியான வடக்குக் கிழக்கில் நடைபெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், பௌத்த விகாரைகளின் கட்டுமானம், புத்தர் சிலைகளின் எழுந்தருளல் ஆகியவற்றுக்கு எதிராக தமிழ் தலைமைகள் குரல் கொடுப்பதாகத் தெரிய வில்லை. மாறாக தங்களது அரசியல் தேவைக்காகக் குரல் கொடுத்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இவற்றை எதிர்த்து உரிய தீர்வு காணாமல்; மௌனம் காத்ததால் நிச்சயம் தமிழினம் நிரந்தர அரசியல் அடிமையாக, அநாதைகளாக ஆக்கப்பட்டு அழிக்கப்பட்டு விடும். அரசியல் உரிமைகள் வழங்கப்படாமல் தொடரும் ஒடுக்கு முறைகளால், தமிழின அடையாளங்களை இழக்க நேரிடும் என்பதைத் தீர்க்கதரிசனத்துடன் எமது தமிழ்த் தலைமைகளுக்கு எடுத்துரைக்கிறேன். கட்சி பேதமின்றித் தமிழர் தாயகத்தில் நடக்கும் மேற்படியான விடயங்களைத் தடுத்துநிறுத்துவதற்கு யார் முன்வருவார்? அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டாலேயே இதற்கு முடிவு கட்ட முடியும்.

வ.க.ஜெயபாலன்

# ஐ.நா.வுக்கான தூதர் நிக்கி ஹாலே திடீர் பதவி விலகல்!

நியூயோர்க்.ஒக்.11

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதராகப் பணியாற்றி வந்த நிக்கி ஹாலே தனது பதவியைத் திடீரெனத் துறந்துள்ளார். தன்னுடைய பதவி விலகல் குறித்த முடிவை அவர் செவ்வாய்க்கிழமை அறிவித்திருக்கிறார். "ஐக்கிய நாடுகள் சபையில் தினந்தோறும் அமெரிக்காவுக்காக வாதாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எனது நாட்டுக்காக நான் சண்டையிடும் போது எந்தத் தருணத்திலும் நான் பின்வாங்கவில்லை. இருப்பினும் இதுதான் நான் விடைபெறுவதற்குச் சரியான தருணம் என்று நினைக்கிறேன்" என்று அவர் தனது பதவி விலகல் குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

நிக்கி ஹாலேவின் பதவி விலகலை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஏற்றுக் கொண்டதாகவும், இந்த முடிவை 6 மாதங்களுக்கு முன்னரே நிக்கி ஹாலேவின் அறிவித்திருந்ததாகவும் வெள்ளை மாளிகைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிக்கி ஹாலே சிறிய இடைவேளைக்குப் பிறகு மீண்டும் வேறு பதவிக்குத் திரும்புவார் என்று ட்ரம்ப் நம்பிக்கை வெளியிட்டதாகவும் வெள்ளை மாளிகை குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்குக் கரோலினா மாகாணத்தின் ஆளுநராக இருந்த 44 வயது நிக்கி ஹாலே ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதராக 2016ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டவர். அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் நிர்வாகத்தில் உயர் பதவிகளில் இருந்த ஒருவராகத் திகழ்ந்தார். ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்கத் தூதர் போன்ற மேல்மட்ட நிர்வாகப் பதவிக்கு முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட பெண்ணாக நிக்கி ஹாலே இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# இராணுவ ஆயுதக் கிடங்கில் தீ விபத்து உக்ரைனில் 15ஆயிரம் பேர் வெளியேற்றம்


கிவ்.ஒக்.11

உக்ரைனில் இராணுவத்தினரின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து அந்த இடத்தைச் சுற்றிவாழ்ந்த 15ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளதாக உக்ரைனின் பாதுகாப்புத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. உக்ரைன் நாட்டில் வட செர்னிகிவ் பகுதியில் டிருஷ்பா என்ற கிராமத்தில் இருந்த இராணுவ ஆயுதக் கிடங்கே இவ்வாறு தீ விபத்துக்குள்ளாகியிருக்கிறது.

இது ஆயிரத்து 700 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அங்கு திடீரெனப் பரவிய தீ காரணமாக அங்கிருந்த வெடி பொருள்கள் வெடித்துச் சிதறின. தொடர்ந்து வெடிப் பொருள்கள் வெடித்துக் கொண்டிருந்தன. இதனால் அந்தப் பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. நெருப்புப் பந்துகள் வானில் எழுந்தன. தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்தில் சாவடைந்தவர்கள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. தீ விபத்தக்கான காரணமும் அறியப்படவில்லை. புகை மூட்டத்தில் சிக்கி 60 பேர் மயக்கம் அடைந்திருக்கின்றமை தெரியவந்திருக்கிறது.





# "ஒபாமாவைப்போல நான் கையாலாகாதவன் இல்லை"

## சீனாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

வோசிங்டன்.ஒக்.11

"கடந்த காலத்தில் அமெரிக்காவை ஆட்சி செய்த ஒபாமா அரசைப் போன்று நான் கையாலாகாதவனாக இருக்கமாட்டேன், தகுந்த பதிலடி கொடுப்பேன்" என்று சீனாவுக்கு அமெரிக்க அதிபர் டரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ சீனாவுக்குக் கடந்த வாரம் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அமெரிக்காவுக்குத் திரும்பியிருந்த அவருடன் அதிபர் டரம்ப் ஆலோசனை நடத்தியிருந்தார். அதன்பின் வெள்ளைமாளிகையில் ஊடகங்களுக்கு அதிபர் ட்ரம்ப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது, "தெற்குச் சீனக் கடல் விவகாரத்தில் இதற்கு முன் அமெரிக்காவை ஆட்சி செய்த ஒபாமா அரசு கையாளாகாத தனத்துடன் செயல்பட்டது. அதனால் தான் தெற்கு சீனக் கடல்பகுதியில் சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதுபோன்று என்னுடைய அரசு இருக்காது. பிரச்சினைக்குரிய கடற்பகுதியில் சீனாவின் இராணுவம் தொடர்ந்து அச்சுறுத்தல் விளைவித்து வருகிறது. இதில் நாங்கள் பொறுமை காக்க மாட்டோம். நாங்கள் சீனாவுக்குத் தகுந்த பதிலடி கொடுப்போம். அயலுறவுத்துறை அமைச்சர் பாம்பியோ சீனாவுக்குச் சென்று வந்துள்ளார். அவரிடமிருந்து சீனா எனக்குப் பல செய்திகளை அனுப்பியிருந்தாலும், அதனால், எந்தப் பயனும் இல்லை. பீஜிங் சென்ற பாம்பியோவுக்கு நல்ல மரியாதை கொடுக்கப்பட்டது மகிழ்ச்சிதான். ஆனால், அங்கு சீன அதிகாரிகளுடன், பாம்பியோ நடத்திய பேச்சு எந்த விதத்திலும் முன்னேற்றம் அளிக்கவில்லை. இதனால் சீனாவுக்கு எங்களுடைய பயணம் சிறப்பானதாக இருந்தது எனச் சொல்ல முடியாது". என்று கடும் தொனியில் பேசியிருக்கிறார். அமெரிக்க அதிபரின் இந்தப் பேச்சிலிருந்து தெற்கு சீனக் கடல் பிரச்சினையில் சீனாவும், அமெரிக்காவும் மீண்டும் மோதல் போக்கைத் தொடங்கியுள்ளது தெரிகிறது. இதனால், தென் சீனக் கடல்பகுதியில் விரைவில் அமெரிக்கா தனது கடற்படையைக் குவிக்கலாம் என அரசியலவதானிகள் கருதுகின்றனர்.

**பின்னணி**



தெற்குச் சீனக் கடலில் செயற்கையாகத் தீவு அமைப்பதற்குச் சீனா தொடர்ந்து முயற்சித்து வருகிறது. அந்தக் கடல்பகுதியில் ஜப்பான், வியட்நாம், மலேசியா, புருனே, தாய்வான் ஆகிய நாடுகள் தங்களின் உரிமையை நிலைநாட்ட விரும்புகின்றன. சீனா அதற்குத் தடையாக இருந்து மற்ற நாடுகளைத் தனது படை பலத்தால் அச்சுறுத்தி வருகிறது.

தெற்கு சீனக்கடல் இயற்கை வளங்கள் நிறைந்தது. எண்ணெய் வளம், தாதுப் பொருள்கள் நிறைந்த கடற்கரை என்பதால் அங்கு அனைத்து நாடுகளும் தங்களின் உரிமையை நிலைநாட்ட விரும்புகின்றன. ஆனால், தெற்கு சீனக் கடல் பரப்பு முழுவதையும் சீனா தனது பிடிக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதனால், ஜப்பான், மலேசியா ஆகிய நாடுகளுக்கு ஆதரவாக அமெரிக்கா தனது போர்க்கப்பல்களை நிறுத்தியும், அந்தப் பகுதியில் ரோந்து வரும் செயலையும் கடந்த காலங்களில் செய்தது. அமெரிக்க அதிபராக ஒபாமா இருந்த காலத்தில், தெற்கு சீனக் கடல் பிரச்சினை இருந்தபோதிலும் கூட, அந்தப் பகுதியில் அமெரிக்கா தனது போர்க் கப்பல்களை நிறுத்திச் சீனாவுக்கு மிரட்டல் விடுத்து வந்ததே தவிர மேற்கொண்டு எந்த நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை. இந்த நிலையிலேயே ட்ரம்பின் இந்தப் பேச்சு வெளிவந்திருக்கின்றது.

# "வடகொரியாவுக்கு வாருங்கள்"

## போப் ஆண்டவருக்கு வடகொரிய அதிபர் அழைப்பு

பியோங்யாங்.ஒக்.11

வத்திக்கானில் உள்ள போப் ஆண்டவர் 'பிரான்சிஸ்' ஐ வடகொரியாவுக்கு வருகைதருமாறு அந்த நாட்டின் அதிபர் கிம் ஜோங் உன் அழைப்பு விடுத்துள்ளதாகத் தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கு முன்னர் 2000ஆம் ஆண்டில், அப்போதைய அதிபரான கிம் ஜோங் இல் அப்போது போப் ஆண்டவராக இருந்த இரண்டாம் ஜோன் பாலுவை வடகொரியாவுக்க வருமாறு அழைப்பு விடுத்து இருந்தார். அவரது அழைப்பை ஏற்று வடகொரியாவுக்குச் சென்றிருந்தார் இரண்டாம் ஜோன் பால். அதுவே வடகொரியாவுக்குப் போப் ஆண்டவர் சென்றிருந்த முதலும் கடைசியுமான நிகழ்வு ஆகும்.

இந்த நிலையில், தற்போதைய போப் ஆண்டவருக்கு வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை அடுத்த வாரம் வத்திக்கான் செல்ல இருக்கும் தென்கொரிய அதிபர் மூன் ஜே போப் ஆண்டவரிடம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிப்பார் எனத் தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# அதிநவீன ஆளில்லா விமானங்களைப் பாகிஸ்தானுக்கு விற்கிறது சீனா

பீஜிங்.ஒக்.11
அனைத்துக் காலநிலையிலும் பறக்கக்கூடிய அதிநவீன ஆளில்லா இராணுவ விமானங்கள் 48ஐச் சீனா அரசு பாகிஸ்தானுக்கு விற்பனை செய்யவுள்ளது. அந்த இரண்டு நாடுகளுக்கு இடையே நடக்கும் மிகப்பெரிய இராணுவத் தளவாடக் கொள்முதல் இது என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு குறித்து இதுவரை தெரிவிக்கப்படவில்லை. சீனாவில் உள்ள செங்டு விமானத் தயாரிப்புக் குழுவும், அரசதுறையும் இணைந்து இந்த ஆளில்லா இராணுவ விமானங்களைத் தயாரிக்கின்றன. இந்த விமானங்கள் மூலம் கண்காணிப்புப் பணி, தாக்குதல் ஆகியவற்றைச் செய்ய முடியும். கடந்த ஆண்டு டிசம்பர் மாதமே விங் லூாங் வகை இராணுவ ஆளில்லா விமானங்களைப் பாகிஸ்தானுக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டு மாதிரி விமானமும் அனுப்பப்பட்டிருந்தது.




அந்த ஆளில்லா இராணுவ விமானங்கள் மூலம் பாகிஸ்தான் பல்வேறு கட்ட சோதனைகளைச் செய்துள்ளது. இலக்குகளைக் குறிவைத்துத் தாக்குதல், நகரும் இலக்குகளைத் தாக்குதல், தரை இலக்குகளைத் தாக்குதல் போன்றவற்றை வெற்றிகரமாகச் செய்துள்ளதைத் தொடர்ந்து இந்த விமானங்களை வாங்குவதற்குப் பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. இந்தியாவுக்கு போட்டியாகப் பாகிஸ்தானுக்கு அதிநவீன ஆளில்லா இராணுவ விமானங்களைச் சீனா விற்பனை செய்ய உள்ளது என்று பாகிஸ்தானின் அயல், எதிரி நாடான இந்தியா தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# துருக்கியில் படகு விபத்து 4 பேர் சாவு 30 மாயம்



அங்கார , ஒக்.11
துருக்கியை நோக்கிப் புலம்பெயர்ந்து வந்தவர்களின் படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் 4 பேர் சாவடைந்துள்ளனர்.
30 பேர் நீரில் மூழ்கிப் போய்விட்டதாக அந்த நாடுதெரிவித்துள்ளது. இதுகுறித்துதுருக்கியின் உள்துறை அமைச்சகம் தரப்பில், 'துருக்கியின் இஸ்மிர் மாகாணத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் துருக்கிக்கு புலம்பெயர வந்தவர்களின்படகு அலைச்சீற்றத்தால்விபத்துக்குள்ளானது. அதில் 4 பேர் சாவடைந்துள்ளனர்.
30 பேர் மாயமாகினர். படகில் எத்தனை பேர் வந்தார்கள் என்ற உறுதியான தகவல் தெரியவில்லை. காணாமல்போனவர்களைத்தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
துருக்கியைப் பொறுத்தவரை மத்திய கிழக்கு நாடுகளில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பெருமளவு இடம்பெயரும் முக்கிய நாடாக இருக்கிறது. ஏமன், சிரியா போன்ற நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் துருக்கிக்கு கடல் வழியாக இடம்பெயர்ந்துள்ளனர். அவற்றில் பலரதுபடகுகள்விபத்துக்குள்ளானசம்பவங்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளன.
இதனைத் தடுப்பதற்கு போதிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை துருக்கி அரசு எடுத்து வந்தாலும், இந்த மாதிரியான விபத்துகள் அவ்வப்போது இடம்பெற்று வருகின்றன.





## காணாமல்போன பத்திரிகையாளர் விவகாரம்

### துருக்கி குற்றச்சாட்டு

# பத்திரிகையாளர்கள் போராட்டம்

இஸ்தான்புல்.ஒக்.10
ஜமல்கஷோக்கிஎன்றபிரபலஊடகவியலாளர் சவூதி அராபியாவில் காணமற்போயிருந்தார். இவர் கடைசியாக சவூதியிலுள்ள இஸ்த்தான்புல் வெளிநாட்டுத்தூதரகத்துக்குள்சென்றிருந்த நிலையிலேயே அவர் காணாமல் போயிருந்தார். இந்தஊடகவியளாளர் பற்றியவிவரங்களைச்சவூதிஅராபியா பகிரங்கமாக வெளியிடவேண்டும்.
என அமெரிக்காவின் இராஜாங்கச் செயளாளர் மைக் பாம்பியே கேட்டுக் கொண்டுள்ளார். அத்துடன்அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பும் தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தனர்.
இந்த நிலையில், "காணாமல்போன அந்தப்பத்திரிகையாளர்சவுதிஅரசைத் பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம். இதன் பின்னணியில் சவூதி உள்ளது" என்று கூறியுள்ளனர்.
இந்த விவகாரம் குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ கூறும்போது, "ஜமல் காணமல்போய் இருப்பது குறித்து விசாரணையை நடத்துவதற்குச் சவூதியின்உதவியை அணுகியுள்ளோம். சவூதி நடத்தும் விசாரணை வெளிப்படையாக இருக்க வேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார். இந்த நிலையில் ஜமலுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி உடனடியாக தெரிவிக்க வேண்டும்என்றுஇஸ்தான்புல்லில்பலஇடங்களில்பத்திரிகையாளர்கள்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த




தீவிரமாக விமர்சித்து வந்தவர் என்பதால்அவர்கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்றும் துருக்கி குற்றம் சாட்டியிருக்கிறது.
ஜமல் கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்காவில்தங்கியிருந்துசவூதிஇளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்துப் பலகட்டுரைகளை எழுதி வந்தவர். ஜமல் துருக்கியைச் சேர்ந்த பெண்ணைஅடுத்தவாரம்திருமணம் செய்யவிருந்த நிலையிலேயே அவர் காணாமல் போய் இருக்கிறார். இந்த நிலையில் ஜமல் காணாமல் போனது குறித்து துருக்கி அதிகாரிகள், ' ஜமல் இஸ்தான்புல்லிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்திலிருந்துகடத்திச்செல்லப் நிலையில் காணாமற்போயுள்ள பத்திரிகையாளர்பற்றியதிடுக்கிடும்தகவல் ஒன்றை இஸ்லமாபாத்திலிருந்து வெளியாகும் 'சபா'என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது. சவூதியின்புலனாய்வுத்துறையைச் சேர்ந்த 15 பேர் அடங்கியகுழுவொன்றுஇந்தப்பத்திரிகையாளர்கடத்தலுடன்சம்பத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு, அவர்களின் சகல விவரங்களும் தங்களுக்குத் தெரியும் என்று அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது
ஈரான் விவகாரம் காரணமாக துருக்கி மற்றும் சவூதி இடையே மோதல் ஏற்பட்ட நிலையில் ஜமல் காணாமல்போயிருப்பது குறிப்பிடத்தக்கது.



# தேர்தல் பரப்புரைப் பேரணியில் தலிபான்கள் தாக்குதல் ஆப்கானிஸ்தானில் 8 பேர் சாவு!

காபுல்.ஒக்.11
ஆப்கானிஸ்தான் நாட்டில் ஹெல்மன்ட் மாகாணத்தில் தேர்தல் பிரசார கூட்டத்தின் மீது தலிபான்கள் நடத்திய குண்டுவீச்சுத்தாக்குதலில் 8 பேர்சாவடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் வருகின்ற 20ஆம் திகதி தேர்தல் இடம்பெறுகிறது. வாக்குப்பதிவுக்கு இன்னும்சில நாள்களே இருப்பதால் அங்கு பரப்புரை சூடு பிடித்துள்ளது.
இந்நிலையில், நாட்டின் கிழக்கு பகுதியான ஹெல்மன்ட் மாகாணத்துக்குட்பட்ட லஷ்கர்கா நகரின் அருகே சாலே முஹம்மது அச்சக்ஸாய் என்ற வேட்பாளர் பரப்புரையில் ஈடுபட்டபோது தலிபான் ஆயுதாரிகள் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். இதில் 8 பேர் சாவடைந்துள்ளனர்.
வேட்பாளர் சாலே முஹம்மது அச்சக்ஸாய் உள்படபலர்காயமடைந்தனர். காயமடைந்த சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இந்த தாக்குதலில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

## ருவீற்ஸ்

**வாத்தியார்@JThiruStr**



வாழ்கையில
எவ்வளவு கஷ்டம்
வந்தாலும்
சூடு சொரணை
இல்லாம சிரிச்சிட்டே
போய்டனும்.

**சிலந்தி™ @NANDHU_TWITTS**



"கடவுள்" போல வந்து
காப்பாற்றியவர்கள்...
"எந்த மதமாகவும்"
இருக்கலாம்..!!

**சிற்பன்© @SKTWTZ**



வெட்ட
வருபவனையும்
தலைகுனிந்து
ஏற்கும் இடம்...
சலூன் கடை!

**BHARATHKUMAR**



எண்ணெய்ப்
பலகாரங்களை அதிகம்
விரும்பி
உண்பவர்களை
"ஆயில் கைதிகள்"
எனலாம்.

# இரட்டைவேடத்தில் நயன்தாரா





தொடர்ந்து வெற்றிப்படங்களைக் கொடுத்துவரும் லேடி சுப்பர் ஸ்டார் நயன்தாரா முதன்முறையாக 'ஐரா' என்ற படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தின் முதல் சுவரொட்டி வெளியாகியுள்ளது.

காதல் படங்களில் மட்டுமே தலைக்காட்டி வந்த நயன்தாரா, மாயா, டோரா போன்ற பேய் படங்களில் நடித்து பார்வையாளர்களை வியப்பூட்டியிருந்தார். அந்த வகையில் தற்போது வெளியாகியுள்ள 'ஐரா' பட சுவரொட்டியிலும் நயன் திகில் வேடத்தில் காட்சி தருகிறார்.

லக்ஷ்மி, மா என்ற குறும்படங்களை இயக்கிவந்த சர்ஜுன். கே. எம் இயக்கும் இந்த படத்தை கே. ஜே. ஆர். ஸ்டூடியோஸ் நிறுவனம் தயாரிக்கிறது. சுந்தர மூர்த்தி இசையமைக்கும் இந்தப் படம் நயன் தாராவின் 63 ஆவது படமாக வெளிவர வுள்ளது. எனவே இந்தப் படமும் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

கலர்கலரான மிட்டாய்
சாப்பிடும் பருவத்தில்
தொடங்கி....



கலர்கலரான மாத்திரை
சாப்பிடும் பருவத்தில்
முடிகிறது... வாழ்க்கை..!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எண்ணத்தில் புதுமை நிறைந்திருக்கும். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமான வகையில் அபிவிருத்தியாகும்.

**இடபம்:** சிலரது விமர்சனத்தால் மனத்தளர்ச்சி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளைத் தாமதமின்றி சரி செய்யவும். வேண்டிய அளவில் பணவரவு இருக்கும்.

**மிதுனம்:** அதிக உழைப்பால் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி அதிகரிக்கும். இலாபம் ஓரளவுக்கு இருக்கும்.

**கடகம்:** சமூகப்பணி புரிவதில் ஆர்வம் கொள்வீர்கள். பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து புதிய சாதனை படைப்பீர்கள்.

**சிங்கம்:** பெற்றோரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். தொழிலில் திட்டமிட்ட இலக்கு கூடுதல் கால அவகாசத்தில் நிறைவேறும். இலாபம் சீராக இருக்கும்.

**கன்னி:** உறவினரின் அன்பைக் கண்டு பெருமிதம் கொள்வீர்கள். பேச்சு, செயலில் நேர்மை வெளிப்படும். தொழில், வியாபாரம் செழித்து இலாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** தொடர்பு இல்லாத பணியில் ஈடுபட நேரிடும். தொழில், வியாபாரத்தில் ஓரளவுக்குப் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**விருச்சிகம்:** சாதனை நிகழ்த்தும் நோக்கில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் செழிக்கும். பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும்.

**தனுசு:** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். நம்பிக்கை இழக்க வைத்த செயல் வெற்றி இலக்கை அடையும்.

**மகரம்:** உறவினரின் பாசம் கண்டு வியப்படைவீர்கள். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர்.

**கும்பம்:** சிலரது பேச்சு சங்கடத்தை உருவாக்கும். முக்கிய பொறுப்புகளை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது அவசியம்.

**மீனம்:** புதிய வாய்ப்புக்களைச் சரியாக பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி பெறும். தாராள பணவரவில் சேமிப்புக் கூடும்.

யாராவது தடுக்கி
விழுந்திட்டா ஓடிப் போய்
தூக்கிவிட்டது
**தாத்தா தலைமுறை**

கண்டுக்காம போனது எம்
**அப்பா தலைமுறை**

நின்று செல்பி
எடுத்துக்கிறது
**எங்க தலைமுறை**

## சுடோக்கு


எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | 1 | 9 | | 3 |
| 9 | | | 2 | | | | | 4 |
| 7 | | 1 | | | | | 5 | |
| | 9 | | 8 | | 6 | | | 1 |
| | 3 | | | 2 | | | 9 | |
| 8 | | | 9 | | 5 | | 6 | |
| | 7 | | | | | 4 | | 5 |
| 6 | | | | | 8 | | | 7 |
| 5 | | 8 | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 7 | 9 | 2 | 5 | 6 | 8 | 4 |
| 5 | 8 | 6 | 7 | 3 | 4 | 9 | 2 | 1 |
| 4 | 2 | 9 | 1 | 6 | 8 | 7 | 3 | 5 |
| 3 | 9 | 2 | 5 | 4 | 1 | 8 | 6 | 7 |
| 8 | 4 | 5 | 3 | 7 | 6 | 2 | 1 | 9 |
| 7 | 6 | 1 | 8 | 9 | 2 | 5 | 4 | 3 |
| 2 | 5 | 3 | 4 | 8 | 9 | 1 | 7 | 6 |
| 9 | 7 | 8 | 6 | 1 | 3 | 4 | 5 | 2 |
| 6 | 1 | 4 | 2 | 5 | 7 | 3 | 9 | 8 |

நேற்றைய விடை

இன்னும் சற்று நேரத்தில் இடியும்
மின்னலுமாக அடை மழை
வெளுத்து வாங்கப் போகுது.





# அஞ்சா நெஞ்சம் கொண்ட ஜூலியஸ்சீசர்



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ரோமாபுரியை ஆட்சி செய்து வந்த சக்கரவர்த்தி ஜூலியஸ் சீசர் சிறந்த கல்வியாளர். மாபெரும் வீரர்.

ஒருநாள் அவருடைய நண்பர்கள் சீசரிடம் வந்து "சக்கரவர்த்தி இனிமேல் நீங்கள் ஆயுதம் இல்லாமலும் தகுந்த பாதுகாவலர்கள் இல்லாமலும் வெளியே எங்கும் போக வேண்டாம்" எனக் கேட்டுக் கொண்டார்கள். அதைக் கேட்டுச் சிரித்தபடியேசீசர்கூறினார். "சாவுக்கு அஞ்சுகின்ற மனிதன் ஒவ்வொரு வினாடியும் சித்திரவதைக்கு ஆளாகிச் செத்துக் கொண்டிருப்பான். நான் ஒரு தடவை மட்டுமே சாக விரும்புகிறேன்" என்றார்.

# ஈயார் செல்வத்தை ஊரார் கொள்வர்



மதுரன் வசதி படைத்தவன். ஆனால் மகாகஞ்சன். தானம் கேட்டால் ஒரு சதம் கூடக் கொடுக்க மாட்டான். ஒருநாள் அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அப்போது தனது செல்வம் எல்லாவற்றையும் யாரோ திருடிக் கொண்டு போவது போலக் கனவு கண்டான். உடனே அலறி அடித்துக் கொண்டு விழித்தெழுந்தான்.

அதன் பின்னர் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. இரண்டு நாள்களாக அவனால் திருப்தியாகச் சாப்பிடவும் இயவில்லை. தனது நண்பர்கள் மீதும் அவனுக்குச் சந்தேகம் தோன்றியது. எவரையும் அவனால் நம்ப முடியவில்லை. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது போல் எதற்கும் பயந்தான்.

இறுதியில் புத்திசாலியும் நல்ல உள்ளம் கொண்டவருமான ஒரு பெரியவரைச் சந்தித்தான். தனது பிரச்சினையை அவரிடம் எடுத்துக் கூறினார். தனது செல்வத்தைப் பாதுகாக்க வழி கூறுமாறு வேண்டினான். பெரியவரோ சிறிது நேர மௌனத்தின் பின்னர், "உன் பணத்தை எல்லாம் மூடையாகக் கட்டிக் கொண்டு போய் நான் குறிப்பிடும் மரத்தின் அடியிலே புதைத்து விடு. அது பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை அடிக்கடி அங்கே சென்று பார்த்துக் கொள்" என்று கூறினார். அவர் கூறியபடி மரத்தின் அடியில் மூட்டையாகக் கட்டிய பணத்தைப் புதைத்துவிட்டு இரண்டு நாள்களுக்கு ஒருமுறை சென்று பார்த்து சந்தோசப்பட்டு வந்தான் மதுரன்.

இதை அவதானித்த திருடன் ஒருவன் மதுரன் வராத வேளை பார்த்து அவனது பண மூடையை வாரிச் சுருட்டிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டான். இரண்டு நாள்களின் பின்னர் அங்கு வந்து பணமூடையைத் தேடிய மதுரனுக்கு தலை சுற்றியது. தனது பணம் தொலைந்து போனமைக்கு பெரியவர்தான் காரணம் என எண்ணினான். உடனடியாக அவரை அணுகி ஆவேசத்டன் அவர் முன்னால் கத்தினான். ஆனால் அவரோ மிகவும் அமைதியாக மதுரனுக்கு ஒரு கோப்பை தண்ணீரைக் கொடுத்து "அமைதியாக இரு" என்றார். அவனோ தண்ணீர்க் கோப்பையைத் தட்டிவிட்டு எனக்கு நீதி வேண்டும்" என்றான்.

அதற்கு அவர் "எதற்காக வருத்தப்படுகிறாய். நீ அப்பணத்தை மூடையில் கட்டித்தானே வைத்திருந்தாய். உபயோகிக்க உதவாத பொருள் எதுவாக இருந்தாலும் அது இருந்தாலும் ஒன்றுதான். இல்லாவிட்டாலும் ஒன்றுதான். அதுபோல நீ அந்தப் பணத்தை ஒருபோதும் உபயோகிக்கப் போவதில்லை. எனவே நீ வைத்த இடத்தில் அப்பணம் இருப்பதாகவே நினைத்துக் கொள்" என்றார்.

தான் செய்த தவறை உணர்ந்து பதிலேதும் சொல்லாமல் மதுரன் திரும்பிச் சென்றான். தன்னிடம் எஞ்சியிருந்த செல்வமெல்லாவற்றையும் ஏழைகளுக்குத் தானம் செய்தான்.

# தஜிகிஸ்தான்

1. மத்திய ஆசியாவிலுள்ள மலைப்பாங்கான நாடு.
2. இங்குள்ள மலைகளில் 700 சதுர கிலோ மீற்றர்களுக்கு பனியால் மூடப்பட்டிருக்கிறது. துருவப் பிரதேசங்களைத் தவிர்த்து, அதிகப் பனி இங்குதான் இருக்கிறது.
3. ஒரு காலத்தில் சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக இருந்த நாடு. 1991ல் சுதந்திரம் பெற்றது.
4. பட்டுச்சாலை என்று அழைக்கப்பட்ட தொன்மையான வணிகப் பாதை இதன் வழியாகச் செல்கிறது.
5. நுரெக் அணை, நீரிலிருந்து மின்சாரம் எடுப்பதற்காக கட்டப்பட்டது. உலகின் மிகப் பிரம்மாண்டமான அணைக்கட்டுகளில் ஒன்றாக இது காணப்படுகிறது.
6. 10 கி.மீ. தூரத்தில் 900 நதிகள் இருக்கின்றன.
7. இந்த நாட்டின் தலைநகரம் டுஷான்பே.
8. இங்குள்ள மிகப் பெரிய ஏரி காரகுல்.
9. தேசிய விளையாட்டு குஸ்தி.
10. அலுமினியம், பருத்தி போன்றவை முக்கியமான ஏற்றுமதி பொருள்கள்.





# வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்



# காலம் தவறாமையை கடைப்பிடித்தவர் அப்துல்கலாம்



1999ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதி சென்னை எம்.ஐ.டி. கல்லூரியின் பொன்விழா நிறைவை முன்னிட்டு அவ்விழாவில் கலந்து கொள்ள அந்தக் கல்லூரியின் பழைய மாணவரான அப்துல் கலாம் காரில் சென்று கொண்டிருந்தார். பயணப் பாதையின் இடையில் தொடருந்துத் தண்டவாளப் பாதையைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. தொடருந்து வரும் நேரம் ஆகையால் கடவையின் குறுக்காக போடப்பட்டிருந்த இரும்பு கேட் மூடப்பட்டிருந்தது. அவர் வந்த கார் அங்கேயே நிறுத்தப்பட்டது. எப்படியும் தொடருந்து வந்துபோய் கேட் திறக்க அரை மணிநேரமாவது செல்லும். கலாம், எப்படியாவது விழா நிகழ்ச்சிக்கு சரியான நேரத்தில் இருக்க வேண்டும் என்றும்தான் அவ்விடத்தில் நின்றிருப்பது காலதாமதத்தை ஏற்படுத்தும் என்றும் உணர்ந்து கொண்டார். சட்டென்று காரில் இருந்து இறங்கினார். உடன் வந்திருந்த கறுப்புப்படை. காவலர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

கலாம் அடைத்துக் கிடந்த இரும்புக் கேட்டின் அடியில் குனிந்து தண்டவாளப் பாதையில் கடந்து கல்லூரிக்கு நடந்தே போய்விட்டார். டாக்டர் அப்துல் கலாம் இதோ போகிறார் என்று மக்கள் அவரை அடையாளம் தெரிந்து கொண்டு அவர் பின்னால் ஓடினார்கள். ஆக நேரம் தவறாமையை கடைப்பிடிப்பதிலும் கலாம் எப்பொழுதும் முதல் குடிமகன்தான்.

'மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வரிசையிலும் இடம்பெற்றுள்ள ஒரு தவறைக் கண்டுபிடியுங்கள்.





# தாவரங்களின் அரசி!



பூங்கோதை

தமிழர்களின் வாழ்க்கை முறை பனையோடு இணைவு கொண்டுள்ளது. தேவைகளின் உருவாக்கமும் அதுசார்ந்தே அமையப் பெற்றன. தமிழர்களின் குலச் சின்னமாக தனித்துவம் பெற்று தமிழர் பொருண்மியத்தின் செல்வப் பயிராக விளங்குகிறது. தமிழர் நாகரிகத்தின் பொருண்மையாகத் திகழ்ந்து, 'கற்பகதரு, காமமரம், நீலம், தருமவிசாரன், துருமேகம், பாரிபத்திரம், பார்வதம், தாலம், ஏடகம், புல்லூதியம்' எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

## சிறப்பு

*காதோலை வந்ததும் பனையாலே*
*கழுத்துக்கு தாலியும் பனையாலே*
*பண்பாடு பெற்றதும் பனையாலே*
*பயன் மிகப் பெற்றதும் பனையாலே!*


என்று பாடிப் பரவி கற்பகதருவை தமிழ் இலக்கியங்களில் போற்றிப் பணியாத புலவர்களே இல்லை. அவற்றின் பயன்பாடுகள் சொல்லில் அடங்காதவை. பயன்கள் அத்தனையும் பேறானவை. 'தாவரங்களின் அரசி' எனப் போற்றுகின்றனர். பனையிலிருந்து எண்ணூறு வகையான பொருள்களைப் பெறலாம் என்பதை தஞ்சையை சேர்ந்த அருணாச்சல கவிராயர் எழுதிய 'தால விலாசம்' அல்லது 'பனை மரக்காவியம்' எனும் பழமையான நூல் கூறுகிறது. அதேவேளை சித்த மருத்துவத்தில் பனையின் பங்கு சிறப்பாகக் கூறப்படுகிறது.

## இணையற்ற செல்வம்

இயற்கை அன்னை கொடுத்த ஈடற்ற செல்வங்களுள் பனை முதன்மை பெறுகிறது. அடிமரத்தில் அகன்று விரிந்து வளரும் வேர் தொடக்கம் நுனி மரத்தின் குருத்தோலை வரை அதிக பயன்கள் காணப்படுகின்றன. பனம் பொருள்களால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றியும், அவை குணமாக்கும் நோய்கள் பற்றியும் விரிவான முறையில் 'யதார்த்த குண சிந்தாமணி' எனும் நூல் குறிப்பிடுகிறது. பனைவள உணவு உற்பத்திகள் மனிதர்களுக்கு நீண்ட ஆயுளையும், சுகத்தையும் கொடுக்கிறது. நவீன ஆய்வுகளின் அடிப்படையில் போசாக்குப் பெறுமானங்களை விஞ்ஞான ரீதியாக அடையாளம் கண்டுகொள்ளும் அளவுக்கு பனையின் உணவு உற்பத்திகள் தனித்துவம் பெறுகின்றன.







மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கும், உடலுக்கும் உறுதுணையாக அமைபவை சத்துள்ள உணவுகளே. அந்தவகையிலே எமைச் சுற்றியுள்ள பனை வளத்தைக் கொண்டு சத்தான உணவு வகைகளை அடையாளம் கண்டுகொள்ளலாம். நாளாந்தம் தேவைகளுக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் இலகுவாகவும், இலவசமாகவும் சத்தான உணவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## தன்னிறைவான ஊட்டம்

பனைவள உற்பத்திகளை உணவுக்குரிய பொருள்கள், உணவல்லாப் பொருள்கள் என இரு பெரும் பிரிவாக வகைப்படுத்தலாம். உணவுக்குரிய பொருள்களை நோக்குமிடத்து பருவகாலத்தில் வெளிநீட்டமாக தோன்றும் பூந்தளிரைப் பதப்படுத்துவதன் மூலம் பதநீர், கள் என்பனவும் நுங்கு, பனம்பழம், கிழங்கு, பூரான் முதலான முதன்மை உற்பத்திகளும் பெறப்படுகின்றன. இவற்றைப் பதப்படுத்துவதன் மூலம் பனம்பாகு, பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சீனி, கழிவப்பாகு, நுங்கு, பனாட்டு, புழுக்கொடியல் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை உற்பத்தியாகின்றன. இதுவிதம் கிடைத்த அனைத்து உற்பத்திப் பொருள்களையும் நம் மூதாதையர் அன்றாட தேவைக்கு பயன்படுத்தியுள்ளனர். நோய் நொடியின்றி வாழ்ந்துள்ளனர்.

ஆண் பனையில் இருந்து பெறப்படும் பதநீருக்கு 'சோமபானம்' என்றும், பெண் பனையில் இருந்து பெறப்படும் பதநீருக்கு 'சுரபானம்' என்றும் பெயர் குறிப்பிட்டு வகைப்படுத்தியுள்ளனர். சோமபானமானது ஆன்ம சுத்தியைத் தருகிறது. சுரபானம் உடல் நலத்தையும், வீரியத்தையும் வழங்குகிறது. பதநீரின் பெருமையை தமிழகத்து அறிஞர் ஒருவர்,

*தாய்ப்பாலைப் போன்றதடி பாப்பா - பதநீர்*
*தமிழ் மக்கள் பானமடி பாப்பா - குடிக்கக்*
*குடிக்க இது இனிக்கும் உன்*
*கொஞ்சும் முகச்சிரிப்பைப் பெருக்கும்!*

என்று கூறுகிறார்.

## ஆரோக்கியம் தரும் மருத்துவச்சி

பதநீர் மட்டுமல்ல ஏனைய பனைவள உணவுகளான, 'பனம் பாகு, பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு' என்பவை இனிப்புச் சுவையோடு போசாக்கையும் கொண்டுள்ளன. குறிப்பாக, 'பாரம்பரிய மருத்துவ நூல்களில், கிராமிய மருத்துவ நடைமுறையில் மற்றும் கை மருத்துவச் செயல்நிலையில்' முதன்மை இடத்தை பனை வெல்லமும், பனங்கற்கண்டும் பெற்றுள்ளன. கருவுற்ற தாய்மார் குழந்தை பிறந்தவுடன் தங்கள் நாவில் பனை வெல்ல நீர் அல்லது பனங்கற்கண்டு நீரை அருந்துகின்றனர். இதன்மூலம் பிறந்த குழந்தையின் மலக் கழிவு இலகுவாக வெளியேறுகிறது. அவர்களின் உடல் அசைவுக்கு ஏற்ற சக்தியையும், தாய் இழந்த சக்தியையும் பெற்றுக்கொடுக்கின்றன.

இன்றும் சித்த மருத்துவத் துறையில் பல சித்த மருந்துகள் குறிப்பாக, 'செந்தூரம், பற்பங்க் குளிகைகள்' பனை வெல்லத்தில் வைத்து மூடியே உள்ளெடுக்கப்பட வேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது. அகத்திய குழம்கு எனும் மருந்து பனை வெல்லத்தில் வைத்தே உட்கொள்ளப்படுகிறது. இது பல நோய்களை குணப்படுத்தும் மருந்தாக உள்ளது. மற்றும் சூரிய ஒளியின் தாக்கம் ஏற்படுவதற்கு முன்னர் அதிகாலை வேளையில் இறக்கப்படும் பதநீர் தெளிவாகவும், இனிமையான தன்மையுடன் காணப்படும். இதில் விற்றமின் 'சி' அதிகம் காணப்படுவதால் வெங்காயத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டிச் சேர்த்துக்கொள்ளலாம்.

சின்னமுத்து, சின்னம்மை, கண்நோயாலும் கண் சூட்டினாலும் பாதிக்கப்பட்டவர்கள், நிறை குறைந்தவர்கள் என அனைவரும் பதநீரை நோயைக் குணமாக்கும் பானமாக அருந்துகின்றனர். பனையின் மதுக்குணம் பற்றியும் 'யதார்த்தகுண சிந்தாமணி' எனும் நூல் கூறுகிறது.

பருவ காலங்களில் தோன்றும் பெண் பனைப் பாளைகள் இளமுதிர் நுங்குப் பருவத்தை அடைகிறது. சீத பேதி, வயிற்றுப்போக்கு, வியர்க்குரு, கண் அரிப்பு என்பவற்றை நீக்குகிறது. பசியைத்தூண்டும் உயிர்ச்சத்து 'சி' மற்றும் கனியுப்புக்களைக் கொண்டுள்ளது.

பனம் பழ பருவகாலத்தின் முடிவில் பனம் விதைகளைச் சேகரித்து பாத்தியிட்டு பராமரிப்பதன் மூலம் மூன்று மாத கால்த்தில் பனங்கிழங்கு அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியும். புழுக்கொடியல், ஒடியல் மா என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். இவை கொண்டு தயாரிக்கப்படும் உணவு வகைகளை உண்பதால் உதிரச்சூடு, பித்தமேகம் என்பன நீங்கும். உடலில் குளிர்ச்சியும் வனப்பும் அதிகரிக்கும். கரப்பான், சொறி, சிரங்கு, மலச்சிக்கல் முதலிய நோய்களுக்கு நிவாரணம் தருகிறது.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவனுடைய உணவுத் தேவை, நோய் தீர்க்கும் மருந்து என கற்பகதரு பயனுறுதி தருகிறது. வாழ்வோடு இரண்டறக் கலந்து உய்வுறுகிறது. பாதுகாப்பு அரணாகவும், கால்நடைகளின் உணவாகவும், கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் பங்குதாரராகவும் உதவுகிறது. மனிதனின் நேரடிக் கண்காணிப்பும் பராமரிப்பும் இல்லாத போதும் தானாகவே வளர்ந்து உணவாக, உறங்கும் இடமாக, எரிபொருள்ச் சக்தியாக, போசாக்குத் தரும் பானமாக மனிதத் தேவைகளோடு பயன்கொள்கிறது.

> **பனைவள உணவு உற்பத்திகள் மனிதர்களுக்கு நீண்ட ஆயுளையும், சுகத்தையும் கொடுக்கிறது. நவீன ஆய்வுகளின் அடிப்படையில் போசாக்குப் பெறுமானங்களை விஞ்ஞான ரீதியாக அடையாளம் கண்டு கொர்ள்ளும் அளவுக்குப் பனையின் உணவு உற்பத்திகள் தனித்துவம் பெறுகின்றன.**

## பனை வளம் காப்போம்!

ஆனாலும் இன்றைய நிலையில் நகரமயமாக்கல் செயற்பாடுகள் மூலம் பனை வளம் அழிக்கப்பட்டு வருகிறது. இந்தநிலை தொடரக்கூடாது. கற்பகதருவாக நுனி முதல் அடி வரை பயன் தரும் சிறப்பு அழிவின்றி பேணப்பட வேண்டும். அனைவரும் ஒரு சேர இணைந்து கொண்டு பனை வளத்தை அதிகரிக்க செயல் முனைப்புப் பெற வேண்டும். அதுவே காலத்தின் தேவைப்பாடு. எங்களுடைய அகவாழ்வு மற்றும் புறவாழ்வு நிலையில் நெருக்கமான இணைவையும் தொடர்பையும் கொண்டுள்ள, பண்பாட்டின் பெறுதியை வெளிப்படுத்தும் 'தாலம்' தரணிக்குத் தரும் கொடையைப் புரிந்து கொள்வோம். அதன் தனிச்சிறப்பை உணர்ந்து செயலூக்கம் பெறுவோம். பனை வளம் காப்போம்!

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.09.2018 புதன்கிழமை
இறைவனடி சேர்ந்த
அமரர்

### மாணிக்கம் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.10.2018) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (12.10.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

பிறப்பு 17.02.1940 — இறப்பு 12.09.2018

இல.85, தம்பசிட்டி,
பருத்தித்துறை.


தயா
குடும்பத்தினர்

cs.2026(1)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் கதிரமலைநாதன்

*(இளைப்பாறிய உதவி திட்டமிடல் பணிப்பாளர் - கோப்பாய் பிரதேச செயலகம்)*



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கதிரமலைநாதன் நேற்று (10.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பராசக்தி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் புவனஜோதியின் (சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்க ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர்) அன்புக் கணவரும் யசோதாவின் அன்புத் தந்தையும் பத்மநாதன் (லண்டன்), கணேசலிங்கம் (டென்மார்க்), ஜெயபாலன் (கொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரராணி (லண்டன்), லிங்கேஸ்வரி (டென்மார்க்), ஜெயராணி (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.10.2018) புதன்கிழமை பி.ப. 2.00 மணி அளவில் சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பண்ணாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 26 . 05 . 1932



ஆண்டவன் அடியில் 04 . 10 . 2016

### அமரர் கார்த்தி சுப்ரமணியம்

(எழுதுவினைஞர் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

*திதி: திருதியை அமாவாசை*

கண்ணிமைக்கும் நேரத்தினுள் கரைந்துவிட்ட
இரண்டு ஆண்டுகளில் உங்கள் நினைவுகள்
சற்றும் அகலாது எம் நெஞ்சோடு நிறைந்திருக்கிறது
உங்கள் பாதங்களில் எங்கள் கண்ணீரை
காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காய்
பிரார்த்திக்கும்.......

மட்டுவில் வடக்கு,
கல்வயல் அரசடிச்சந்தி,
சாவகச்சேரி.

நீங்கா நினைவுகளுடன்
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(cs.484) (13.17)



தோற்றம் 21 . 09 . 1956 — மறைவு 09 . 10 . 2018

### தேவமலர் (பேபி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவமலர் (பேபி) 09.10.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நவமணி தம்பதியரின் பாசமிகு மகளும், புஸ்ப்பநாதன் (டுபாய்), புஸ்ப்பவனிதா (வவா), புஸ்ப்பானந்தன், புஸ்ப்பாதரன், புஸ்ப்பரூபன், புஸ்ப்பராதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சின்னத்துரை, மல்லிகா, தேவி, சுகி, சுதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2018) வெள்ளிக்கிழமை இல.195, கண்டி றோட், அரியாலை என்னும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(cs14355)(13,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 03 . 1936



இறப்பு 09 . 10 . 2018

### திருமதி முத்தாபரணம் சுப்பிரமணியம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தாபரணம் சுப்பிரமணியம் 09.10.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகர் - பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின், அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, மகாதேவன், மகேஸ்வரி மற்றும் பேரின்பமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்னம்மாவின் அன்பு மைத்துனியும், சறோஜினிதேவி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற ஜெகநாதன், ஜெகலச்சுமி, ஜெயரூபன், காலஞ்சென்ற ஜெகசோதி, கலைச்செல்வி, சசிகரன், றஜனி, ஐங்கரன், றஞ்சனா ஆகியோரின் அன்புத்தாயும், கணேசலிங்கம், சிவசுந்தரம், அகிலேஸ்வரன், ரட்ணகுமார், பிரதீபன், ராமச்சந்திரன், பிறேமாவதி, சுகந்தினி, சுகந்தி, சசிரூபா ஆகியோரின் அன்பு மாமியும், தர்சிகா, துஷாந்தன், சுசீலன், நிஷாந்தி, ஜெனித்தா, அனித்தா, அஜந்தா, பவன், அனுஷன், விந்துஷன், ஆரூரன், கனிஷா, பிரகாஷ், இனியா, பிரவீன், கவீன், தருணன், சரணி, தர்சினி, காஷினி, மகிஷா, அகிருதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஸ்வின், அக்ஷன், தர்சனன், சஜனுயன், கனுசன், சர்ஜீன், அஸ்மிதா, ஹர்ணிகா, ஆருஷிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மதவடி லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.**

(cs14355)(13,17)

**தகவல்:
குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



**CITY MEDICALS** மற்றும் **CITY MEDICAL CARE (PVT) LTD, JAFFNA** நிறுவனங்களின் ஸ்தாபகரும் எமது மருந்து விநியோகஸ்தருமாகிய

**திரு. லாசரஸ்பிள்ளை விற்றின் சிங்கராயர்**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

**காவேரி மெடிக்கல் கொக்குவில்.**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26.12.1940 | 08.10.2018 |

## துயர் பகிர்கின்றோம்



**CITY MEDICALS** மற்றும் **CITY MEDICAL CARE (PVT) LTD, JAFFNA** நிறுவனங்களின் ஸ்தாபகரும் எமது மருந்து விநியோகஸ்தருமாகிய

**திரு. லாசரஸ்பிள்ளை விற்றின் சிங்கராயர்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயருறுவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும். ஊழியர்களிற்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**Luxmy Pharmacy, Jaffna.**


## கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டம்
## விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
### புதிய கல்வி ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்திலும் பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.
- க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் ஏனையோர் **FIT** A/L கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் விண்ணப்பிக்க முடியும்.
- இவ்வாண்டு பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றுக்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்க முடியும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் Diploma in Information Technology (NVQ5) சான்றிதழ் வழங்கப்படும்.
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- மேலும் முதுமாணிக்கற்கைநெறியை கொழும்பு, மொரட்டுவ, பேரதெனிய மற்றும் பிரித்தானிய அமெரிக்க கனடிய பல்கலைக்கழகங்களில் வேலை செய்துகொண்டே தொடர முடியும்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் **BIT** கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

*அரசவங்கிகளில் வெளிநாடுகளிலும் **System Engineer, System Administrators (CCNA, MTA,MCSA, MCSE-USA** தகைமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

*உயர் வேலைவாய்பிற்கான உத்தரவாதம்.

*முதலாம் ஆண்டு கற்கும் போதே Diplom in Ms office, Web Designing, Hardware, Networking, Photoshop ,English , Java Programming உள்ளிட்ட 7க்கு மேற்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம்.

**இவ்வாரம் வெளியான கொழும்பு பல்கலைக்கழக முதலாம் அரையாண்டுப்பெறுபேறுகளில் எமது மாணவர்கள் தொடர்ச்சியாக சிறந்த பெறுபேறுகளை பெற்று வருகின்றனர்**

**Kunasingam Thilakshan 2AB**
**Srimurugathas Thulasikaran 2AB**
**Inosha Sivarathan A2B**
**Naguleswaran Giriththanan A2B**
**Sivanathan Vithoosan A2B**
**Sangeetha Varathan A2B**
**Kajani Senthilvadivel A2B**
**Sujani Thiruchchelvam ABC**
**Sriranjan Kapilan 3B**
**Praveena Srikantha 3B**
**Mahima Sivakumaran 3B**
**Mythili Mahenthiran 2BC**
**Thadchajini Theiventhiram 2BC**
**Thadchajini Pathmanathan 3C**
**Priya Nagenthiran 2BC**
**Niroobana Rajagobal B2C**
**Sajeev Yogalingam B2C**
**Lowsiga Thillainathan B2C**



Type <BIT><Name> send to 772395895 & get scholarship

**MCS IT CAMPUS, யாழ். பல்கலைக்கழகம் அருகில்**

**சிறந்த பெறுபேற்றுக்கான சிறப்பு விருதினை கொழும்பு பல்கலைக்கழத்திடமிருந்து விருதினை வென்ற நிறுவனம்**



**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES



After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

BTEC HND

**BUSINESS MANAGEMENT**
Management • Marketing • Human Resource Management
Leading to BA(Hons)

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்றல் முறை மற்றும் சூழல்
- அனுபவமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
- இலகு தவணைக் கட்டணம்
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது

Pearson | University of East London | University of Wolverhampton

MADHU 0777 102131
SANCHU 0777 692318

**INTAKE NOW ON**

**BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna.**

20 YEARS | ISO 9001:2008 CERTIFIED

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk | BCAS Ranked "Platinum Partner" No.1 once again

## முதல்பெண்...

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி இந்திய இராணுவத்துடன் கோப்பாய் கைதடி வீதியில் கோப்பாய்ச் சந்திக்கு அண்மையான பிரதேசத்தில் நேரடி மோதல் ஏற்பட்டது. இந்த மோதலிலேயே மாலதி களச்சாவடைந்தார். அவரே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வீரச்சாவடைந்த முதலாவது பெண் போராளியாவார். அவர் நினைவாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் மாலதி படையணியும் உருவாக்கப்பட்டிருந்தது. அவரது 31ஆவது ஆண்டு நினைவுதினம், ஜனநாயகப் போராளிகள் கட்சியினால், அம்பாறை வெல்லாவெளிப் பிரதேசத்தில் நேற்று நினைவுகூரப்பட்டது. (5)

## மின்சாரம்...

அலுவலர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் வளாகத்தில், இரண்டரை வயதுடைய மோப்ப நாயுடன் பொலிஸ் அலுவலர் நேற்றுக் காலை உடற்பயிற்சிக்குச் சென்றுள்ளார். அங்குள்ள மைதான வளாகத்தில் மின்விளக்குகளுக் இணைப்புச் செய்யப்பட்ட மின்வயர் அறுந்த நிலையில் காணப்பட்டுள்ளது. மோப்பநாய் அதனைத் தொட்டபோதே மின்சாரம் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது. அதனைக் காப்பாற்றச் சென்ற பொலிஸ் அதிகாரி காயமடைந்துள்ளார். (5.110)

இன்று முதல்
Cinemas Ltd Proudly presents




வடக்கு, கிழக்கு

| | | |
|---|---|---|
| Majestic Jaffna 10.30/1.30/4.15/7.00 pm | | |
| Chelva Jaffna 10.30/2.30/6.30 | Saru Cinema Point Pedro 10.30/2.30/6.30 | Shanthi Batticaloa 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu 10.30/2.30/6.30 | G.K.Cinemax Kalmunai 10.30/2.30/6.30 | Vasanthi Vavunia 10.30/2.30/6.30 |
| Nahams Chunnaham 10.30/2.30/6.30 | Nelson 10.30/2.30/6.30 | SELLAM PREMIER Chenkalady 10.30/2.30/6.30 |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## வேலையாள்கள் தேவை

லேபர் (கூலி) வேலையாள்கள் தேவை.
உண்வு, தங்குமிட வசதி இலவசம்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு - 077 0833 461**

## பெயர் மாற்ற அறிவித்தல்

புத்தூர் வடக்கு வெளி, நவக்கிரியில் வசிக்கும் **றஞ்சிதமலர் மனோன்மணி** ஆகிய் நான் எனது பெயரை இன்றுமுதல் **மனோன்மணி** என மாற்றம் செய்வதுடன் சகல ஆவணங்களிலும் **மனோன்மணி** என ஒப்பமிடுவேன் என்று சகலருக்கும் அறியத்தருகின்றேன்

**மனோன்மணி**

(cs. 14684) (13.17)

## பெயர் மாற்றம்

மல்லாகம் வடக்கைப் பிறப்பிடமாக கொண்ட **தம்பிராஜா பிரதீபன்** ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் எனது தந்தையின் பெயர் **தம்பிராசா** என தவறுதலாக பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் எனது பெயரை **தம்பிராஜா பிரதீபன்** என மாற்றம் செய்வதோடு எனது சகல ஆவணங்களிலும் **தம்பிராஜா பிரதீபன்** என ஒப்பமிடுவேன் என்று சகலருக்கும் அறியத்தருகின்றேன்

**தம்பிராஜா பிரதீபன்**

(cs. 14684) (13.17)

## மரண அறிவித்தல்

### செல்வன் பரமசாமி கவின்சன்

**(மாணவன், தரம் 4 யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி)**

பலாலி மத்தி பலாலியைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி கவின்சன் நேற்று (10.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பரமசாமி ராஜினி தம்பதியரின் அன்பு மகனும் கவிமதியின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2018) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி மேற்கு,**
**கைதடி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**




## வட இலங்கை சங்கீத சபை
## பொதுக்கூட்டம்

உதயன் பத்திரிகையில் 08.10.2018 ஆம் திகதி 24 ஆம் பக்கத்தில் விளம்பரமாகப் பிரசுரிக்கப்பட்ட பொதுக்கூட்ட அறிவித்தலானது தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. பொதுக்கூட்டத் திகதியானது பின்னர் அறிவிக்கப்படுமென வட இலங்கை சங்கீத சபைத் தலைவரும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. சு.சுந்தரசிவம் அவர்கள் அறிவித்துள்ளார்.

**தலைவர்,**
**வடஇலங்கை சங்கீத சபை.**



## களமற்றும் ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கான
## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விழுது நிறுவனத்தில் களம் மற்றும் ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளதால் பின்வரும் தகைமையுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**எதிர்பார்க்கப்படும் அடிப்படைதகுதிகளும் பொறுப்பபுக்களும்**

- சமூகவிஞ்ஞானதுறைசார் மற்றும் திட்டமிடல் பாடங்களில் அல்லது அதனுடன் தொடர்புடைய கற்கைநெறிகளில் இளமானிப்பட்டம் அல்லது டிப்ளோமா சான்றிதழ்.
- குறைந்தது 03 வருடங்கள் சமூகப்பணிபுரிந்தஅனுபவம்
- சமூகத்தில் நலிவுற்றோரை வலுவூட்டல்.அவர்களுக்கான திட்ட முன்மொழிவுகளை தயாரிப்பதில் வழிகாட்டல். பால்நிலை. பரிந்துரை. ஆய்வுமுறையியல். சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளில் சிறந்தஅனுபவமும் அறிவும்.
- தகவல் சேகரிப்பு.தகவல் பகுப்பாய்வு மற்றும் கணிப்பீடுகளை மேற்கொள்ளக்கூடிய திறமை.
- கிராமமட்டத்தில் பயிற்சிகளை நடத்தக்கூடிய ஆற்றல்.
- வாழ்வாதார செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பாக பணியாற்றிய அனுபவம்.
- சிறந்த ஆவணப்படுத்தல்.விழுதுதலைமை அலுவலகத்தின் ஊடாக வெளியிடப்படும் வெளியீடுகளுக்கு கட்டுரைகள். அறிக்கைகள் மற்றும் கற்கை சம்பவங்களை சிறந்தமுறையில் ஆவணப்படுத்தும் ஆற்றல்.
- சிரேஷ்ட திட்டஅலுவலர். திட்டஅலுவலர்கள் மற்றும் ஏனைய சக உத்தியோகத்தர்களுடன் இணைந்து பணியாற்றும் பண்பு.
- அடிப்படை கணிணி அறிவு – Word, Excel, Powerpoint, internet, E-mail
- அரச அதிகாரிகள் மற்றும் பொருளாதார. சமூகசேவை வழங்குனர்களுடன் நெருங்கிய தொடர்பினை பேணக்கூடியவராக இருத்தல்.
- கிராமமட்ட குழுக்களை வலுப்படுத்தி தீர்மானம் எடுக்கும் பதவிகளில் உள்ள பங்குதாரர்களை அவர்களுடன் இணைக்கக்கூடியவராக இருத்தல்.
- செல்லுபடியாகும் மோட்டார் வண்டி சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல்.
- ஆங்கில அறிவு மேலதிக தகைமையாக கருதப்படும்.

விண்ணப்பங்களை உங்களது சுயவிரக்கோவையுடன் விழுது. இல.191. பௌத்தாலோக மாவத்தை.கொழும்பு 04 எனும் முகவரிக்கு எதிர்வரும் 19 ஒக்டோபர் 2018 இற்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அல்லது infor@viluthu.org..................எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.



## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுந்தரம்
**யோகானந்தா**

தோற்றம்
20.10.1954

மறைவு
30.09.2000



திதி: பூர்வபக்க திருதியை
(11.10.2018)

கனவுகள் கலைந்தாலும்
காலங்கள் மாறுவதில்லை

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்கள்.
நீர்வேலி தெற்கு.



## மரண அறிவித்தல்

## பண்டாரி பசுபதி (செல்லையா)



உசன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரி பசுபதி (செல்லையா) நேற்று (10.10.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டாரி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலன் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும் சிவக்கொழுந்து. முதலித்தம்பி. சின்னத்தங்கச்சி, சிவசோதி (லண்டன்). இலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் கலாநிதி.காலஞ்சென்ற கணேஸ் மற்றும் அமலதாஸ் (லண்டன்). யோகராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2018) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உசன் தெற்கு.**
**மிருசுவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**


## கிழக்கிலும்...

நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆலய நிர்வாகிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். தொல்பொருள் திணைக்களம் வடக்கு மாகாணத்திலும், தமிழ் மக்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த வெடுக்குநாறி மலை. குருந்தூர் மலை என்பவற்றை ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. இதற்கு பல தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையில் கிழக்கு மாகாணத்திலும், தொல்பொருள் திணைக்களம் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை அபகரிக்க முயற்சி மேற்கொண்டுள்ளது.

குச்சவெளி சித்தி விநாயகர் ஆலயத்துக்கு 1896 ஆம் ஆண்டு பிரிட்டன் ஆட்சிக் காலத்தில் 10 ஏக்கர் 4 ரூட் 14 பேர்ச் காணி வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணியில் ஆலயம் அமைந்துள்ளதுடன், ஆலயத்தினால் நெற் பயிர்ச்செய்கையும் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், காணியிலுள்ள தூண் ஒன்றைக் காரணம் காட்டி, அந்தக் காணி தமக்குரியது என்று தொல்பொருள் திணைக்களம் கூறியுள்ளது.

இது தொடர்பில் ஆலய நிர்வாகிகள், குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (5)

## அரசியல்...

வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்று. உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் வலியுறுத்தியதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மகசின் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டிருக்கும் 44 தமிழ் அரசியல் கைதிகளை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களிக்க வேண்டுமானால் தமிழ் அரசியல் கைதிகளை முற்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்பதை கூட்டமைப்பு முக்கியமான கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என்பதே அரசியல் கைதிகளின் வலியுறுத்தலாக அமைந்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள், வடக்கு - கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் என்று சகல பகுதிகளையும் சேர்ந்தவர்களாக இருப்பதால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் இந்த விவகாரத்தில் ஐக்கியமாக செயற்பட்டு தங்களின் விடுதலையைப் பெற்றுத்தர வேண்டும் என்று அரசியல் கைதிகள் என்னிடம் தெரிவித்தனர், என்றார் ஆனந்தன். (5,61)


## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி - 2018
### புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வடமாகாணம்.

1. சபைநிதி - 2018 மூலமான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C8/ C7 தரத்தில் வீதி அமைப்பிற்கான CIDA பதிவு மேற் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 ,ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023 E.mail – pkipsmullai@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை 25.10.2018 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 12.10.2018ம் திகதியிலிருந்து 25.10.2018 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு 26.10.2018 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்துமூன்று - 28.12.2018) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10 கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun./Dev/W-18/2018 | கருவேலங்கண்டல் மானுருவி வீதி புனரமைத்தல் | 4.334 | 45 நாட்கள் | C8/C7 | 44,000.00 | 25.01.2019 |
| NP/14/44(04)/Coun./Dev/W-16/2018 | விசுவமடு மேற்கு நெத்தலியாறு பாடசாலைவீதி புனரமைத்தல் | 4.220 | 45 நாட்கள் | C8/C7 | 43,000.00 | 25.01.2019 |
| NP/14/44(04)/Coun./Dev/W-15/2018 | உடையார்கட்டு வடக்கு சுதந்திரபுரம் மைதானவீதி புனரமைத்தல் | 4.412 | 45 நாட்கள் | C8/C7 | 45,000.00 | 25.01.2019 |
| NP/14/44(04)/Coun./Dev/W-14-01/2018 | மந்துவில் குழந்தை இயேசு கோவில் வீதி இரண்டாம் குறுக்கு வீதி புனரமைத்தல் | 4.345 | 45 நாட்கள் | C8/C7 | 44,000.00 | 25.01.2019 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 2018.10.19 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு , புதுக்குடியிருப்பு பிரதேசசபை. புதுக்குடியிருப்பு** **10.10.2018**



## மரண அறிவித்தல்

பிறப்பு
04
07
1958



இறப்பு
09
10
2018

## திருமதி. மல்லிகா லோகேந்திரன்

தும்பளை நெல்லண்டையை பிறப்பிடமாகவும், 50, Peters Lane Dehiwalaவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி மல்லிகா லோகேந்திரன் அவர்கள் 09.10.2018 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் பாலசுப்பிரமணியம், திருமதி சந்தானலக்ஷ்மி பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மகேசன், சரஸ்வதி மகேசன் ஆகியோரின் மருமகளும், மகேசன் லோகேந்திரனின் அன்பு மனைவியும், ஜெயரூபன் (Civil Engineer, Australia/New Zealand), சோபிகா (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோபிசங்கர் (Electrical Engineer UK), துவாரகா (Electrical Engineer - Newzeland) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுஷா, சிறிஷா ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும், மாணிக்கவாசகர் (Denmark), தேவிக்கா (teacher St.Joseph's College) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஸ்ரீ செல்வகுமார், கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், Dr. சஜனகான், ஷர்மிலோஜனா ஆகியோரின் பெரியம்மாவும், அனயா , அன்ரூ ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை (12.10.2018) 50, பீட்டஸ் லேன், தெகிவளையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியை 14-10-2018 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 07:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.**

தகவல்
கணவர், பிள்ளைகள்,
குடும்பத்தினர்

**TP : 0761011756**
**50, Peters Lane**
**Dehiwala**

## தமிழ்...

கான பணியகத்தை உருவாக்கும் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

காலம் தாழ்த்தியேனும் இந்தப் பணியகம் உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்கது. பணியகம் உருவாக்கப்பட்டு உண்மை, நீதி, பொறுப்புக்கூறல், இழப்பீடுகள் மற்றும் மீண்டும் இவை இடம்பெறாமை என்பன நிலைமாறு பொறிமுறையின் அம்சங்களாகும். இவை நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் முக்கியம் பெறுகின்றது.

இந்த சட்டம் வரவேற்கத்தக்க விடயம். ஆனால் இது நீதியைப் புறக்கணிக்கும் வகையில் அமையக் கூடாது. இழப்பீடுகள் தொடர்பான பணியகம் மூலமாகவேனும் அரசியல் கைதிகளின் விடுதலையை உறுதிப்படுத்த முடியும் என்றார்.

இந்த விவாதத்தில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், போரின் போது பல பாதிப்புக்கள் ஏற்பட்டன. அதனுடைய உண்மை கண்டறியப்பட வேண்டும். அதேபோல் மோதல்கள் இடம்பெற்றது .இதில் கற்றுக் கொண்ட பாடங்களைக் கொண்டு தீர்வுகள் நோக்கி பயணிக்க வேண்டும். மாறாகப் பழிவாங்கல் காரணிகளாக அமைந்துவிடக்கூடாது. இழப்பீடுகள் பற்றிய அலுவலகத்தால் பரிந்துரைக்கப்படும் கொள்கைத் திட்டங்கள் அமைச்சரவையினால் அனுமதிக்கப்படும்போது அவை அரசியல் மயப்படுத்தப்படலாம் என்று சந்தேகம் உள்ளது. சட்டவரைவு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள சட்டரீதியான வியாக்கியானத்தைப் புரிந்து கொள்ளக் கடினமாக உள்ளது. உதவிகள் வழங்கும் நோக்கில் செயற்படும் இந்த விடயங்களில் இதுபோன்ற விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் சட்டத்தை நிறைவேற்றி கூடிய விரைவில் இழப்பீடுகள் பற்றிய பணியகத்தின் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்புகின்றோம் - என்றார். (5,61)

## ஐ.நா...

ஜெனிவாக் கூட்டத் தொடர்பில் பன்னாட்டுச் சமூகம் எங்களை ஆதரிக்கும். இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

போர்க் குற்ற விசாரணை தொடர்பில் கலப்பு விசாரணைக்கு ஐ.நா. தீர்மானம் பரிந்துரைத்துள்ள நிலையில், அதனை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று இலங்கை அரசுத் தலைவர்கள் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் இலங்கைக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கி, மற்றொரு தீர்மானம் ஜெனிவா அமர்வில் அடுத்த ஆண்டு சமர்பிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே, அயலுறவுத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜெனிவா தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தை உருவாக்கியது, இழப்பீடு தொடர்பான சட்டவரைவு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் சமர்பித்தது போன்ற நடவடிக்கைகள் இலங்கை தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதை நோக்கி எடுத்துள்ள சரியான நடவடிக்கைகள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகளுடன் நாங்கள் தொடர்ச்சியாக பேச்சுக்களை மேற்கொண்டுள்ளோம். அவர்கள் எங்களைப் பாராட்டியுள்ளனர். இந்த அரசு சட்டத்தின் ஆட்சி, நீதித்துறை மற்றும் ஊடகங்களின் சுதந்திரம் போன்றவற்றை எப்படி மீள ஏற்படுத்தியுள்ளது என்பதை யாராலும் பார்க்க முடியும். இன்று நாட்டில் எவரும் தாங்கள் கடத்தப்படுவோம் என்று பயப்படுவதில்லை.

கூட்டு அரசின் உருவாக்கத்துக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள பெரிய மாற்றத்தினை பல இராஜதந்திரிகள் என்னிடம் புகழ்ந்துள்ளனர். இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களைப் பாராட்டியுள்ள அவர்கள் ஏனைய நாடுகள் இந்த உதாரணத்தை பின்பற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். நாங்கள் எங்கள் தனித்தன்மையையோ தனிநபர் ஒருவரையோ விட்டுக்கொடுக்காமல் இதனைச் சாதித்துள்ளோம்.

எங்கள் மக்களின் நன்மைக்காக நாங்கள் சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் இந்த விடயத்தில் எங்கு எல்லைக்கோட்டை வரையவேண்டும் என்பது அரசுக்கு நன்கு தெரியும் - என்றார். (5)


# பெறுகை அழைப்பு (IFB - 4 Goods) மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

## கணனி, பிரதியெடுக்கும் இயந்திரம், இலத்திரனியல் கருவிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள்' கொள்வனவு-

1. யாழ் மாவட்டச் செயலகத்தின் திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் யாழ் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பாவனைக்காக கிழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கணணி, பிரதியெடுக்கும் இயந்திரம், இலத்திரனியல் கருவிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களுக்கு விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மூடிய விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. இது தேசிய போட்டி விலைக்கேள்வி முறையாக இருந்தாலும் வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்வி பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் : 021 221 4633 / 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674
4. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் தமது வியாபாரப்பதிவுச் சான்றிதழ் பிரதியும் சமர்ப்பிக்கவேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாகிய (Non-refundable fee) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 11.10.2018 தொடக்கம் 25.10.2018 வரை மு.ப 9.00 மணியிருந்து பி.ப 02.30 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
5. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப் பிணைப்பொறுப்பு (Bid security) கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 26.10.2018 பி.ப 02.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கத்தினையும் (Bid ID), பொருள் விபரத்தினையும் குறிப்பிடல் வேண்டும். கேள்விகள், சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
6. விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் கேள்வி இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து (Bid Valid) 90 நாட்களும், கேள்விப் பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்வி திறத்தல் திகதியிலிருந்து 120 நாட்களும் ஆகும்.
7. முற்கேள்விக் கூட்டம் (Prebid Meeting) 18.10.2018 மு.ப 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

அட்டவணை கீழ்வருமாறு:

| BID ID | Description of Goods | Items | Qty | Bid Security Rs. | Non Refundable fund Rs. |
|---|---|---|---|---|---|
| JK/PROC/ Electronic/A/2018 | Electronic Equipment-1 | All in one Mixer | 2 | 10,000 | 1,000 |
| | | Dual VHF Handheld & Lapel / Lavalier Wireless Microphone System | 10 | | |
| JK/PROC/ Electronic/B/2018 | Multimedia Projector | 96" Interactive White Board | 05 | 30,000 | 1,000 |
| | | Multimedia Projector Screen 6x6 | 05 | | |
| | | Multimedia Projector Electrical Screen 6x6 | 05 | | |
| | | Multimedia Projector Electrical Screen 8x8 | 05 | | |
| | | Multimedia Projector – Normal | 05 | | |
| | | Multimedia Short Throw Projector | 05 | | |
| | | Multimedia Ultra Short Throw Projector | 05 | | |
| | | Multimedia Projector – Special Purpose | 05 | | |
| JK/PROC/ Electronic/C/2018 | LED TVs | 32" LED TV | 05 | 5,000 | 1,000 |
| | | 40" LED TV | 05 | | |
| | | 55" Smart TV | 02 | | |
| JK/PROC/ Electronic/D/2018 | Electronic Equipment-II | 10 inch Touch Screen Feedback Terminal | 10 | 15,000 | 1,000 |
| | | Barcode Reader | 5 | | |
| | | Conference Cam | 15 | | |
| | | Barcode Printer | 5 | | |
| | | Direct thermal printing via thermal head Lable Printer | 5 | | |
| JK/PROC/ Electronic/E/2018 | Electronic Equipment-III | Laser Distanee Meter Measurer 100M/328ft | 20 | 5,000 | 1,000 |
| | | Digital Vernier instruments | 02 | | |
| JK/PROC/ Electronic/F/2018 | Computer and IT accessories | Cables | 270 | 5,000 | 1,000 |
| | | Cat 6 cable | 5 | | |
| | | Antivirus | 120 | | |
| | | 24 port cat6 Switch | 10 | | |
| | | 16 port cat6 Switch | 10 | | |
| | | 8 port cat6 Switch | 10 | | |
| | | 300N USB Wi-Fi Adapter | 10 | | |
| | | Wide Range USB 600Mpbs Wi-Fi Adapter | 10 | | |
| | | 300Mbps Universal Wi-Fi Range Extender | 10 | | |
| | | AC750 Wi-Fi Range Extender | 10 | | |
| | | 1x10 CD DVD Duplicator Specification | 1 | | |
| | | Hard Disks | 55 | | |
| | | DVD writers | 30 | | |
| | | 3.0 USB Pen Drive | 100 | | |
| | | RAMs | 110 | | |
| | | LED Monitor 18.5 inch | 05 | | |
| | | Full HD LED Touch Monitor 22 inch | 05 | | |
| | | UPS (650VA) | 15 | | |
| | | UPS (1.2 KVA) | 15 | | |
| JK/PROC/ Electronic/G/2018 | Computers and Tab | Desktop Computer DoulCore | 20 | 50,000 | 2,000 |
| | | Desktop Computer i3 | 20 | | |
| | | Desktop Computer i5 | 20 | | |
| | | Desktop Computer i7 | 10 | | |
| | | Laptop Computer i3 | 10 | | |
| | | Laptop Computer i5 | 10 | | |
| | | Laptop Computer i7 | 05 | | |
| | | All in One Computer i3 | 05 | | |
| | | 7.0 Tab | 16 | | |
| JK/PROC/ Electronic/H/2018 | Photocopier | Photocopier | 10 | 50,000 | 2,000 |
| | | Photocopier with RADF | 10 | | |
| | | Photocopier (Heavy Duty) | 05 | | |
| JK/PROC/ Electronic/I/2018 | Printers and Fax machines | Laser Printer (Single Side) | 10 | 15,000 | 1,000 |
| | | Laser Printer (Both Side) | 10 | | |
| | | Laser Printer (Wifi) | 10 | | |
| | | Color Ink Tank Printer | 05 | | |
| | | Laser Fax Machine | 10 | | |

நா.வேதநாயகன், அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

Best Wishes சேவை நலன் பாராட்டு



யாழ். போதனா வைத்தியசாலையில்
28 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராக
கடமையாற்றி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும்
திரு. இராயப்பு பீற்றர்
அவர்களது ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும்
பல்லாண்டு காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம்,
யாழ்ப்பாணம்.

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 10.10.2018 | 2380 | பச்சை |

மீனம்
வெற்றி இலக்கங்கள் 12 26 33 46
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 13,613,224/=
2018.10.12 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3094 திகதி: 2018.10.10 புதன்கிழமை
ஊதா
SATURDAY FORTUNE
05 28 61 67 N 58 45,556,880/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 399
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.10.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,808,530/-
வெற்றி இலக்கங்கள்
19 49 59 61 V

## அரசியல்...

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தொடங்கிய அனுராதபுரம் சிறைச்சலை நோக்கிய நடைபவனி நேற்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பனிக்கன்குளத்தை சென்றடைந்தது. மூன்றாவது நாளாக இன்று காலை வவுனியா நோக்கி பவனி புறப்படும்.

தமது விடுதலையை வலியுறுத்தி உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறும், அரசியல் கைதிகள் எல்லோரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்வதற்கான அரசியல் தீர்மானம் ஒன்றை அரசு எடுக்க வலியுறுத்தியும் இந்த நடைபவனி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் தொடங்கிய பவனி அன்றிரவு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இயக்கச்சியைச் சென்றடைந்தது. அங்கு ஓய்வெடுத்துக்கொண்ட மாணவர்கள் நேற்றுக் காலையில் தமது பயணத்தை மீண்டும் தொடங்கினர்.


கலை 10 மணிக்கு கிளிநொச்சியை வந்தடைந்த பவனியுடன் கரைச்சி பிரதேச சபை தவிசாளரும், உப தவிசாளரும், உறுப்பினர்கள், வர்த்தக சங்க தலைவர்கள் செயளாலர் மற்றும் சமூக ஆர்வலர்கள் இணைந்து கொண்டு போராட்டத்தை வலுப்படுத்தினர். நேற்று மாலையில் நடைபவனி பனிக்கன்குளத்தை வந்தடைந்தது.

வவுனியா நோக்கி இன்று பயணிக்கவுள்ள மாணவர்கள் மாங்குளம் சந்தியில் பொதுமக்களுடன் இணைந்து கவனயீர்ப்பு போராடடத்தில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-8,35)

## மரண அறிவித்தல்கள்

### பர்ணாந்து யேசுரத்தினம்



சென்.ஜேம்ஸ் வீதி, பலாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பர்ணாந்து யேசுரத்தினம் நேற்று (10.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பர்ணாந்து அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மரியானந்தம் (யோகம்மா), நவரத்தினம் (அருணா) ஆகியோரின் அன்புக்கணவரும் பிரான்சிஸ் (வவா), எரிக்யோகரத்தினம் காலஞ்சென்ற புனிதராசா மற்றும் அருள்தாஸ், அருள் கென்றி, ஜெயானந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் மேரிரோஸ்மலர் (வசந்தா), பிரான்ஸ்சிஸ்கா, அன்ரன் ராஜரட்ணம் (அச்சா) ஆகியோரின் அன்பு மாமனும் அகர்ஷின் நீருஜா (இத்தாலி), கனியூட் கில்டா, நீருஜன், ஜெஷான், அனஸ்ரிகா, சினோறா, பிரஷானா ஆகியோரின் அன்புப்பேரனும் சின்னப்பு மரியராணி, செல்வரட்ணம் யேசுராணி, யோசேப் சொர்ணம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்


அன்னாரின் நல்லடக்கம் இன்று (11.10.2018) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வயாவிளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### குழந்தைவேலு விஸ்வேஸ்வரன்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு விஸ்வேஸ்வரன் கடந்த (09.10.2018) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு - பாக்கியம் தம்பதிகளின் அருமை மகனும் திரு. திருமதி கணேசன் தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் சுதர்சன், குகதர்சன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவநீதம் தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்), தேவமனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜூலியானா (அமெரிக்கா), தேஜா கமலேஸ்வரன் (ஆசிரியை - யாழ். இந்துக் கல்லூரி), முரளீதரன் (பொறி யியலாளர் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் கமலேஸ்வரனின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2018) வியாழக்கிழமை "கோகுலம்" சங்கத்தானையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கோகுலம்"
சங்கத்தானை, சாவகச்சேரி.
076 8814599

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி வள்ளிப்பிள்ளை அப்புக்குட்டி



தோற்றம் 1935.03.23 மறைவு 2018.10.10

தவசிகுளம் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை அப்புக்குட்டி நேற்று (10.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சீதேவி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற அப்புக்குட்டியின் அன்புமனைவியும் Dr. வேலாயுதம் (பிரான்ஸ்), மயில்வாகனம், அமிர்தலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புதாயாரும் றஞ்சினி, பரமேஸ்வரி, வசந்தினி, இந்திராணி ஆகியோரின் அன்புமாமியும் நகோமி, நியூட்டன், ரம்மியா, வசிகரன், அகிர்தன், சுஜீவன், அபிராமி, அபிஷாளினி, நிறோஜன், நிசாந்தன், நிதர்சன், நிரூஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக பி.ப.2 மணியளவில் ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


077 5719 803, 077 368 5765,
077 4726 778

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பிஜயா சத்தியசீலன் (ரஞ்சன்)

(Ranjan Travels and Tours உரிமையாளர், யாழ்ப்பாணம் கந்தர்மடம்)



மணல்தறையைப் பிறப்பிடமாகவும், இல. 13, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா சத்தியசீலன் நேற்று (10.10.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - பூமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பூபதி தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியாவின் அன்புக் கணவரும் சஞ்சுதன், மதிசுதன், திவேதிகா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவவதனாவின் அன்புமாமனும் கவின், ஜர்ஷகன், பிரஜயா ஆகியோரின் அன்புப்பேரனும் நிர்மலா காலஞ்சென்ற தனலக்சுமி மற்றும் நவலோஜனா (சுலோ), பத்மலோஜனி, வரதலக்சுமி காலஞ்சென்ற சுகிர்தா மற்றும் ஜெயசீலன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் விவேகானந்தா, சிங்கராசா, இராசதுரை, ஸ்ரீகுகநிமலன், சத்தியசீலன், பாலசுப்பிரமணியம், சிவாஜினி, நாகேஸ்வரி, நாகராசா, சிவசிதம்பரம், சிவனேஸ்வரி, இந்திரன், ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2018) வியாழக்கிழமை மு.ப 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 719 3436, 077 2229357

## வடக்கு...

மாகாணத்துக்கு நிதியை நேரடியாக வழங்க வேண்டும் என்றும், திட்டங்களைத் தாமே தீர்மானிப்போம் என்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் அடம்பிடித்ததைத் தொடர்ந்தே ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்க அரச கருமமொழிகள் அமைச்சினால்வடக்கில்முன்னெடுக்கப்படும் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 7 பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு இந்த அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டது. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு ரூ. 1 மில்லியன், இளவாலை ஹென்றியரசர் பாடசாலைக்கு ரூ. 25 மில்லியன், உரும்பிராய் றோ.க. வித்தியாலத்துக்கு ரூ. 12 மில்லியன், கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்துக்கு ரூ. 35 மில்லியன், முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலத்துக்கு ரூ. 14.5 மில்லியன், முல்லைத்தீவு வள்ளிபுனம் பாடசாலைக்கு ரூ. 10 மில்லியன் என ஒதுக்கப்பட்டிருந்தது.

மேற்படி நிதி ஒதுக்கீட்டுக்குரிய செலவு மதிப்பீட்டு அறிக்கையை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தயாரித்து வழங்கவேண்டும். இந்தக் கோரிக்கை வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு மூன்று மாத காலத்துக்கு முன்னரே அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் செலவு மதிப்பீட்டு அறிக்கை சமர்பிக்கப்படவில்லை. திட்டங்களும் தொடங்கப்படவில்லை.

இந்த ஆண்டு இனி மேற்படி திட்டங்களை முன்னெடுக்க முடியாது என்பதால் அந்த நிதி நேற்றைய தினம் வேறு திட்டங்களுக்கு மாற்றப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்வது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் காரசாரமாக கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

"செலவு மதிப்பீட்டு அறிக்கை தாமதமடைவதற்கு ஆளணிப் பற்றாக்குறை காரணம் என்று இப்போது கூறப்படுகின்றது. போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டத்தில் கல்வி அதிகாரிகள் இப்படி அக்கறை அற்று இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், இந்தத் திட்டங்கள் வேண்டுமென்றே தடுக்கப்பட்டுள்ளமை தெரிகின்றது. உங்கள் முரண்பாட்டால் கல்விச் சமூகத்துக்கு வந்த மிகப் பெரிய திட்டத்தை திரும்பிச் செல்ல அனுமதிக்க முடியாது", என்று மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மனோகணேசன் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை உருவாக்கப்படவேண்டும் என்று போராடியவர்களில் நானும் ஒருவன். இந்த மாகாண சபையின் ஆயுள் காலம் எப்போது முடியும் என்று இப்போது பார்த்துக் கொண்டிருக்கின்றேன். எனது அமைச்சால் 400 மில்லியன் ரூபா வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டது. இந்த வேலைகளை மாவட்டச் செயலர் ஊடாக முன்னெடுப்பதற்கே அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றது. இதனால் நிதி மாகாண சபைக்கு வழங்கப்படவில்லை.

இந்த முரண்பாடு காரணமாக மாகாணசபை அதிகாரிகள் மதிப்பீடுகளைச் சமர்பிக்கவில்லை. இதனால் திட்டங்கள் கைநழுவிச் செல்வதற்கு நான் பொறுப்பாக முடியாது - என்றார். (5,105)

## அரசைக்...

கொழும்பு, ஒக். 11

கூட்டு அரசைக் கவிழ்ப்போம். ஆனால் எப்படிக் கவிழ்ப்போம் என்பதையும் எப்போது கவிழ்ப்போம் என்பதையும் இப்போது வெளிப்படுத்த முடியாது. அதையும் வெளிப்படுத்திவிட்டால் கூட்டு அரசு பதிலடி வழங்கத் தயாராகிவிடும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசைக் கவிழ்ப்பது எவ்வாறு? எப்போது? என்பது தொடர்பில் கலந்துரையாடிக் கொண்டு இருக்கின்றோம். அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் அரசைக் கவிழ்ப்போம். எப்படி அரசைக் கவிழ்ப்போம் என்று கூறமுடியாது. எந்த முறையிலாவது அரசைக் கவிழ்ப்பதே எமது இலக்காகும். எப்படி அரசைக் கவிழ்ப்போம் என்று ஊடகவியலாளர்களாகிய உங்களிடத்தில் கூறி முழு நாட்டுக்கும் தெரியப்படுத்த முடியாதல்லவா? நாம் ஆட்சியைக் கவிழ்க்கும் முறைமையை கூறிவிட்டால் அதற்கு பதிலடி வழங்குவதற்கு ஆட்சியாளர்கள் தயராகிவிடுவார்கள் அல்லவா?

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் எத்தனையோ கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளேன். ஆனால் அண்மயில் வெளியான தகவல்களில் பிரகாரம் கலந்துரையாடல்கள் எதுவும் இடம்பெறவில்லை. கலந்துரையாடல் அவசியம் என்றால் அவருடன் எந்த நேரத்திலும் கலந்துரையாடுவதற்கு தயாராகவே உள்ளேன். அரச தலைவர் மைத்திரிபால எனது கட்சியின் பொதுச் செயலராகச் செயற்பட்டவர். அவருடன் கலந்துரையாடுவதற்கு எனக்கு எவ்விதமான சங்கடமும் இல்லை. நான் ரணிலுடன் கூடக் கலந்துரையாடுகின்றேன். அதனை ஏன் யாரும் கேட்பதில்லை.

பொதுமக்கள் தொழிலாளர் தினத்துக்கு பெருமளவில் வந்து அரசைக் கவிழ்க்குமாறே கோரிக்கை விடுத்தனர். அனைத்து இடங்களிலும் மக்கள் இவ்வாறு தான் கோருகின்றனர். நாங்கள் பொசன் தினத்துக்குள் அரசைக் கவிழ்ப்பதாகக் கூறினோம். தற்போது என்னிடத்தில் எத்தனை பொசன் தினங்கள் கடந்து விட்டன என்று நீங்களே கேள்வி எழுப்புகின்றீர்கள். முதலில் அரசைக் கவிழ்ப்பதே எமது அடிப்படையாக இருக்கின்றது. குறைந்த பட்சம் அடுத்த பொசன் தினத்துக்கு முன்னதாக அரசைக் கவிழ்ப்பதை இலக்காகக் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒன்றிணைக்க முடியும் என்றால் நிச்சயமாக அவர்களையும் ஒன்றிணைப்போம். இது சம்பந்தமாக மைத்திரியுடன் இன்னமும் கலந்துரையாடவில்லை - என்றார். (5,31)

## வடக்கு மாகாண...

விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று ஆரம்பமாகியது.

வவுனியா மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் சகிலா பாணுவின் தலைமையில் நடைபெற்றுவரும் நிகழ்வில் முதன்மை அதிதியாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, ஜெயதிலக, மாவட்டச் செயலர் எம்.கனீபா, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், வடமாகாண விவசாய பணிப்பாளர், வவுனியா வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன், கமநல ஆணையாளர் விஜயகுமார், மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொலிஸார் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்ததாவது,

இன்றைய சூழலில் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து விவசாயிகள் செயற்படுவது மிகவும் குறைவானதாகவே இருக்கிறது. விவசாய உற்பத்தி மற்றும் சந்தை வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ள நிலையிலும் அவற்றிற்குப் பல தீர்வுகளை எட்டியிருக்கிறோம். எமக்கு ஆளணிப் பற்றாகுறை முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அதனைச் சீர்செய்யும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றோம்.

கொழும்பு அரசால் ஒதுக்கப்படும் குறித்தொதுக்கப்பட்ட நிதியை செலவு செய்வதில் பல சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. அவர்களால் ஒதுக்கப்பட்ட பணியை மட்டுமே செய்யவேண்டிய நிலை இருக்கிறது. உண்மையில் தெற்கிலே உள்ள காலநிலை வேறு. வடக்கிலே உள்ள காலநிலை வேறு. எமக்கான ஒரு விவசாயக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்குப் பல முயற்சிகளை எடுத்திருந்த நிலையில் அது தற்போது இறுதிநிலையை அடைந்திருக்கிறது.

மாகாணசபை நிறைவடையும் காலம் நெருங்கிவருகிறது. வடக்கைப் பொறுத்தவரை முதலாவது மாகாண சபையாக இருக்கிறது. பல வேலைகளை மேற்கொள்வதில் குறைபாடுகள் இருந்திருக்கலாம். உண்மையில் ஆளணிப் பற்றாகுறை, கொடுப்பனவுகள் குறைவாக இருந்தபோதும் எமது திணைக்கள அதிகாரிகள் மிகவும்சிறப்பான முறையில் தமது வேலைகளை மேற்கொண்டனர்.

கொழும்பு அரசுக்கும், எமக்கும் இருக்கின்ற முரண்பாடுகள் காரணமாகவும் கடந்த 3 ஆண்டுகளாக நீடிக்கும் கடுமையான வறட்சியினாலும் சில வேலைகளை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது. விவசாயிகளுடைய பொற்காலம் என்று கூறப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சி கூட நீடிக்காமல் இருந்ததற்கு அந்தக் காலத்தில் ஏற்பட்ட வறட்சியைக் கூறலாம். மாகாணசபை காலம் நிறைவடைந்தாலும் விவசாயத் திணைக்களம் தொடர்ந்து தனது பணிகளை திறம்படச் செயற்படுத்தும் என நம்புகின்றேன் - என்றார்.

விருந்தினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் விவசாயக் கண்காட்சியைப் பார்வையிட்டிருந்தனர். சேதன விவசாய உற்பத்திப் பொருள்களும் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. கண்காட்சி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை நடைபெறுகின்றது. இன்றைய தினமும் கண்காட்சி இடம்பெறும். (5,110)

## காணி...

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலர்கள், முப்படைத் தளபதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போதும் 4 ஆயிரத்து 265 ஏக்கர் காணி படையினர் வசமுள்ளது. இவற்றில் பாடசாலைகள் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் காணிகளும், தனியார் காணிகளும் உள்ளடக்கம். இந்தக் காணிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் ஆராய்ந்து, வடக்கு கிழக்கு அரச தலைவர் செயலணிக்கு அறிக்கை சமர்பிக்குமாறு கூறப்பட்டுள்ளது. இதற்கு அமைவாகவே மேற்படி கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வடகிழக்கு அரச தலைவர் அபிவிருத்திச் செயலணியின் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5,105)

## இழப்பீடுகளுக்கான...

ளது. மகிந்த அணியின் கடும் எதிர்ப்பையும் மீறிச் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. சட்டத்துக்கு ஆதரவாக 59 வாக்குகளும், எதிராக 43 வாக்குகளும் கிடைத்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சட்டத்தை ஆதரித்து வாக்களித்திருந்தது.

இழப்பீடுகளுக்கான பணியகத்தை நிறுவும் சட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த விவாதத்தில், அயலுறவுத்துறை அமைச்சர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர், இந்தப் பணியகத்தை நிறுவுவதில் பன்னாட்டுத் தலையீடோ அழுத்தமோ இருக்கவில்லை. அரசு சுயவிருப்பிலேயே மக்களுக்கு இழப்பீடு வழங்கவுள்ளது. வடக்கு கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டவர்களைப் போன்று, தெற்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இழப்பீடு கிடைக்கும் என்று குறிப்பிட்டனர்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல, தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு இழப்பீடு வழங்கி விடுதலைப் புலிகளின் நலன்களை மாத்திரம் கருத்தில் கொள்ளவே அரசு முயற்சிக்கின்றது. இழப்பீடுகளுக்கான பணியகத்தை நிறுவும் சட்டத்தை ஆதரிப்பது புலிகளை ஆதரிப்பதாக அமையும். உலகில் எந்த நாட்டிலும் பயங்கரவதிகளுக்கு இழப்பீடு வழங்குவது இல்லை. பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கே இழப்பீடு வழங்கவேண்டும் - என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்ததாவது, போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு முழுமையாக இழப்பீடு வழங்கப்படும். வடக்கு கிழக்கில் மக்களுக்கு மிகவும் இலகுவாக இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ள அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அரசின் இனவாதமே அழிவுகளுக்கு காரணம். அரசு உடனடியாக உதவி வழங்க வேண்டும்.

வடக்கில் விரட்டியடிக்கப்பட்ட சிங்கள மக்களைத் தமிழர்கள் பாதுகாத்து அனுப்பிய சம்பவங்களும் பல உள்ளன. தெற்கிலும் அவ்வாறே பல சம்பவங்களும் உள்ளன. இனவாதத்தைச் சட்டத்தின் மூலமாக தீர்க்க முடியாது.

நீதிமன்றம் மூலமாகத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. வடக்கில் நடப்பவை குறித்துச் சிங்களப் பத்திரிகை இனவாதத்தை தூண்டுவதும் சிங்கள செய்திகளை தமிழ் பத்திரிகைகளில் இனவாதமாக சித்தரிப்பதும் மிகவும் கேவலமான ஊடக கலாசாரமாகும். தீர்வுகளை குழப்பும் முதல் காரணி இங்கேயே உள்ளது. வடக்கிலும், கிழக்கிலும் தெற்கிலும் இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வடக்கில் சிங்கள முஸ்லிம் மக்களுக்கு சம உரிமை உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியதை நன் கேட்டுள்ளேன்.

மீண்டும் இதனை உறுதிபடுத்துங்கள். வடக்கில் அனைவருக்கும் சம உரிமை உள்ளது என்பதை மீண்டு சம்பந்தன் கூற வேண்டும். அதுவே சிங்கள இனவாதிகளின் முகங்களில் சேறு பூசும் வகையில் அமையும் - என்றார். (5,61)

## அரசியல்...

நாம் தொடர்ந்தும் பேசுவோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து எதிர்வரும் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புத் தீர்மான வரைவைக் கொண்டு வரவுள்ளன. இதன் மீதான விவாதத்துக்கு சுமார் 2 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தலைமை அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்து தலைமை அமைச்சர் தெரிவித்ததாவது, 2001ஆம் ஆண்டு காலப் பகுதியில் சில சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் பாரதூரமானதாக இல்லாத காரணத்தினால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அதற்கு பின்னைய ஆட்சியிலும் விடுதலைப் புலிகள் பலர் விடுதலை செய்யப்பட்டனர். எமது ஆட்சியிலும் 2015 ஆம் ஆண்டுக்கும் பின்னர் நாம் சிலரை விடுவித்துள்ளோம். இப்போதும் சிறையில் உள்ள அரசியல் கைதிகள் குறித்த குற்றங்கள் நிருபிக்கப்பட்டுள்ளன. அவர்களை விடுதலை செய்வது குறித்து நீதியமைச்சருடன் பேசுவதே சிறந்தது. இந்த விடயம் தொடர்பாக நாம் தொடர்ந்தும் பேசுவோம் - என்றார். (5,61)

## நள்ளிரவில்...

இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக அரசு அறிவித்தது. அதன்படி ஒரு லீற்றர் 92 ஒக்டேன் பெற்றோலின் விலை 6 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 155 ரூபா ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல 95 ஒக்டேன் பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றுக்கு 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 169 ரூபாவாக்கப்பட்டுள்ளது. சுப்பர் டீசலின் விலை லீற்றருக்கு 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 141 ரூபாயாக்கப்பட்டுள்ளது.

மண்எண்ணெய் மற்றும் சாதாரண டீசலின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் எரிபொருள்களின் விலையை இந்த அரசு அதிகரிப்பது இது இரண்டாவது தடவை. இந்த அரசு பதவிக்கு வந்தது முதல் பல தடவைகள் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (உ-8)



# இளந்தென்றல் அணி கிண்ணம் வென்றது!

யாழ்ப்பாணம், ஒக். 11
கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட அரச தலைவர் தங்கக் கிண்ணத்துக்கான 22 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் இளந்தென்றல் அணி கிண்ணம் வென்றது. கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பளை இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23,422)

## சென்றலைட்ஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 11
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
88:67 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## சமநிலை!

யாழ்ப்பாணம், ஒக். 11
ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்தது.
வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம-23,422)

## மனோகரா அணி போராடி வெற்றி

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 11

**ஆதிசக்தியின் கால்ப்பந்தாட்டம்**

ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்ப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸியின் கூடைப்பந்தாட்டம்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)






## நவஜீவன்ஸ் அசத்தலாட்டம்.

யாழ்ப்பாணம், ஒக். 11
ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
வல்வெட்டித்துறை சிதரம்பராக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விள்ையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இறுதியில் செந்தமிழ்

யாழ்ப்பாணம், ஒக். 11
விளைபூமி விளையாட்டுக் கழகம் நடத்தும் நெல்மணிகள் வெற்றிக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
விளைபூமி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் செல்சிற்றி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி. (ம-23)



## ஜோகோவிக் அசத்தலாட்டம்

சீனத்து ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஷங்காய் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒன்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் சேர்பிய வீரர் நொவக் ஜோகோவிக்.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 41ஆம் இடத்தில் உள்ளவரான ஜெமி வர்டி மோதினார்.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:3, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றார் ஜோகோவிக்.
இந்த ஆட்டம் வெறும் ஒரு மணித்தியாலம் 23 நிமிடங்க்ள் மட்டுமே நீடித்தது. (ம)

## 19 தடவைகள் சூதாடிய ஹொங்கொங் வீரர்கள்



ஹொகொங்கின் இர்பான் அகமட், நதீம் அகமட், ஹசீப் அம்ஜத் ஆகியோர் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் ஆட்ட நிர்ணய சூதாட்டத் தடுப்பு விதிகளை 19 முறை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் அவர்களுக்குப் பன்னாட்டுக் கிரிக்கெட் சபை இடைக்காலத் தடை விதித்தது.
3 வீரர்களும் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தகுதிச்சுற்று ஆட்டங்களில் சூதாட்ட முறைப்பாட்டில் சிக்கியுள்ளனர். சகோதரர்களான இர்பான் மற்றும் நதீம் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ரி20 உலகக்கிண்ணத் தொடரிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்டங்களில் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
கடந்த 8ஆம் திகதியில் இருந்து அடுத்த 14 நாள்களுக்கு இந்த வீரர்கள் மூவரும் தம்மீதான குற்றச்சாட்டுக்கு உரிய பதிலை வழங்க வேண்டும் என்று அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.
28 வயதான இர்பான் தொடக்க வீரரும் வேகப் பந்து வீச்சாளருமாவார்.
இவர் முன்னதாக பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் சூதாட்ட விதிமுறைகளை மீறியதற்காக இரண்டரை ஆண்டுகள் தடை செய்யப்பட்டார்.
இந்த மூன்று வீரர்களும் ஒட்டுமொத்தமாக 19 தடவைகள் சூதாட்டத்தில் அல்லது அது சார்ந்த விவகாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது. (ம)

### தங்கப்பந்து விருதுக்கான பத்து வீரர்கள் பட்டியலில்

# மெஸ்ஸிக்கு இடமில்லை!

### முதல் வீரராக ரொனால்டோ



பன்னாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கும் வீரருக்குஆண்டுதோறும்வழங்கப்படும்தங்கப் பந்து விருதுக்கான இந்த ஆண்டுப் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. பார்சிலோனா அணியின் தலைவர் மெஸ்ஸி பட்டியலில் இடம்பெறவில்லை.
பிரான்ஸ்கால்பந்துசம்மேளனத்தின்சார்பில் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. ரொனால்டோ, மெஸ்ஸி இருவரும் தலா ஐந்துதடவைகள்இந்தவிருதைவென்றுள்ளனர். ஆறாவது தடவையாக விருதை வெல்வது யார் என்பது தொடர்பிலான பேச்சுக்கள் கடந்தஒருவருடகாலமாகஇடம்பெற்றுவரும் நிலையில் பட்டியலில் இருந்து தூக்கி எறியப் பட்டுள்ளார்மெஸ்ஸி.
ரொனால்டோ (யுவென்டாஸ்), சேர்ஜியோஅக்யூரோ(மன்செஸ்டர் சிற்றி), அலிசன் பெக்கர் (லிவர்பூல்),பேல்(ரியல்மட்ரிட்), பென்சிமா(ரியல்மட்ரிட்),கவானி (பரிஸ் செயின்ட் ஜேர்மன்), டிபாயட் (ரியல் மட்ரிட்), கெவின் டி புரூனே (மன்செஸ்டர் சிற்றி), ரொபேர்டோ(லிவர்பூல்),டியாகோ (தெ:லெட்ரிகோ மட்ரிட்) ஆகியோரே பத்து வீரர்கள் கொண்ட பட்டியலில்இடம்பெற்றுள்ளனர்.
பன்னாட்டுக் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் விருதை வென்றவரான குரோசிய அணித்தலைவர் மோட்ரிச், பிரான்ஸ்வீரர்களானமப்பே, கிரீஸ்மன்மற்றும்ஸ்பெய்னின் வீரர்களான ராமோஸ், இஸ்கோ, எகிப்து அணியின் வீரர் சாலா மற்றும் முன்னணி வீரர்களானநெய்மர், சுவாரஸ்ஆகியோரும் பட்டியலில்இருந்துநீக்கப்பட்டுள்ளமைஅதிர்வலைகளைஏற்படுத்தியுள்ளது.
பட்டியலில் உள்ள ஏனைய ஒன்பது வீரர்களைவிடவும்ரொனால்டோவின்பெறுபேறுகள் உச்சபட்சமாக இருப்பதால் அவர் ஆறாவது முறையாக இந்த விருதைத் தனதாக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)



## போராடி வென்றார் மரின் சிலிச்



சீனத்து ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஷங்காய் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒன்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் மரின் சிலிச்.
ஷங்காய் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஆறாவது இடத்தில் உள்ளவரான குரோசிய வீரர் மரின் சிலிச்சை எதிர்த்து சிலி நாட்டைச் சேர்ந்த வீரர் நிகோலஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 2:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் சிலிச். எனினும் அவர் அடுத்த இரண்டு செற்களிலும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தி அந்த செற்களை முறையே 7:6, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)

## வென்றது கலைமதி

யாழ்ப்பாணம், ஒக். 11
நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:2 என்ற கோல் கணக்கில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## பார்சிலோனாவைப் பின்தள்ளியது செவில்யா அணி



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் லா லிகா தொடரில் முதலிடத்தில் இருந்துவந்த பார்சிலோனாவைப் பின்தள்ளியது செவில்லா.
லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா - வலென்சியா அணிகள் மோதின். இந்த ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் வலென்சியா வீரர் கரெய் கோலைப் பதிவுசெய்தார். 23ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி பதிலடி கொடுத்தார். முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தமையால் ஆட்டம் சமநிலையானது. இந்தச் சமநிலைஸ்ய அடுத்து பார்சிலோனா புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட முதலிடம் பிடித்தது செவில்லா. (ம)

# ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் டெஸ்ட்டில் இரண்டு அணிகளும் சமமான பலத்துடன்



ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய நான்காம் நாள் நிலவரத்தின்படி இரண்டு அணிகளும் சமமான பலத்துடன் உள்ளன. ஆட்டத்தின் இறுதிநாளான இன்று பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு 7 இலக்குகளும், ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு 326 ஓட்டங்களும் தேவை என்ற நிலை உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி முதலாவது இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 482 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஹபீஸ் 126 ஓட்டங்களையும், ஹரீஸ் சொகைல் 110 ஓட்டங்களையும், சபிக் 80 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் சிடில் 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும் அதிகபட்சமாகக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 202 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கவாயா 85 ஓட்டங்களையும், பின்ஞ் 62 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் பிலால் அசிப் 6 இலக்குகளையும், அப்பாஸ் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 6 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக இமாம் உல் ஹக் 48 ஓட்டங்களையும், அசாட் சபிக் 41 ஓட்டங்களையும், ஹரிஸ் சொகைல் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கோலன்ட் 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றைய நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கவாயா 50 ஓட்டங்களுடனும், ஹெட் 34 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

தொடரில் இரண்டு ஆட்டம் என்பதால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரை இழக்க வேண்டிய நிலையைத் தவிர்த்துக் கொள்ளும். இதனால் இரண்டு அணிகளும் இன்று விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தும் என்று கருதப்படுகிறது. (ம)



## அறிமுக ஆட்டத்தில் அசத்தினார் பிலால்!

ஆஸ்திரேலியாவுக்கு எதிராகத் தற்போது நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்சில் ஆறு இலக்குகளைக் கைப்பற்றி வியக்க வைத்தார் பாகிஸ்தான் அணியின் சார்பாக அறிமுகமான வீரரான பிலால். 21.3 பந்துப்பரிமாற்றங்களை வீசிய பிலால் 7 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களை வீசினார். 36 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 இலக்குகளைச் சாய்த்தார். பாகிஸ்தானின் முன்னாள் வீரர்களான சகிட் மற்றும் நசீர் ஆகியோர் தமது அறிமுக ஆட்டத்தில் 7 இலக்குகளைச் சாய்த்திருந்தனர். அவர்களுக்கு அடுத்தபடியாக தன்னைப் பதிவுசெய்தார் பிலால். (ம)

## றொனால்டோவை மாற்ற முடியாது யுவென்டாஸ் அழுத்தம் திருத்தம்!




றியல் மட்ரிட்டில் இருந்து அண்மையில் யுவென்டாஸுக்காக ஒப்பந்தமானார் றொனால்டோ. அவரை யுவென்டாஸில் இருந்து ஒப்பந்தம் செய்ய ஏகப்பட்ட கழகங்கள் போட்டிபோடுகின்றன என்ற செய்திகள் அண்மையில் வெளிவந்தன. இதையடுத்தே யுவென்டாஸ் நிர்வாகம் இவ்வாறு கருத்துத் தெரிவித்தது.

"எக்காரணத்தைக் கொண்டும் றொனால்டோவை விட்டுத்தர மாட்டோம். எங்கள் அணியில் இணைய ஆரம்பம் முதலே அவர் ஆர்வம் காண்பித்தார். இது சாதகமாக அமைந்தது. ஆக, றொனால்டோவை மாற்றுவது என்பது எளிதான காரியம் அல்ல" என யுவென்டாஸ் நிர்வாகம் மேலும் குறிப்பிட்டது.

எந்தக் காரணத்துக்காகவும் றொனால்டோவை எந்த அணிக்கும் விட்டுக்கொடுக்க முடியாது என்று யுவென்டாஸ் கழகம் அழுத்தம் திருத்தமாக அறிவித்தது. (ம)


அமெரிக்க லொத்தர் இலவச விசா

உடனடியாக பதிவு செய்யுங்கள்

அமெரிக்க இலவச விசா வாய்ப்பு பெற விரையுங்கள் - இந்த வருடமே இறுதி வருடம்

0768226243

V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

வீடு விற்பனைக்கு

மன்னார் தாழ்வுபாடு வீதியில் அமைந்துள்ள (Hotel Ahash இற்கு அருகில்) புதிதாக கட்டப்பட்ட ஆடம்பர வீடு விற்பனைக்கு உண்டு. 077 077 1271, 077 129 0485, mayooran83@gmail.com

கார் தேவை

பழுதடைந்த பாவிக்கமுடியாத NISSAN 300-, 19-, 18- கார் புத்தகத்துடன் தேவை.

தொடர்பு - 077 312 6807


## கே.ஸி.ஸி.ஸி. இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 11

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 74:39 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.